S. 43

உ

குமரன்றுணை.

தேவ ரிஷி முனி சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்திய வாத யோக

# ஞானசாஸ்திரத்திரட்டு

ஐந்தாம்பாகப் புஸ்தகம்.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப் பெற்று:

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

*Registered Copy Right.*

44

உ

கடவுள் துணை.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புஸ்தக வியாபாரிகளுக்கும், இன்னும் மற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த யோக ஞான சாஸ்திரத் திரட்டு என்னு மிப் புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிற சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற ஒவ்வொரு காரன்களிடத்திலும் ஓலை ஏட்டுப் பிரதிகளைச் சகல சுதந்தரத்துடன் பெற்று, என் முதாதைகள் கையாண்டுவந்த ஓலையேட்டுச் சாஸ்திரங்களையுஞ் சேர்த்து, இந்நூலுக்குப் போதுமான திரவியத்தைச் செலவு செய்து என்னால் (கெவர்ண்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்தர்செய்திருப்பதால் இச்சாஸ்திரங்களைப் பிறர்எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொண்டேன்.

இப்படிக்கு,

☞ இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.

உ

கடவுள் துணை.

# முகவுரை.

உலகின்கண் சர்வேஸ்வரனால் உற்பத்தியாக்கப்பட்ட பலவுயிர்களிலும், சுவேதஜம்-அண்டஜம்-உற்பீஜம்-சராயுஜமாகிய நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளிற் சிரேஷ்டமானது இம்மானிடப்பிறவியேயாம்; இதில் ஜெனிக்கும் சிசுக்கள்-பாலர்-குமாரர்-எவ்வனர்-விருத்தர்களாகிய ஆண் பெண்ணினங்களுக்குரிய சகல சுக துக்கங்களையும், தர்மார்த்த காம மோக்ஷ மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும், எண்ணிலாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்ப ரசங்களையும் எடுத்துக் கூறிய நூல்கள் பலவாயினும், அவற்றினை இனிது விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுள்ள சின்மய சொரூப நிலையைப் பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோக ஞான சாஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளிவிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலை ஏடுகளி லெழுதி, வீடுகளில் காலை மாலை பூஜையில் வைத்துப் பூசித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயமே. அப்படிப்பட்ட அரிய சாஸ்திரங்கள் நமது நண்பர் இ. ராம. குருசாமிக்கோனர் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலை ஏட்டுப் பிரதிகள் பலவாம். அவற்றுட் சிலவற்றையும், கனம் ந. ராம. கணபதியாபிள்ளை யவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமா யிருநத ஓலைச் சுவடிகளையும் ஒருங்கே திரட்டிப் பார்க்கையில், பதினெண் சித்தர்கள் பாடல்களிற் சில இருந்தும் சில இல்லாதிருக்கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக் கருதி "சொல்லும் பொருளுஞ் சுவையுங் கனியும், எல்லும் ஒளியும் இருப்பது போல, என்பாற் பிரியா தெழில் நட் பதனை, அன்பாற் கொண்ட அருமை நண்பர்" இ. ராம. குருசாமிக்கோனரிடம் வெளியிட, அவரு மதற்கிணங்கி பல தேயங்களிற் சென்று சில ஏடுகளைச் சேகரித்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் தெய்வகடாக்ஷத்தால் திருப்பழனியின்கண் வசிக்கும் ஸ்ரீ கைலாச யோகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்கள் தமது ஆச்சிரமத்திற் கையாண்டுவந்த பலசாஸ்

திரங்களடங்கிய ஏட்டுச் சுவடிகளை வரப்பிரசாதத்துடன் கொடுத்து, அச்சிடும்படி உதவி புரிந்தனர்கள்.

எல்லாச் சுவடிகளையும் காயிதத்தில் எடுத்தெழுதிப் பார்க்கையில் அதிற் சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு செய்யுட்களில் இரண்டு வரியும் மூன்றுவரியுமாக இருந்ததுடன், சிலபாக்களில் எதுகை மோனைக ளேதுமில்லா திருந்தன. அவைகளைப் பூர்த்தி செய்யவேண்டி, இப்புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கும் ஒவ்வொரு சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற நமது ஆத்மநண்பர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு பிரதிக்கு நாலு ஓலையேட்டுப் பிரதிகளைப் பெற்று அவற்றுள் வரைந்துள்ள லிகிதப்பிரகாரம், அனேக மகான்களின் உதவியைக்கொண்டு என் சிற்றறிவுக் கெட்டியவாறு சீர்திருத்தஞ் செய்ததுமன்றி, இதற்கு தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய "யோக ஞான சாஸ்திரத் திரட்டு" எனத் திருநாமஞ் சூட்டிப் பன்னிரண்டு பாகங்களாக அச்சிட்டிருக்கின்றனன்.

இச்சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்சிடுவதற்காகப் பொருட் செலவும், தேகப்பிரயாசையும் எடுத்துக்கொண்டு ...ா துணைக்கருவியாயிருந்த மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரியும், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ் சொந்தக்காரருமாகிய நமது நேயர் இ. ராம. குருசாமிக் கோனாரவர்களது நன்றியும், தாலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய ஏனைய நண்பர்களது நன்றியும் யான் என்றும் மறக்கத்தக்கனவன்று.

இவ்விதம் பன்னிரண்டு பாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரிய பெரிய சாஸ்திரங்கள் ஒரு புஸ்தகத்திலிருப்பது மற்றொரு புஸ்தகத்தி லில்லாதிருப்பதால், பன்னிரண்டு வாலியத்தையும் பார்ப்ப தவசியம். ஆகையால் ஒவ்வொருவரும் இதனை வாங்கிக் கையாண்டு வருவீர்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்,

த. குப்புசாமி நாயுடு,

மதுரை.

# ஐந்தாவது புஸ்தகம்.

## தேவ ரிஷி முனி சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# யோகஞான சாஸ்திரத்திரட்டின்

## அட்டவணை.


| தொகைப் | சாஸ்திரங்களின் பெயர். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 26 | சுந்தரானந்தர் | சுத்தஞானம் 51 | ... | 257 |
| 27 | ஷை | சிவயோகஞானம் 32 | ... | 271 |
| 28 | ஷை | அதிசயகாரணம் 36 | ... | 280 |
| 29 | ஷை | வயித்தியம் 5 | ... | 290 |
| 30 | ஷை | சூஸ்திரச் சுருக்கம் 10 | ... | 292 |
| 31 | ஷை | ஞானசூஸ்திரம் 14 | ... | 295 |
| 32 | ஷை | முப்பூ 25 | ... | 299 |
| 33 | ஷை | பூஜாவிதி 37 | ... | 303 |
| 34 | ஷை | வாக்கிய சூஸ்திரம 64 | ... | 313 |
| 35 | கடுவெளிச்சித்தர் | சிவராஜயோகம் 18 | ... | 330 |
| 36 | ஷை | பூரணஞானம் 67 | ... | 335 |
| 37 | ஷை | பாடல் 35 | ... | 340 |
| 38 | சங்கிலிச்சித்தர் | ஞானசூஸ்திரம் 16 | ... | 345 |
| 39 | ஷை | பாடல் 36 | ... | 350 |
| 40 | ஊர்வசி | இரத்தினச்சுருக்கம் 19 | ... | 356 |
| 41 | பதஞ்சலியார் | ஞானம் 54 | ... | 361 |
| 42 | ஷை | சூஸ்திரம் 20 | ... | 380 |
| 43 | வியாக்கிரம பாதர் | ஞானம் 13 | ... | 386 |
| 44 | வியாக்கிரம பாதர் | சூஸ்திரம 16 | ... | 388 |
| 45 | ஷை | சமாதி 8 | ... | 393 |
| 46 | திரிகோணச்சித்தர் | சிவஞானசூஸ்திரம் 52 | ... | 395 |
| 47 | ஷை | பாடல் 92 | ... | 403 |
| 48 | கொங்கணர் | முதற்காண்ட சூஸ்திரம் 41 | ... | 410 |
| 49 | ஷை | நடுக்காண்ட சூஸ்திரம் 50 | ... | 416 |
| 50 | ஷை | கடைக்காண்ட சூஸ்திரம் 60 | ... | 430 |
| 51 | பரத்துவாசமகாரிஷி | யோகசாதனம் 23 | ... | 446 |
| 52 | சங்கரர் | நவக்கிரகசுக்கிஷம் 100 | ... | 452 |
| 53 | வரரிஷி | கலைக்கியானம் 22 | ... | 478 |
| 54 | சமதக்கினிமகாரிஷி | வஸ்துதெரிசனம் 31 | ... | 484 |
| 55 | சச்சிதானந்தர் | சுழிமுனை சூஸ்திரம் 31 | ... | 492 |
| 56 | கடைப்பிள்ளை | மவுனதீட்சை 12 | ... | 500 |
| 57 | ஷை | பஞ்சாட்சரச்சுருக்கம் 32 | ... | 501 |

உ

குருவே துணை.

# தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# யோக ஞான சாஸ்திரத் திரட்டின்

## ஆறும் பாகத்தில் சொல்லியிருக்கிற

# முக்கிய விஷயங்கள்.

ஐயா! இதற்கடுத்த ஆறும் பாகத்தில், இராமதேவர், யாகோபு, யோகசித்தர், வேதாந்தச்சித்தர், பிரமமுனி, சங்கமுனிவர், தன்வந்திரி, சிவானந்தர், திலோர்த்தமை, கோரக்கர், முதலிய அரிய பெரிய சித்தாதிகளால் திருவாய்மலர்ந்தருளிய முப்பத்திரண்டு சாஸ்திரங்களிலடங்கிய விஷயங்களை இதனடியிற் காணலாம். அவையாவன:—

58-வது: இராமதேவர் அஷ்டாங்க யோகம் ஐம்பதில், ஆதிவாலை மனோமணி சித்தியும், அகார உகார மூலமும், நந்திசோதி பிரகாசமும், ஆதிபந்த விபரமும், வேதை குருமுடிக்குங் கருமானங்களும், அஷ்டமாசித்தியும், தயிலம், திலதம் ரசமணி கட்டு முதலிய விபரங்களையும்;

59-வது: இராமதேவர் ஞானத் திறவுகோல் பதினாறில், ரசமணிக்கட்டும்விபரங்களையும், ஞானகற்பமுறைக்குரியவிபரங்களையும்;

60-வது: இராமதேவர் சுத்திமுறை ஐம்பதில், வழலை முப்பூ குருமுடிக்கும் பாகத்தின் விபரங்களையும், சகல சரக்குகளையும் சுத்திசெய்யும் தன்மைகளையும், வேதையின் விபரங்களையும், ஞானகற்ப முறைகளையும், யோகசாதனத்துக்குரிய உண்மைகளையும், சோதி சொரூப தெரிசன விபரங்களையும்;

61-வது: இராமதேவர் முப்பூ சூஸ்திரம் முப்பத்தொன்றில், வேதைமார்க்கத்துக்குரிய குருமுடிக்கும் விபரங்களையும், மனோமணி சித்தியும், முப்பூ விபரங்களையும்;

62-வது: இராமதேவர் பரிபாஷை விளக்கம் இருபத்தேழில், வளர்பிறையில் வாசியோக சித்தியும், வஸ்து சித்தியும், அனுஷ்டான பூசை விதியும், அஷ்டமாசித்தி விபரங்களையும், வேதை விபரங்களையும், அண்டபிண்ட மென்ற விபரங்களையும்;

63-வது: இராமதேவர் வைத்திய சூஸ்திரம் எண்பத்துமூன்றில், கல்சுண்ணம், காரசாரம், துருசுச்சுண்ணம், செயநீர், செந்தூர முறைகள், லகுபாகத்துக் குரிய விபரங்களையும், சஞ்சாரசமாதி விபரங்களையும், வேதையின் விபரங்களையும், ஞானகற்ப முறையும், பூரணலேகியம், நிருவிகற்ப சமாதி விபரங்களையும்;

64-வது: இராமதேவர் ஞானம் ஐந்தில்; சர்வமும் ஒன்றென்றும், சத்திசிவ மிரண்டென்றும், அகண்டவெளி தீபவொளிப் பிரகாச விபரங்களையும்;

65-வது: இராமதேவர் பூஜாவிதிபத்தில், திரிகோணச் சோதிப் பிரகாச மூலங்களையும், யோகசாதன அனுஷ்டானங்களையும், காலப் பிரமாணங்களையும், வளர்பிறையிற் செய்யும் சித்திவிபாரங்களையும்;

66-வது: ராமதேவர் குருசூஸ்திரம், பதினாறில், வேதைக் குரு முடிக்கும் விபரங்களையும், ஜெயநீர் சுண்ணம் செய்பாகவிபரங்களையும்

67-வது: இராமதேவர் தண்டகம் நூத்திப்பத்தில், ரவிமதி சுழி முனை, ஆதியந்தம் அண்டம், பிண்டம், என்ற விபரங்களையும், செய நீரால் அறுபத்து நான்கு சரக்குகட்டும் விபரங்களையும், அறுபத்து நான்கு சித்துக்கள் விபரங்களையும், முப்பூவின் விபரங்களையும், கெவு னமணிக் குளிகை சித்தியும், துருசுச்சுண்ணம, அறுகோணச்சக்கரம், சிவயோகபூசை, ஞானகற்பமுறை, நந்தியுடசெந்தீசித்தி, வாதசித்தி, வயித்தியமுறை முதலிய விபரங்களையும்;

68-வது: யாகோபு வாதசூஸ்திரம், ஐம்பத்தேழில், செயநீர், சுண்ணம், வேதை, செந்தூரம், ஞானகற்பமுறை, தயிலம், உருக்கின ங்கள், காலப்பிரமாணங்கள் குருமுடிக்குங் காலங்களும் கட்டுவகை சரக்கு முதலிய விபரங்களையும்;

69-வது: யோகச்சித்தர் ஞானசூஸ்திரம்பதினேழில், மவுன சிவ யோக ஞானவிபரங்களையும், சுழிமுனை சோதி சொரூப தெரிசனம், மதி அமுதபானமருந்தும் மார்க்கம், ரவிமதிமாறும்விதம், வயித்தியம் கைபாக முதலிய விபரங்களையும்;

70-வது: யோகச்சித்தர் பாடல் நாற்பத்திரண்டில், மனோமணி சித்தியும், இடகலை, பிங்கலை, சுழிமுனை, சோதி, சொரூப தெரிசனம், பஞ்சதேவதை சித்தி மூலமந்திரங்களையும், எங்கும் நிறைந்து நின்ற ஏகபரவஸ்துவின் தெரிசன விபரங்களையும்;

71-வது: வேதாந்தச்சித்தர் ஞான சூஸ்திரம் இருபத்தொன்றில் ரவிமதி சுழிமுனை மேவிநின்று மதியமுதம், முக்கோண வாலையின் சித்தி மூலகணேசன் சித்தி, வாசிசித்தி, நாகரசபற்பம் கைபாகம், செய்பாகம், வயித்திய முதலிய விபரங்களையும்;

72-வது: வேதாந்தச் சித்தர் பாடல் முப்பத்திரண்டில், ஆதியந் தம் சோதிச்சுடரொளி விபரங்களையும், சுத்த பரப்பிரமம் சுத்திதெரி சனவிபரங்களையும், அண்டபிண்டவிபாரங்களையும், பிரபஞ்சபாசங்கள் அசத்தென்றும், பரமெய்ஞ்ஞானவிளக்கம்மெய்யென்றவிபரங்களையும்

73-வது: பிரமமுனி ஞானம் பதிமூன்றில், மதிகலை ஜீரணிக்கா மல் ரவிகலையுடன் சேர்த்து நடுநிலை ஞான விபரங்களையும், மதிப்பா

லமுத மருந்தும் விபரங்களையும், வாசிப்பழக்க சாதன விபரங்களையும் அண்டவுச்சி வெளிஒளி பிரகாச மார்க்க விபரங்களையும்;

74-வது: பிரமமுனி ஞானம் முப்பத்தாறில், பஞ்சபூதங்களஞ் சும் ஒன்றில் ஒன்று லயிக்கவும், ரவிமதி கலை வாசியால் பிராணயாம வரிசையும் ரேசக பூரக கும்பகமும், சக்கரங்களின் விபரங்களையும், பூரணை அமாவாசியின் பூஜாவிதி கிரமங்களையும், அட்சர விபரங்களையும், செயநீர் சுண்ணம் செந்தூர வேதை முறை முதலிய விபரங்களையும்;

75-வது: பிரமமுனி முப்புதீட்சை வெண்பா நாற்பத்தைந்தில், ஆதியந்தம் சோதிபூரணம் ஆதித்தமண்டலம் சந்திரமண்டலம் குண்டலிசத்தி விபரங்களையும், வாசியின் யோக சாதன விபரங்களையும், வேதைக்குச் சவுக்கார வைப்புமுறை தயிலமுறை சுண்ணமுறை முதலிய விபரங்களையும்;

76-வது: சங்கமுனிவர் விஷவயித்திய சூஸ்திரம் பதினாறில், சகல விஷங்களுக்குந் தக்கமருந்து செய்முறைப்பாக விபரங்களையும், சில வயித்தியபாக விபரங்களையும்;

77-வது: சங்கமுனிவர் விஷநூல் சுருக்கம் எட்டில், சகலவிஷங்களுக்கும் மருந்து முறையும், பேதிமருந்துந் தெளிவாய்க் கூறுவதுடன் அதன் விபரங்களையும்;

78-வது: தன்வந்திரி ஞானம் பன்னிரண்டில், காயாதி கற்பமுறை பற்பமும், சிவயோக மார்க்கவழியும், மவுனஅட்சர விபரங்களையும், முத்திமோட்ச சொரூபநிலை சித்தி விபரங்களையும், சிவன் இருப்பிடம் சுடர் இரவி மதிசோதி விபரங்களையும், ரேசக பூரக கும்பகத்தி லமர்ந்து நின்ற விபரங்களையும், சில வைத்திய பாகத்திற்குரிய விபரங்களையும்,

79-வது: தன்வந்திரி ஞானசைதன்யம் இருபத்தொன்றில், சிற்றண்டவெளி சிற்சொரூப சித்தியும், சிவனிருக்கும் பீடமும், ரேசக பூரக கும்பக விபரங்களையும், யுகாந்தகால சாதனை விபரங்களையும், வாசிசித்தியும் மவுன அட்சரமும் வல்லாதி லேகியம் பத்தியபாகம் முதலிய விபரங்களையும்;

80-வது: தன்வந்திரி கலைக்கியானம் முப்பத்திரண்டில், ஞானம் கற்பம் சூரணமுறை விபரங்களையும், பஞ்சபூத வீட்டின் லெட்சணம் அதன் தேவதை சித்தி முதலிய விபரங்களையும், வாசிதாரணைபழக்க விபரங்களையும், அண்ட வெளி ஒளி உச்சியென்ற விபரங்களையும்;

81-வது: தன்வந்திரி ஞானவெண்பா ஆறில், உந்திக்கமலத்தில் உதிக்கும் பிரம்ன் விஷ்ணு முதலிய தேவதை சித்தியும், அதற்குரிய மூலமந்திர சித்தி விபரங்களையும்;

82-வது: தன்வந்திரி முப்பு சூஸ்திரம் நாற்பத்தெட்டில், அண்ட பிண்டம் ஆதியந்தம் அகாரம் உகாரம் ஓகாரமென்ற விபரங்களையும், சிவாத்மா உதித்தவாறும், மதியமுதம் மூலமுதல் ஆறாதார விபரங்களையும், முப்பூ குருமுறை விபரங்களையும், சிவசத்தி ரேசக பூரக கும்பக விபரங்களையும், வேதை கற்பமுறை முதலிய விபரங்களையும்;

83-வது: தன்வந்திரி தண்டகம் நூத்திநாற்பதில், சகல கலைக்கியான சித்தியும், குண்டலி சத்தி தீட்சையும், சுப்பிரமணியர் தீட்சையும், சிவதீட்சை சத்திதீட்சை அஷ்டகர்ம வரிசை சித்தி விபரங்களையும், முப்பு முடிக்கும் பாகமும், வல்லாரை கற்ப விபரங்களையும், வெண்சாரை கருநெல்லி கற்பமுறை அண்டமுப்பு சுண்ணம் மெழுகு செய்கிற விபரங்களையும், வசியம் நவகோணம் தேவிசக்கர முதலிய விபரங்களையும்;

84-வது: சிவானந்தர் வாதசூஸ்திரம் நாற்பதில், முப்பு குரு முடிக்கும் விபரங்களையும், வழலை மார்க்கமும், பரிபாஷை நாமங்களையும், நாகக்கட்டு வேதைமுறைகளையும், பூரணை அமாவாசியிற் பூசிக்கும் முறைகளையும், லோகங்கள் குருமுறைக்குரிய விபரங்களையும்;

85-வது: திலோர்த்தமை ஞானச் சுருக்கம் இருபத்தொன்றில், போகமார்க்க சாதன விபரங்களையும், அட்சர விபரங்களையும், மதியமுத விபரங்களையும், அகர உகர மகர விபரங்களையும், ரவிமதி சுழிமுனை விபரங்களையும். வாசிவசப்படும் மார்க்கங்களையும், பரஞ்சோதி முதலிய விபரங்களையும்;

86-வது: கோரக்கர் பிரமஞான தெரிசனம் பதினேழில், சர்வலோக சிருஷ்டி விபரங்களையும், பஞ்சபூத தேவதையின் பெருந்தொழிலுஞ் சக்கரமும் வாசி சரத்தின் விபரங்களையும், சதுரகிரியில் குகை வாசத்தின் விபரங்களையும்;

87-வது: கோரக்கர் கற்பசூஸ்திரம் முப்பத்தொன்றில், கற்பமுறை வாசிசித்தி பராபரை சித்தி சிவயோக சாதனம் சதாசிவநிலை முதலிய விபரங்களையும்;

88-வது: கோரக்கர் ஜெயநீர் பத்தில், குருசெயநீர் விபரங்களையும், அறுவகைச்சுண்ணம் ஜெயநீர் சுண்ணம் மெழுகு வேதை முதலிய விபரங்களையும்;

89-வது: கோரக்கர் வகார சூஸ்திரம் எண்பதில், வாசியைப் பஞ்சபூத ஸ்தானங்களில் நிறுத்திக் கட்டவும், சுண்ணமுறை செந்தூரமுறை குருமுறை செயநீர் போக்கு வேதமுறை விபரங்களையும் சொல்லப்பெற்றிருக்கிறது.

இப்படிக்கு,

☞ இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.

உ

குருவேதுணை.

இருபத்தாறுவது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# சுத்த ஞானம் ருக.

பூரணமு மாறுதா ரப்புலனும்சூக்ஷம்
பொறியறிந்து சுழியில்நின்ற வையர்பாதம்
காரணமாய்ப் போற்றியேசெய் தசவைநீக்கிக்
கண்ணொளியால் விண்ணொளியைக் காணவேண்டி
வாரணமா முகத்தோன்றன் பாதந்தன்னை
மனதில்வைத்து நிராமயத்தின் பாதம்போற்றி
ஆரணமா மகத்தீசர் பாதம்போற்றி
அன்பாக ஞானந்தா னறைகுவேனே. (1)

அறைகுவேன் நிராமயமே அகண்டவீதி
அதுக்கடுக்கப் பரையினுட வெளிதான்கீழே
நிறைகுவேன் பனிரண்டு முகத்தான்வன்னி
நேராக வதின்கீழே ஜலமுமாச்சு
மறைகுவே னதின்கீழே பூமியாச்சு
மக்களே ஜெனனமெல்லா முதித்தவாறு
வறைகுவே னதின்கீழ்திரோ தாயிநின்று
மயக்கினு லுலகமெல்லா மழிந்துபோச்சே. (2)

அழிந்துதென்ற வீட்டினுட மகிமைசொல்ல
ஆராலும் முடியாது முனிவர்சித்தர்
தெளிந்துகொண்டு மாயத்தை யடித்துத்தள்ளி
சிறுவீட்டைப் பூசைபண்ணித் தினந்தானப்பா
வழிந்தோடும் மதியமுதந் தன்னையுண்டு
வாசியென்ற குதிரையதின் மேலேயேறி
கழிந்தோட வொட்டாம லெட்டிற்சேர்த்துக்
கைமுறையாய்த் தலமாறுங் கண்டார்பாரே. (3)

கண்டபடி காணவென்றால் சொல்லக்கேளு
　　கற்பமுண்டு சுழிமுனையிற் கருத்தைவைத்துத்
தொண்டுசெய்ய நாதவிந்தை மூலத்தூணி
　　துரியத்தைப் பார்க்கிலப்போ சோதிகாணும்
வண்டணிந்த குழலாளை விட்டுப்பார்த்தால்
　　மாயமாம் யுகாந்தவரை சுழிபார்த்தாலும்
அண்டருட சுழிமுனைதான் தோற்றுதப்பா
　　ஆச்சரியங் காணவென்று பானமுண்ணே. (4)

பானமென்றால் தூஷிப்பார் சமயத்தோர்கள்
　　பாவிகள்தான் தெரியாமல் மதங்கள்பூண்டு
ஈனமென்று யெண்ணியெண்ணி யிறந்துபோனார்
　　என்மக்காள் பானமென்று லாயியுடமவுனம்
தானமெல்லாம் தோணுமப்பா க்ஷணத்திலேதான்
　　சங்கற்ப விகற்பமென்ற சட்டைபோகும்
மானமிது உத்துப்பா ஞுன்னைப்பாரு
　　வகையாகக் கைமுறைக்கென் னூலைப்பாரே. (5)

என்னூல்தான் பூசைவிதி முப்பத்தாறில்
　　இயம்பினேன் விழிகுருடர்க் கறியத்தானே
நன்னயமாய்ப் பூசைசெய்து கற்பங்கொண்டால்
　　நலமாக வீராறு தலமுந்தோணும்
முன்னேதான் சரியையொடு கிரியையோகம்
　　முக்கியமா ஞானமொடு நாலுங்கேளு
உன்னேதான் சரியையொடு தேவிதீக்ஷை
　　யுபதேசம் செய்தாக்கால் சரியைதானே (6)

தானென்ற கிரியையென்ன தேவிபூசை
　　தயவாகச் செய்துகற்பங் கொண்டாலையா
வேனென்ற கிரியையென்ற நாமமாச்சு
　　வேதாந்த யோகத்தை விளம்பக்கேளு
ஊனென்ற புருவமையத் தமர்ந்திருந்து
　　ஒளிகண்டால் யோகமென்ற நாமமாச்சு
கானென்ற ஞானமென்ன தலங்களாறும்
　　கண்டாக்கால் ஞானியென்று சொல்லலாமே. (7)

சொல்லவே சரியையிலே நின்றசடம்வீழ்ந்தாற்
சுகமாகக் கிரியையிலே தூக்கும்பின்னும்
அல்லவே கிரியைவிட்டு மனந்தான்வீழ்ந்தால்
ஆச்சரியம் யோகத்தை யடுத்துநிற்கும்
நல்லவே யோகம்விட்டு மனந்தான் வீழ்ந்தால்
நலமான ஞானத்தில் நாட்டிவிக்கும்
கல்லவே கைகண்ட படியேசொன்னேன்
கருத்திதுக்கு யென்னவென்றால் வாமந்தானே. (8)

வாமமென்று லென்னவென்று யெண்ணவேண்டாம்
வகையாக இடப்புறந்தான் மகிழ்ந்துகேளு
ஏமமென்ற காலாகும் வாமம்வாமம்
என்மக்காள் ரெண்டொன்றால் வாமம்வாமம்
தாமமென்ற எட்டொன்றால் வாமம்வாமம்
தயவான நாதவிந்து வாமம்வாமம்
காமமென்றும் வஸ்துவென்றும் வாமம்வாமம்
கைகண்ட படிசொன்னேன் கருதிக்கேளே. (9)

கருதிகேள் சாராய மென்றாற்பானம்
கைமுறையாய்க் கள்ளென்றாற் பானம்பானம்
உறுதிகேள் திருமந்திர மென்றாற்பானம்
ஓகோகோ வெறிநீரும் பானம்பானம்
வருதிகேள் தேவியென்றாற் பானம்பானம்
வகையாகச் சிவமென்றாற் பானம்பானம்
பருதிகேள் லகிரியென்றாற் பானம்பானம்
பாங்காக நீநானும் பானந்தானே. (10)

பானமென்றால் ஆதிவஸ்து அனாதிவஸ்தும்
பாங்கான ரிஷிகளெல்லாம் பானம்பானம்
ஊனமென்றால் தேவதைக ளெல்லாம்பானம்
ஓகோகோ விட்டுணுவும் பானம்பானம்
தானமென்றால் ருத்திரனும் பானம்பானம்
சதாசிவனும் மகேஸ்பரனும் பானம்பானம்
வானமென்றால் பிரமாவுங் கணேசன்கந்தன்
மனதாற்பார் கைகண்ட பானந்தானே. (11)

தானென்ற பானத்தால் ரிஷிகளெல்லாம்
தயவான தலமாறுங் கண்டார்கண்டார்
பானென்ற மகாரமென்றாற் பானமாச்சு
பதினெண்பே ரெல்லாருங் கொண்டபானம்
ஊனென்ற உமையவள்தான் வாமம்வாமம்
ஓகோகோ வேதியனும் கொண்டபானம்
ஏனென்ற உலகத்தில் இருடிசித்த
ரெல்லோருங் கொண்டதிந்தப் பானந்தானே. (12)

தானாகும் சரியையென்றாற் பானம்பானம்
தயவான கிரியையென்றாற் பானம்பானம்
ஊனாகும் யோகமென்றாற் பானம்பானம்
உத்தமனே ஞானமென்றாற் பானம்பானம்
மானாகும் மணியென்றாற் பானம்பானம்
மைந்தனே மந்திரந்தான் பானம்பானம்
தேனாகும் உச்சிதமும் பானம்பானம்
திறமான வொட்டியமும் பானந்தானே. (13)

பானத்தாற் சூனியமும் யேவல்பில்லி
பாங்கான சல்லியமும் பானத்தாலே
ஊனத்தா லொருவரைத்தா னொருவர்பார்த்து
உற்பனமாய்க் கொல்லுவதும் பானத்தாலே
தானத்தாற் கர்மவித்தை யென்றதெல்லாம்
தகத்துமே யகற்றுவதும் பானத்தாலே
கானத்தாற் காயசித்தி பானத்தாலே
கைமுறையாய்ச் சொன்னபடி கருதிப்பாரே. (14)

பாரடா மகாரமென்ற நீருண்டோர்க்குப்
பரிவான கோபமது கனவில்லை
நேரடா பசியில்லை யாசையில்லை
நிச்சயமாய் நிரோதாயின் மாயையில்லை
ஊரடா சாதிவர்ணச் சிரமுமில்லை
ஓகோகோ அறுபதுபேர் பட்டுவீழ்வார்
வேரடா வோமப்பால் விடாமற்கொண்டால்
விதமான முப்பத்தி யாறும்போச்சே. (15)

போச்சடா பொறிகெட்டு அறிவுங்கெட்டு
புகழான மாயைகெட்டு ஆசைகெட்டு
மூச்சடா மனங்கெட்டு நினைவுங்கெட்டு
முன்பின்னு யோடுகிற வாசிகெட்டு
வாச்சடா பிராணயங் கெட்டுத்தானும்
மைந்தனே உடல்கெட்டு வெளியாய்நிற்கும்
வீச்சடா அமுதமுண்டார் பிலத்தினாலே
வெட்டவெளி யாச்சுதிந்த வுடலந்தானே. (16)

தானென்ற முப்பத்தி ரெண்டுதீக்ஷை
தருவான கொங்கணர்தன் கற்பம்நூறில்
வேனென்று பாடிவைத்தார் மூலஞ்சொல்ல
வில்லையடா சொல்லுகிறேன் அறிவாற்பாரு
வானென்ற முப்பதுமால் தானவீடு
வகையாக வதிலிருந்த மகாரமுண்டால்
மானென்ற பெண்மயக்கங் கனவிலில்லை
வகையாகத் தீக்ஷைபெற்றூற் சடலமாச்சே. (17)

ஆச்சப்பா யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
ஆறுமுகந் தனைக்கேட்டு வுனக்காய்சொன்னேன்
ஏச்சப்பா தீக்ஷையென்பார் பாடவில்லை
இகமெல்லாஞ் சித்தாக வெளியாய்ச்சொன்னேன்
வாச்சப்பா மகாரமென்று லென்னசொல்லும்
மைந்தனே யாவதிலே ரெண்டைசேர்த்தால்
வீச்சப்பா மவுனமது மகாரபீடம்
வேதாந்தப் பேச்சைவெளி விட்டேன்பாரே. (18)

பாருநீ அஷ்டாங்க முறைக்கக்கேளு
பண்பான யேமமு- ன் நேமத்தோடு
நேருநீ யாசனமும் பிராணயந்தான்
நிலையான பிரத்தியா காரத்தோடு
காருநீ தாரணையுந் தியானத்தோடு
கருவான சமாதியோ டெட்டுஅங்கம்
மாருநீ சித்தரெல்லாம் மறைத்துச்சொன்னார்
வழுத்துகிறேன் வெட்டவெளி, யாகத்தானே. (19)

தானெனு மியமம்பத்து நியமம்பத்து
சார்ந்துபா ரிருபத்தும் ரெண்டேயாச்சு
வேனென்ற பத்தென்ன சொல்லுமையா
வேதாந்த ஆறுமுக மூர்த்திபிள்ளாய்
நானன்ருய்ச் சொல்லுகிறேன் மக்காள்கேளு
நவிலாதே யாவருக்கும் மூலமப்பா
மானென்ற விஷ்ணுவுட னீரையுண்டால்
மைந்தஇய மம்பத்து நியமம்பத்தே. (20)

பத்தென்று சொன்னீர்சுந் தரமேஅய்யா
பரிவான கயிலாச மூர்த்திபிள்ளாய்
பத்தென்ற பத்தென்ருல் யென்னசொல்லும்
பரங்குருவே வெளியாக யாவருக்கும்
ஒத்தென்ற புருவமையஞ் சதாசிவத்தில்
ஓகோகோ அதிலிருந்த வகாரம்பத்தும்
சித்தென்ற பிறைவீட்டிற் பிரகாசந்தான்
சிறந்துசுத்தி நின்றெழுத்தைச் சேர்த்தாற்பத்தே. (21)

சேர்த்துநீ பார்த்தாக்கா லியமம்மால்தான்
சிறப்பான நியமமது புருவமையம்
காத்துநீ பார்த்தாக்கால் அகாரம்பத்து
கருவென்ன இதிலுமா வதிலுமாத்தான்
பார்த்துநீ மாவென்ன புருவமையம்
பண்பான இடக்கண்ணி லுகாரமாச்சு
ஏத்துநீ வலக்கண்ணில் அகாரமாச்சு
என்மக்காள் புருவநடு மகாரமாச்சே. (22)

ஆச்சப்பா யிதுவேசதா சிவத்தின்வீடு
அறிந்துகொள் பிறைவீட்டின் மகிமைகேளு
ஏச்சப்பா லோகருக்கு மகாரமென்ருல்
இருந்துதந்த வீட்டிலுந்தான் மகாரமாகும்
பேச்சப்பா இனியேது ரெண்டுமொன்று
பேசாதே இக்கருவைப் பெரியோர் சொல்லார்
வாச்சப்பா மகாரமுண்டால் ரெண்டுமாச்சு
வகையான வஸ்துவென்று அறிந்துகொள்ளே. (23)

அறிந்தபின்பு ஆசனந்தான் சொல்லக்கேளு
ஆச்சரியம் சுகாசனமா யிருந்துகொண்டு
பிறிந்துநின்ற பிராணாயம் பண்ணுபண்ணு
பேசாதே பலதிரட்டில் வெளியாய்ச்சொன்னேன்
கறிந்துநின்ற பிரத்தியா காரமென்ன
கனிந்துநின்ற பிரத்தியென்று லுகாரந்தன்னில்
அறிந்துநின்ற மகாரத்தை வாங்கியுண்டால்
ஆச்சரியம் பிரத்தியா காரமாச்சே. (24)

ஆச்சப்பா தாரணையைச் சொல்லக்கேளு
ஆச்சரியம் இருக்கையிலும் நடக்கும்போதும்
வாச்சப்பா யோகத்தைத் தீர்த்தாயானால்
வகையான தாரணைதா னென்றநாமம்
பேச்சப்பா தியானத்தைச் சொல்லக்கேளு
பேரான சத்திசிவ மிரண்டையுந்தான்
கூச்சப்பா மூலத்தி லாணிக்கொண்டு
கூசாமற் புருவமையந் தன்னில்நோக்கே. (25)

நோக்குவது நினைவையெல்லா மங்கேவைத்து
நுண்மையாய்த் தாயையங்கே பூசைபண்ணி
ஆக்குவது மவுனத்தால் மவுனம்வாங்கி
ஆச்சரியங் கொண்டுவிடுந் தியானமாச்சு
தாக்குவது சமாதியஞ்சும் சொல்லக்கேளு
சார்வான மூலமுத லாறுங்கண்டால்
நாக்குவது சமாதியஞ்சும் சித்தியாச்சு
நலமாகச் சொன்னபடி யறிந்துகொள்ளே, (26)

அறிந்திந்த அஷ்டாங்க மெட்டும்பார்த்து
ஆவதற்கு வகையென்ன பானமுண்டால்
நெறிந்துநின்ற அஷ்டாங்க மெட்டுமாச்சு
நினவாய்ப்பா ரிக்கருவை யாருஞ்சொல்லார்
கறிந்துநின்ற சட்டைமுனி யுபதேசத்தாற்
கைகண்ட படிசொன்னோங் களவில்லாமல்
அறிந்துநின்ற சட்டைமுனி யாரென்றக்கால்
ஆறுமுக மென்றுரைத்த அறிவுதானே. (27)

தானென்ற ஆறுமுக மென்னசொல்லும்
தயவுவைத்தென் குருவேசுந் தாமேஅய்யா
வேனென்ற மாணக்கா சொல்லக்கேளு
விளம்பாதே யிக்கருவை யாவருக்கும்
ஊனென்ற குத்ததிலே வட்டமாகி
உள்ளேதா னைங்கோணந் திரிகோணத்துள்
வானென்ற ஓம்கண பதிதான்நின்றார்
வழுவில்லை மூலாதா ரத்திற்றானே. (28)

தானேதா னதின்மேலே பிர்மலோகம்
தப்பாது நாற்கோண முள்ளைங்கோணம்
வேனேதா னிதனுள்ளே வட்டமொன்று
விதமான இதனுள்முக் கோணமப்பா
நானேதா னிதனுள்ளே நங்கென்றாணி
நலமான நங்குநடு பிரமன்நின்றார்
மானேதா னிதன்மேலே விஷ்ணுலோகம்
வகையாக விளம்பிறையாங் கோணந்தானே. (29)

தானென்ற திதன்நடுவி லைங்கோணந்தான்
தயவாக விதன்நடுவில் வட்டமொன்று
வானென்ற திதன்நடுவோங் காரமிட்டு
மங்கிட்டு நடுவிலே மாயோன்நின்றார்
மானென்ற திதன்மேலே ருத்ரலோகம்
மைந்தனே வட்டமிட்டு நடுவைங்கோணம்
தானென்ற திதன்நடுமுக் கோணமப்பா
கருவாக விதன்நடுவே சிங்கென்றாணே. (30)

ஊணியே நடுவதனில் ருத்ரமூர்த்தி
உகந்திருந்தா ரதன்மேலே மயேசன்வீடு
வாணியே அறுகோண முள்ளைங்கோணம்
வகையாக நடுவில்முக் கோணமிட்டுத்
காணியே நடுவாக வங்கென்றாணிச்
சார்ந்திருந்தார் வங்குநடு மயேசமூர்த்தி
நாணியிதன் மேலேசதா சிவத்தின்வீடு
நலமாக வட்டமிட்டு நடுவிற்கேளே. (31)

கேளப்பா வைங்கோணம் திடமாயிட்டுக்
கெடியான வைங்கோணத் துள்ளேகேளு
நாளப்பா முக்கோணம் நன்றாயிட்டு
நலமாக விதனுள்ளே விந்துவிட்டு
வாளப்பா யிதினுள்ளே யங்கென்றிட்டு
வகையாக நடுவில்சதா சிவமும்நின்றார்
ஆளப்பா மூலமுத லெண்ணிப்பார்க்க
அரகரா ஆதாரம் ஆறுமாச்சே. (32)

ஆச்சப்பா ஆதார மாறுங்கூட்ட
ஆச்சரியந் தேகமென்ற நாமமாச்சு
கூச்சப்பா தேகத்துக் கானனமாறுச்சு
குருவாகு மிவர்தானே சட்டைநாதர்
பேச்சப்பா ஆதாரந் தன்னைநன்றாய்ப்
பேணியே சட்டைகொண்டு மூடிநின்றார்
வாச்சப்பா யிவரேகை லாசமூர்த்தி
வகையாகப் பிராணயம் பண்ணிக்கேளே. (33)

கேளப்பா உகாரங்கண் டத்தில்நிற்கும்
கெடிஅகரம் புருவநடு வதிலேநிற்கும்
நாளப்பா ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
நலமான பிராணயம் பண்ணித்திரு
வாளப்பா ரெண்டுமொன்றாய்ச் சேராவிட்டால்
வாயாது பிராணயஞ் சித்தியில்லை
கோளப்பா வாராது கூட்டினாற்கால்
கூறினே னண்டாண்டங் கூர்ந்துபாரே. (34)

பாரடா ஊமையென்ற யெழுத்தையுண்டாற்
பரிவான வாதார முருவியேறும்
நேரடா விந்துகட்டுங் குளிகைசித்தி
நினைவாக வாசிசித்தி வசியஞ்சித்தி
வீரடா தம்பனமுச் சாடனங்கள்
விதமான பேதனமா ரணமுஞ்சித்தி
பேரடா மோகனமு மழைப்புஞ்சித்தி
பிதற்றாதே வேடணமுஞ் சித்திதானே. (35)

தானென்ற வாதசித்தி காயசித்தி
        தனித்துநின்ற கெவுனசித்தி கற்பத்தாலே
வீனென்ற மூடர்களே யெல்லாம்விட்டு
        விதமான பிராணயஞ் செய்தாலென்ன
வேனென்ற காட்டிலொற்றை மாம்போற்கற்பம்
        விட்டுமே யோகஞ்செய் தென்னகிட்டும்
மானென்ற பெண்போலே மாயைவந்து
        வலியவுன்னைச் சருவில்விந்து வீழ்ந்துபோமே. (36)

போமப்பா கற்பமுண்டாற் கட்டிப்போகும்
        புதுமையுடன் விட்டுவிட்டாற் சடலம்வீழும்
நாமப்பா கண்டபடி யுண்ணச் சொன்னோம்
        நலமாயவ் வாறுண்டாற் சத்திவந்து
ஆமப்பா கீதமது பாடிவைப்பாள்
        ஆனந்த லகிரியுன்னை யப்போதூக்கும்
வேமப்பா லகிரியுண்ண வகையைக்கேளு
        வேதாந்த நாற்பான்முக் கோணங்கேளே. (37)

கேளடா கொங்கணர்தான் கடைக்காண்டத்திற்
        கெடியாக நால்வரையாய் வரையச்சொன்னார்
நாளடா நாற்கோணம் நானும்சொன்னேன்
        நன்றாக விதுவெல்லாந் தூலமாகும்
வாளடா நாலதுவும் பிரமன்வீடு
        மைந்தனே பத்தென்ன விஷ்ணுவீடு
தாளடா முக்கோணம் ருத்ரன்வீடு
        தயவாக நாற்பத்து மூன்றிதாமே. (38)

ஆமப்பா யிதுவோநாற் பத்துமூன்று
        அறியாத மாடுகள்சக் கரத்தைக்கீறி
நாமப்பா சொன்னவட் சரத்தைநாட்டி
        நலமாகப் பூசைவிதி யென்றேசொல்லி
போமப்பா தேவிக்கர்ச் சனைகள்பண்ணிப்
        புதுமையுடன் சாராயந் தனைக்குடித்து
வேமப்பா பெண்ணோடே கூடியாடி
        வேதாந்தி நானென்று திரிவான்மாடே. (39)

மாடுதா ஞனுக் கிரிகையுண்டு
 மதிகெட்ட சவங்கல்மூ தேவியப்பா
வாடுவான் வாதமென்று சுட்டுமாய்வான்
 மனிதனல்ல கழுதையவன் குருவைக்காணுன்
தேடுவான் பணந்தேடப் பிரட்டுச்சொல்வான்
 சித்தியுண்டோ அப்பூசை தன்னில்மைந்தா
காடுவான் பூரணத்தைத் தினந்தான்கள்ளன்
 நானென்ற ஆண்மைவிடா நாய்தான்பாரே. (40)

பாரப்பா அப்பூசை கிரியைக்காகும்
 பண்பைவிட்டு முன்சொன்ன வழியேநீயும்
வாரப்பா தாயுடைய வஸ்துவைத்தான்
 வாங்கியே பீங்கானில் விட்டுக்கொண்டு
ஓரப்பா யிதிலேநீ நயனத்தாலே
 ஓட்டுவாய் முக்கோண மிதனுள்ளேகேள்
ஊரப்பா ஓங்காரந் தன்னையொட்டு
 ஓகோகோ விதனுள்ளே விந்துவொட்டே. (41)

ஓட்டுவா யிதனுள்ளே மச்சாள்நீங்கள்
 ஓகோகோ நங்கென்றும் மங்கென்றுந்தான்
ஓட்டுவாய் சிங்கென்று விந்துக்குள்ளே
 ஓட்டியபின் னவளுடைய சாபம்நீங்கும்
ஓட்டுவாய் நமசியென்று உருநூற்றெட்டு
 ஓதடா வஸ்துவுட சாபம்நீங்கும்
ஓட்டுவாய் மனத்தைப்பூ ரணத்திலேற்றி
 யொருநினைவாய்ப் பூரணத்தை யோதுவோதே. (42)

ஓதடா கிண்ணத்தில் வஸ்தைப்பார்த்து
 ஒருநினைவாய்ப் பின்புபிர மனைத்தானுன்னி
ஓதடா வதன்மேல்விஷ் ணுவைத்தானுன்னி
 உன்குருவாம் ருத்திரனில் மனத்தைவைத்து
வாதடா சத்திசிவந் தன்னைநோக்கி
 மகத்தான சாம்பவியே தேவியென்று
மாதடா விடாயுனக்கே பிரதியென்று
 ல்மந்தனே வஸ்துவைநீ பானம்பண்ணே. (43)

பண்ணடா யோகசித்தி கைக்குள்ளாகும்
பார்வதியாள் நாதத்தாற் குளிகைகட்டும்
நண்ணடா வொளிகிழிந்து வெளியுங்காணும்
நாற்பத்து முக்கோண வாலையாலே
ஒண்ணடா வென்றுசொல்லார் உலகமாடு
ஓகோகோ வஸ்துவென்று அறியார்மூடர்
விண்ணடா கிழிந்தாலா தாரமேறும்
வெகுசுருக்கு சிலம்பொலியும் கேட்குங்காணே. (44)

காணடா விதுவல்லோ மவுனபூசை
கதிர்கோடி போலவுமே யொளிதான்வீசும்
வீணடா சக்கரத்தி லென்னவுண்டு
விதமாகக் கிரியைவிட்டுப் பூசைபண்ணு
நாணடா விசையாலே அம்புதைக்கும்
நாணறுந்த வில்லாகும் யோகபூசை
பூணடா யென்தனுக்கு ஆறுமுகமூர்த்தி
புதுமையுடன் மவுனத்தைப் பூட்டினாரே. (45)

பூட்டினா ரப்படியே யானுஞ்செய்தேன்
புதுமையுட னொளிகிழிந்து வெளியிற்சென்றேன்
மாட்டினார் கணபதியை முன்னேகண்டேன்
மருகாலே நாடிரவும் சிவாயங்கண்டேன்
தீட்டினார் வெட்டவெளிக் குள்ளேசென்றேன்
சிலம்பொலியைக் கண்டவுடன் காதுங்கெட்டேன்
காட்டினார் மவுனமென்ற தீக்ஷையாலே
நன்குருவி னருளாலே திரும்பினேனே. (46)

திரும்பினேன் வஸ்துவுட பலத்தினாலே
சேயானேன் கயிலாச மூர்த்திக்கப்பா
வரும்பினேன் அப்யாச மார்க்கங்கேளு
வஸ்துவுண்ண மனமடங்கும் மகத்தாஞ்சித்தி
உரும்பினேன் கொங்கணரஷ் டாங்கம்பாரு
உத்தமனே யென்றந்தை ஞானம்பாரு
கரும்பினேன் கடைக்காண்ட நூலைப்பாரு
கருவான கும்பமுனி தீக்ஷைபாரே. (47)

பாரடா திருமூல ராஞ்ஞூற்றைத்தான்
பரிவான மச்சமுனி ஞானம்பாரு
நேரடா கும்பமுனி பூசைபாரு
நிலைவாக அவர்ஞானம் நூறும்பாரு
ஊரடா இவர்களுட ஞானம்பார்த்தால்
உத்தமனே வஸ்துவுட பெருமைதோணும்
வாரடா யின்னூலைப் பார்த்தபேர்க்கு
வழியறிந்த சித்தனென்ற நாமந்தானே. (48)

தானென்ற தீக்ஷையைம்பத் தொன்றுஞ்சொன்னேன்
தயவான பூசைவிதி முப்பத்தாறும்
பானென்ற வாதமைம்பத் தொன்றுஞ்சொன்னேன்
பலதிரட்டு ஆயிரத்தின் நூறுஞ்சொன்னேன்
மானென்ற பெண்மயக்கந் தள்ளச்சொன்னேன்
மகத்தான கற்பமுண்ண வகையைச்சொன்னேன்
நானென்ற வாண்மைதனைத் தள்ளச்சொன்னேன்
நாசவழி சாராயங் கள்ளுந்தள்ளே. (49)

தள்ளப்பா கற்பமுண்டா லில்லையத்பம்
தயவான பத்தியத்தை வைத்தாயானால்
உள்ளப்பா மறுபடிதா னொன்றுமாகா
உத்தமனே பத்தியம்நீ வைக்கவேண்டாம்
நள்ளப்பா விந்துவங்கே ஜெனிக்கும்போது
நலமான பத்தியங்க ளுண்டோசொல்லு
அள்ளப்பா கயிலாச மூர்த்திசொன்ன
அதீதமென்ற மவுனத்தை யறிந்துதானே. (50)

அரிதப்பா பெணைப்போலே பட்டபாடு
ஆர்படுவா ரற்புதந்தான் நந்திவந்து
அரிதப்பா வென்றுசொல்லி மவுனம்சொன்னார்
அவரைப்போ லுலகத்தில் சித்தர்காணேன்
அரிதப்பா கெவுனவா யோடிமீள்வார்
ஆச்சரியம் போதகத்தைப் பானஞ்செய்வார்
அரிதப்பா ஆறுவனா கண்டுமீண்டார்
அற்புதா னந்தனுட அடிதான்முற்றே. (51)

மருந்தீடு தீர்க்க.

போமடா வாதமென்ன கரப்பான்சூலை
　　பூரித்த விஷப்பாண்டு மகோதரந்தான்
வேமடா ஜன்னிவிப் புருதிகுட்டம்
　　விஷநீர்க ளானரத்த மெல்லாந்தீரும்
நாமடா மருந்தீடு தீரச்சொல்வோம்
　　நல்லமூத்த மெனுமிச்சம் பழத்தின்சாறு
ஓமடா குடித்திடவே கக்கும்பாரு
　　உத்தமதா ளிக்கொழுந்தும் மிளகுமாமே.

மூலாத்தத்துக்கு.

நன்றான மூத்தமொடு வாழைப்பூவும்
　　நலமான தென்னம்பூ விடையந்தானும்
குன்றாமற் பச்சரிசி யுடனிடித்துக்
　　குழுறவே புட்டவித்துக் கொடுக்கக்கேளு
பன்றாக மூன்றுநா ளுண் ணும்போது
　　பாங்கான ரத்தமது நிற்கும்பாரு
ஒன்றான சிவனிடத்தி லிருந்துகொண்டு
　　உமையவள்தன் பதம்பணிந்து வுகந்துசெய்யே.

சுந்தரானந்தர் சுத்தஞானம் ருக.

முற்றிற்று.

மதுரை சொக்கநாதன்தெரு, கருப்பணபிள்ளையவர்கள் குமாரர் காசிவிஸ்வநாதபிள்ளை அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதி யின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

குமரனுறவை.

இருபத்தேழாவது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# சிவயோக ஞானம் ௩௨.

ஆனந்த மாகிநின்ற ஆயிபாதம்
ஐயரென்ற கயிலாச மூர்த்திபாதம்
தானந்த மானகுரு முனிவர்பாதம்
சனகாதி மூலர்கொங் கணவர்பாதம்
வானந்த மாகியதோர் போகர்பாதம்
வதிஷ்டர்முதல் முனிவோர்கள் பாதம்போற்றி
மோனந்த மானபல திரட்டைச்சொல்ல
மூலாதா ரத்திருந்த கணேசன்காப்பே. (1)

காப்போடே ஆயிரத்தி யிருநூறுள்ளே
கலங்காதே ஐயர்பதந் தொழுதுபோற்றி
வாப்போடே சொல்லிவிட்டே னொளிதான்பார்க்க
வகைவிபர மாகவிதில் வாதஞ்சொன்னேன்
தாப்போடே கண்டவர்க்கு வழியுஞ்சொன்னேன்
சற்குருவைச் சதாபணியத் தானேசொன்னேன்
ஆப்போடே திறந்துவர மவுனஞ்சொன்னேன்
அப்பாழு மிப்பாழு முப்பாழாமே. (2)

ஆமென்ற பாழ்ரெண்டும் கலந்துகொள்ள
ஐயரென்ற முனியெனக்கு உபதேசித்தார்
ஊமென்ற இரண்டையுந்தான் மூலத்தூணி
உட்கனலைச் சுழிமுனையி லொட்டச்சொன்னார்
நாமந்தப் படிநின்றோம் யோகியானோம்
நற்சீஷ னுனக்கா லுபதேசிப்பாய்
வாமந்தா னிதுக்குறுதி மற்றதாகா
வழியான யோகியல்ல மாடுதானே. (3)

அறியவென்றால் லெகுவாமோ பரமஞானம்
அகத்தீசர் முதல்ரிஷிகள் தேடித்தேடிப்
பெரியரென வுலகத்தி லலைந்துயென்னைப்
பெற்றாளைப் பூசைசெய்து பேருஃபெற்றார்
பிரியமுடன் போகமுனி பரங்கியூரிற்
பிறந்தல்லோ பெண்டேடி மவுனங்கொண்டார்
உரியமுட னென்தந்தை யோகஞ்செய்து
உற்பனமாய் மவுனத்தாற் பேர்பெற்றாரே. (4)

பெற்றபே ரெந்தனக்கு உபதேசித்தார்
பேர்பெரிய அற்புதா னந்தமூர்த்தி
பெற்றபே ருலகத்தோர் பிழைக்கவேண்டிப்
பேசினார் ஞானமது ரெண்டுநூறு
பெற்றபேர் வாதமது ஆயிரந்தான்
பின்னுமொரு நிகண்டுபனி ரெண்டுநூறு
பெற்றபேர் கற்பமிரு நூறுஞ்சொன்னார்
பேசாதே கயிலாச வர்க்கத்தேறே. (5)

ஏறவென்றால் லெகுவாக வுன்றனக்கு
எய்துமோ உகாரமென்ற சத்திமார்க்கம்
கூறவென்றால் வாய்ப்பேச்சோ மைந்தாசொல்லு
கூர்ந்துபார் மெய்ஞ்ஞான மைம்பத்தொன்றில்
தேறவென்றால் பூசைவிதி முப்பத்தாறில்
திறந்துவிட்டேன் நவகோண வாலைகற்பம்
பேறுபெற வேணுமென்றாற் பூசைசெய்து
பிசகாமல் வாலைகற்பம் கொள்ளுகொள்ளே. (6)

கற்பமென்றால் லெகுவாக வெண்ணவேண்டாம்
கசடரே யீசனன்று கயிலாசத்தில்
உற்பனமாய் ஆத்தாளுக் குபதேசித்தார்
உண்மையுட னையருக்கு ஆத்தாள்சொன்னாள்
அற்பமென்று நினையாதே யென்றுசொல்லி
ஐயரென்ற குருவெனக்கு அருளிச்செய்தார்
சிற்பரத்தாய் மூலமடா கண்டுகொள்ளு
க்ஷணத்திலே மேலமுதஞ் சிந்துங்காணே. (7)

சிந்துமென்ற கற்பமது கசடற்செய்தால்
சிவயோகி யானவர்க்குச் செணத்திலெய்தும்
பந்துவென்ற விந்துவது மேலேயேறும்
பராபரையும் புருவமையம் பாங்காய்த்தோணும்
அந்துவென்ற தேசமது அருணன்போலாம்
ஆச்சரியங் கத்திருடு வோடும்பாரு
வந்துனக்கு உபதேசம் ஆயிசொல்வாள்
வாய்திறந்து சொல்லாதே மவுனம்உண்ணே. (8)

மவுனமுன்ன மவுனமுன்ன மவுனமாகும்
மாசற்ற மவுனமுன்னே வாரித்தூக்கும்
கெவுனவழி யோடுதற்குக் குளிகைகட்டும்
கேசரமெல் லாமடங்கா வொளிகான்வீசும்
தவனமில்லை பசியில்லை சாவுமில்லை
சட்டைகக்குந் தேகமது அருணன்போலாம்
புவனமதில் மாற்றமுந்தன் தேகச்சாயை
பொய்யடா பூரணத்திற் பூட்டுவாயே. (9)

வாயாலே சொல்லாதே கருமிக்கப்பா
வாய்திறந்தால் சித்தர்வந்து சாபமீய்வார்
நோயாலே சடமழியும் நரகமெய்தும்
நோக்கேது காயசித்தி பொய்யாய்ப்போகும்
தாயாலே வாதமெல்லாந் தவறிப்போகும்
சாற்றரிது கருமிகட்குச் சார்ந்துபாரு
பேயான வனத்தில்வைத்து அடக்கம்பண்ணு
பேரான யோகத்தின் பிரிவைக்கேளே. (10)

பிரிவென்ன ரேசகமாத் திரைதானொன்று
பேசாதே பூரகமாத் திரைதான்ரெண்டு
தருவென்ன கும்பகமாத் திரைதான்நாலு
தயங்காம லிப்படியே முன்னேபண்ணு
அரிவென்ன இப்படியே பழக்கமாக்கி
யானேபின்பு இன்னமொரு வகையைக்கேளு
பிரிவென்ன ரேசகமாத் திரைதான்ரெண்டு
பேசாதே பூரகமாத் திரைதான்நாலே. (11)

நாலாகக் கும்பகமாத் திரைதானெட்டு
நயமாகப் பழக்கமது நன்றாய்ப்பண்ணி
மேலாக இன்னமொரு வரிசைகேளு
மேன்மையாம் ரேசகந்தான் நாலுபண்ணு
பாலாகப் பூரகமாத் திரைதானெட்டுப்
பதிவான கும்பகமாத் திரையீரெட்டு
மாலாக வரிசைமுறை தவறுமற்றான்
மணமாக இப்படியே பழக்கம்பண்ணே. (12)

பண்ணியே இன்னமொரு வரிசைகேளு
பரிவான ரேசகமாத் திரையோஎட்டு
உண்ணியே பூரகமாத் திரையீரெட்டு
உத்தமொரு கும்பகமாத் திரைநாலெட்டு
மண்ணியே யிப்படிநீ பழக்கம்பண்ணு
வாகாகத் தீர்ந்தபின்பு வரிசைகேளு
நண்ணியே ரேசகமாத் திரைபத்தாகும்
நன்றாகப் பூரகந்தா னிருபதாமே. (13)

ஆமப்பா கும்பகந்தான் நாற்பதாகும்
ஆச்சரிய மிப்படியே பழக்கம்பண்ணு
ஓமப்பா தேர்ந்தபின்பு இன்னங்கேளு
உரைக்கிறேன் ரேசகந்தான் பனிரண்டாகும்
தாமப்பா பூரகந்தா னிருபான்நாலு
தயவான கும்பகந்தான் நாற்பத்தெட்டு
நாமப்பா இப்படியே யோகம்பார்த்தோம்
நலமாக இன்னமொரு வரிசைகேளே. (14)

வரிசையென்ன ரேசகந்தான் பதினாலுக்கும்
வகையான பூரகந்தா னிருபத்தெட்டு
உரிசையுடன் கும்பகந்தா னைம்பத்தாறு
உத்தமனே இப்படியே பழக்கம்பண்ணு
கரிசையுடன் இன்னமொரு வரிசைகேளு
கனமான ரேசகந்தான் பதினாறாகும்
பரிசையுடன் பூரகமுப் பத்திரண்டு
பண்பான கும்பகத்தைப் பகரக்கேளே. (15)

பகரமுள்ள மாத்திரைதா னறுபான்நான்கு
பாங்காக இப்படியே பழக்கம்பண்ணு
உகரமுள்ள திதுக்காதி யுண்ணுவுண்ணு
உரைக்கிறேன் ரேசகத்தை உங்களுக்குத்
தகரமுள்ள மூச்சுவெளி விடுவதற்குத்
தப்பாது பூரகத்தைச் சாற்றக்கேளு
அகரமுள்ள மூச்சையுள்ளே வாங்கலப்பா
ஆச்சரியங் கும்பகத்தை அறையக்கேளே. (16)

கேளப்பா மூச்சையுள்ளே வாங்கிக்கொண்டு
கெடியாகத் தம்பித்து யிருத்தலாச்சு
வாளப்பா மூன்றுக்கும் வரிசைசொன்னேன்
வகையாக இப்படியே யோகம்பாரு
நாளப்பா வருஷமொன்றிற் சித்தியாகும்
நாதாக்க ளிப்படித்தான் சொல்லவில்லை
ஆளப்பா சொன்னவழி தவறாமற்செய்
ஆச்சரியம் யோகவிதி யறைந்திட்டேனே. (17)

விதியாக யீசனுட மொழியைப்பார்த்து
விளம்பினே மாயிரத்தி யிருநூறுக்குள்
திதியாக யோகவிதி செய்வோர்க்கெல்லாம்
செயகண்டி போட்டுவிட்டேன் திறந்துமக்காள்
கெதியாக மாத்திரைக்கு அடையாளங்கேள்
கிருபையுடன் யென்தீட்சை ஐம்பத்தொன்றில்
மதியான தீட்சையொன்று மறைத்துச்சொன்னேன்
வாகாக மறையாம லறைகுவேனே. (18)

அறைகுவேன் அகரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகரமது சத்தியாச்சு
நிறைகுவேன் சிவசத்தி யிரண்டுங்கூடிச்
சேர்ந்ததடா மகரமென்ற மவுனமக்காள்
பறைகுவேன் அகாரமுடன் உகாரமவ்விற்
பாய்ந்தொன்றாய் கலக்கபிர ணவமுமாச்சு
மறைகுவேன் தீட்சையோங் காரந்தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே. (19)

முறைத்திட்ட சிவதீட்சை சத்திதீட்சை
வாகாக முப்பத்தி ரண்டாகத்தான்
உறைத்திட்ட நூல்களட் சரங்கள்பாரு
ஒடுங்கிற்று மூன்றெழுத்தி லுரைத்தமூன்றும்
அறைத்திட்ட ஓங்காரத் துள்ளாய்ப்போச்சு
அம்மம்மா மாத்திரையை அறையக்கேளு
திறைத்திட்ட ஊமென்று ஒருக்காற்சொன்னால்
திடியான மாத்திரைதா னென்றதாச்சே. (20)

ஆச்சப்பா பூரகமுப் பத்திரண்டு
ஆச்சரியம் மூச்சையுள்ளே வாங்குவாங்கு
வாச்சப்பா கும்பகந்தா னறுபான்நான்கு
வளமாக மூச்சையுள்ளே தம்பிதம்பி
தாச்சப்பா ரேசகமோ யீரெட்டாகும்
தவிடுதா னுடாமல் விடுநீமூச்சைப்
பேச்சப்பா பின்னையுமிப் படியேபண்ணிப்
பிரளாமற் றினமொன்று லெகுவாய்ப்பண்ணே. (21)

பண்ணுகிற வரிசையைத்தான் கேளுகேளு
பங்குனியாம் மாதத்தைத் தொட்டுப்பண்ணு
நண்ணுதற்கு மாத்திரைதான் நூற்றீராறு
நலமான பிரதமையில் நயந்துபண்ணு
துண்ணுதற்குத் துதிகையிலே யோகம்பண்ணச்
சொல்லுகிறேன் இருநூற்றோ டெண்மூன்றாக
முண்ணுதற்குத் திரிதிகையிற் சொல்லக்கேளு
முந்நூற்றி முப்பத்தா றாகும்பாரே. (22)

பாரேநீ யிப்படியே வாசியோகம்
பாங்காகத் தினம்தினமும் யேத்தியேத்தி
நேரேநீ ஒருநூற்றிப் பனிரண்டானால்
நிச்சயமாய்ப் பிராணாயம் ஒன்றதாகும்
காரேநீ பிரதமைக்கு ஒன்றுபண்ணு
கைமுறையாய்த் துதிகைக்கு இரண்டுபண்ணு
மாரேநீ திரிதிகைக்கு மூன்றுபண்ணு
வாகான சதுர்த்திக்கு நாலுபண்ணே. (23)

பண்ணடா திதியேற ஒவ்வொன்றேத்திப்
பண்ணிவரப் பவுரணைக்குப் பதினைந்தாகும்
முண்ணடா அமாவாசைத்திதிவரைக்கும்
முப்பதுதான் பிராணப மேலும்பாரு
எண்ணடா பதினாறு மாதமாகில்
இரட்டிலறு நூற்றிருபான் பிராணயத்தை
வண்ணடா புரியட்டத் துள்ளேநாலு
வாங்குமடா பாழில்லை சாவும்போச்சே. (24)

போச்சப்பா பிராணயம் பண்ணும்போது
புதுமையாய் முந்திமுந்தி வேர்வைகாணும்
ஆச்சப்பா சுக்கதனைப் பொடியாய்ப்பண்ணு
ஆச்சரியம் வேர்வையிலே தேய்த்துப்போடு
மாச்சப்பா முதலிலிப் படியேகாணும்
மைந்தனே தப்பிக்கு மிரண்டாம்பக்ஷம்
பாச்சப்பா மூன்றான பக்ஷத்துள்ளே
பசிமெத்த வுண்டாகும் பாருபாரே. (25)

பாரடா நாலான பக்ஷத்துள்ளே
பதிவாகும் லெதுவாகும் யோகம்பார்க்க
நேரடா அஞ்சான பக்ஷத்துள்ளே
நிச்சயங்கா ணொளிவீசுங் கண்ணுற்பாரு
கூரடா ஆறான பக்ஷத்துள்ளே
குண்டலிதான் பிரகாச மாகும்பாரு
ஆரடா யேழான பக்ஷத்துள்ளே
ஆச்சரியம் பராபரையைக் காணலாமே. (26)

காணவே யெட்டான பக்ஷத்துள்ளே
காமமது மேலேறுங் கீழ்நோக்காது
பாணவே பக்ஷமென்ன அதுதான்ரெண்டும்
பதினாறு திங்களுக்குப் பருவம்பாரு
ஆணவே மூதண்டக் கிஷாயந்தன்னை
அந்திசந்தி மறவாமற் றினமுங்கொள்ளு
பூணவே யோகமது செய்யும்போது
பொய்யல்ல கண்கடுத்தாற் புகலுவோமே. (27)

புகலுமே ஆவின்நெய் கலசப்பாலும்
போட்டுநன்றாய்க் கலந்துள்ளங் காலிற்பூசு
அகலுமே கண்கடுப்பு அன்னங்கொள்ள
அறையுகிறேன் பூரணா னந்தாகேளு
துகலுமே அன்னத்தைக் குறைத்துவுண்ணு
சொல்லுகிறேன் சாதகமாய்த் தொடர்ந்துதானே
மகிழுமே கையான்றன் இலையைவாங்கி
மைந்தனே உதயாதி பிடிதான்கொள்ளே. (28)

கொள்ளவே அந்தியிலே பிலேயைக்கேளு
கொடிக்கட்டுங் கொடிபிலேயை ஆவின்பாலில்
பள்ளவே மண்டலந்தான் காய்ச்சிக்கொள்ளப்
பசிகட்டும் அன்னமது குறைந்துபோகும்
நள்ளவே பச்சரி யொருசேர்வாங்கி
நயமாகப் பொங்கியதை ஆவின்பாலில்
தெள்ளவே போட்டுண்ண யோகஞ்சித்தி
தீனியிலே ஆசைவைத்தாற் சிதறிப்போமே. (29)

போகாமல் அன்னமரை தண்ணீர்காலாய்ப்
புசித்துநீ தினந்தினமுங் குறியில்நில்லு
தாகாமற் பதினாறு மாதந்தன்னில்
தப்பாது யோகமது சித்தியாகும்
வாகாமற் புரியஷ்ட மெட்டும்பாழாய்
மாண்டுடனே நாலுமெட்டிற் கலந்துபோகும்
ஆகாத விந்துவது கட்டிப்போகும்
அடையாளம் யோகசித்தி அறைகுவேனே. (30)

அறைகுவேன் யெட்டதிலே நாலுஞ்சேர்த்தால்
அப்பவல்லோ யோகமது சித்தியாச்சு
பறைகுவேன் சாவென்ற பேச்சும்போச்சு
பண்பாகத் தன்நிழலின் சாயையில்லை
மறைகுவேன் தீபமதின் சாயையில்லை
மக்களே தண்ணீரின் சாயையில்லை
தறைகுவேன் இவ்விதமாய்ச் சாதித்தோர்க்குச்
சட்டைகககித் தேகமது அருணனுமே. (31)

அருணனு யிருக்குமடா உந்தன்தேகம்
ஆச்சரிய மிருக்கையிலும் நடக்கும்போதும்
வருணமுள்ள யோகமதைத் தீர்ப்பதற்கு
வகைசொல்வேன் பூரணு னந்தாசேளு
தருணமுள்ள பூரகந்தா னிரண்டுவாங்கு
சதாநித்தம் கும்பகந்தான் நாலுகும்பி
கருணமுள்ள ரேசகத்தை யொன்றேரேசி
கைமுறையாய்ச் சொன்னபடி கருதிச்செய்யே. (32)

சுந்தரானந்தர் சிவயோக ஞானம் ௱௨.

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி ☞ பங்காருசாமியார் அவர்கள் குமாரர் ☞ முத்தியாலு நாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

இருபத்தெட்டாவது:

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

# அதிசய காரணம் ௩௬.

சீரான வுமாதேவி பாதம்போற்றிச்
செகமகிழச் சுந்தரா னந்தன்றானும்
பேரான அதிசயநூல் முப்பத்தாறைப்
பிரியமுடன் பாடுதற்குக் குருவைப்போற்றித்
தாரான பட்சியுட கூட்டில்வேர்கள்
தனையறிந்து தொழில்வகைகள் தானேசெய்யக்
காரானை முகத்தோனே வுமையாளானைக்
கருமுறைக ளிதுபோலு மில்லைப்பாரே. (1)

பாரென்றேன் கல்லெலியின் கூட்டிலப்பா
பதிவான வேருண்டு விரல்போல்நீளம்
வாரென்றே னிருபுறமுஞ் சிவந்துகாணும்
வரும்போது அசனத்தை வைநீயுள்ளே
தாரென்றேன் வேரதனைப் போட்டுத்தள்ளும்
தான்தூரத்தி வேரதனை யெடுத்துக்கொண்டு
ஓரென்றேன் வசியநம வென்றுநூறு
உருவேத்திச் செபிக்கத்தாழ் விடுகுந்தானே. (2)

தானான மணத்தவளை யிருப்பிலப்பா
சார்வாக நாலுமுழங் கிள்ளிப்பாரு
கானான விரல்தண்டி வெள்ளையாகக்
கருப்பான வரியுண்டு வேரைவாங்கி
நானான யெழுபதொன்று அறுபதென்று
நாடிலட்சம் உருச்செபித்துக் கொண்டுநீயும்
போனான பட்சிகளை யிருக்கவென்றுற்
போரவன்றன் பேர்சொல்லிச் சேவிநீயே. (3

நீயேதான் கேளெனவே அணியின்கூட்டில்
நிகர்முடிச்சு வேருண்டு யெடுத்துத்தானும்
வாயேதான் அரிநம வருகவிங்கு
மகிழ்ந்துலட்ச முருவேத்தி வைத்துக்கொண்டு
காயேதான் கூடதனைச் சாம்பல்செய்து
கான்வேட்டைக் கதனைநீ சத்தேயூது
பாயேதா னவ்வேர்க்கு வெட்டைசாயும்
பரனறிய வுண்மையெனப் பகரலாமே. (4)

பகருவேன் காகத்தின் கூட்டிலப்பா
பதிந்திருக்கும் வேருண்டு மஞ்சள்வர்ணம்
அகருவேன் அதையெடுத்துத் தூசியென்று
ஆயிரத்து லட்சமுருச் செய்துகொண்டு
புகருவேன் பிரிவதற்கு ரெண்டுபேரின்
புகழ்பேரை யெழுதிவைத்துத் தூபங்காட்டித்
தகருமே யில்லதனில் வைக்கத்தானே
சண்டையுண்டா மென்றதனைச் சாத்தலாமே. (5)

சாத்தியதோர் பூஞ்சிட்டின் கூட்டில்வேரு
தனையறியக் கருப்புவரி மூன்றுமுண்டு
நேத்தியுடன் அதையெடுத்து மகிழ்ந்துகேளு
நிரம்புசிவ வாவெனவே லட்சமோது
பாத்திரங்கீழ் வைத்துமிக இருக்கும்போது
பாற்சாதம் நிரம்பவுண்டு யென்றுங்காணும்
நாத்திசையு மறியவடைக் கலத்தின்கூட்டில்
நலமான வேரின்வகை கேளுகேளே. (6)

சேளுமது பச்சைவர்ண மாகத்தோன்றுங்
கிருபையரி நங்குரங்கு லட்சஞ்சேவி
வாளுமது வைத்திருக்கும் போதேயப்பா
மழைவிலகுஞ் சோதனைதான் மைந்தாகாணும்
வேளுடைய வெடிவாணம் அம்புக்குத்து
வெட்டுமுதல் விலக்குமடா திட்டம்பாரு
ஆளுமிகக் கண்டுபடை முறியுஞ்சொன்னேன்
பரனறிய வுண்மையென வருளினேமே. (7)

அருளியதோர் கரிக்குருவி கூட்டிற்றானும்
ஆனதொரு வேருண்டு வளையமாகும்
பருளியதோர் காயம்போல் வீசும்பாரு
பதிந்தெடுத்துக் கண்டதப்பு மென்றாலட்சம்
பொருளிதனை யுருச்செபித்து அமுதந்தன்னிற்
புகழ்ந்துரைத்து நெத்தியிலே பொட்டிட்டாக்கால்
வருளியதோர் கண்ணாடி தன்னைப்பாரு
மாயமடா உருக்காணு மாயமாமே. (8)

மாயமடா விராற்பொரியி னுள்ளேபாரு
வைத்திருக்குப் வேர்களையா திருக்குமப்பா
நேயமடா அதையெடுத்து வருகவசியென்று
நீலட்ச முருச்செபித்துப் பின்புகேளு
தூயதோர் மாதரையே நினைத்துக்கொண்டு
சுகமாகப் பொட்டிட்டு யெதிரேநோக்கு
சேயமடா பின்றொடர்ந்து வருவார்பாரு
செகத்திலே நிசமாகச் செப்பினேனே. (9)

செப்பியதோர் கோட்டையெனுங் கரிச்சான்கூடு
திகழ்மதிளி லிருக்குமதில் வேரொன்றுண்டு
ஒப்பியதோர் பயத்தங்காய் போலேகாணும்
உரைவெள்ளைப் புள்ளிபல வுண்டுபாரு
அப்பனே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
ஆலாலீ லூவெனநீ லட்சஞ்செபி
இப்புவியில் வேருஅட்ட கர்மயெட்டும்
இயல்பாகச் செய்யுமென வியம்பினேனே. (10)

இயம்பினே னணையின்கற் புடையிலப்பா
யிருக்குமடா வெகுநாளை விலாங்குதானும்
இயம்பினே னதுக்குள்ளே வேரொன்றுண்டு
இதமாக யெடுக்கவென்றால் விபரங்கேளு
இயம்பினே னுலத்தி யாசோடொட்டு
இட்டுமொரு குசரியுள்ளே யிட்டுப்போட்டு
இயம்பினே னதுஇதுவு மிதுவுமொட்டு
இயல்பான தூண்டிமீன் யிட்டுவாங்கே. (11

வாங்குதற்கு மந்திரந்தான் சொல்வேனப்பா
வயநமசி யென்றுலட்ச முருவைச்சேவி
பாங்குபெற அவ்வேரை யெடுத்துநீயும்
பகர்வெள்ளிக் குளிசத்தி லடைத்துவைத்துத்
தாங்கிடையின் முன்கட்ட வந்துநிற்கும்
சாதகமாய்ப் பின்றள்ள வந்துவீழும்
ஏங்கியல்லோ வெழுசாமம் வடிந்துபோகும்
எத்தடணங் கொடுப்பாள்கா ணினிதுபாரே. (12)

இனியதொரு மாடப்பு றாவின்கூட்டில்
இருக்குமடா வேரொன்று யிருக்கக்கேளு
பனியதொரு விரல்நெடுக மளவுபாரு
பகர்கறுப்பா மிருபுறமும் நெல்லின்நீளம்
கனிவுடனே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
கவிபட்டே டங்குமிங்கு மென்றுதானும்
பனிவுடனே பனிரண்டு லட்சம்சேவி
பண்பான வித்தையிது சொல்லுவேனே. (13)

சொல்லுவேன் காரணத்து மோடிக்கப்பா
துப்பாக்கி வார்செய்து கீழேநாட்டி
மெல்லவே பொரிக்காரம் வில்லைதட்டி
மேல்வைத்து யிதுவேரை நடுவேதாபி
வல்லமையாய் நீதூரம் போயேநின்று
வந்துமெதி ராளியதை யெடுக்கும்போது
சொல்லிவிடு இதுவுருவை வேட்டுண்டாக்குந்
துலையாது மோடியிது சூட்சங்காணே. (14)

காணென்றேன் பூச்சிமுள்ளுக் கூட்டுக்குள்ளே
கருணைவைத்துப் பாரதுக்குள் வேரொன்றுண்டு
காணென்றேன் அதுகண்ணை மருட்டுஞ்சொன்னேன்
கரியாங்கு வென்றுசொல்லிப் பிரித்துபாரு
காணென்றேன் வேருமொரு யிரையினீளம்
கண்டிடுவாய் மயிர்நரைபோ லிருக்கும்பாரு
காணென்றேன் அதுநடுவிற் பச்சைகாணும்
கருதியதோர் மோடியிது கண்டுபாரே. (15)

கண்டதனை யெடுத்துமிக வைத்துக்கொண்டு
கங்கிலியு மரியென்று லட்சஞ்சேவி
மூண்டியதோர் வேரையொரு செம்புச்செப்பில்
மூடியதிற் றொடர்திரமா மயிரிற்கட்டிக்
கொண்டியதோர் மயிர்நுனியிற் கட்டிப்போடு
குனிந்தெடுக்கி லுருச்சேவி உயரவேறும்
தண்டியதை யெடுப்பதற்கு மாட்டாரப்பா
தானான தொழிலிதுதான் சங்கையாமே. (16)

சங்கையுடன் கதுவாலிக் கூட்டின்வேரைத்
தானெடுக்கச் சொல்லுகிறேன் பொன்போல்மின்னும்
இங்கிதமா யதையெடுத்துக் கடித்துப்பாரு
இயல்பான சுக்கதுபோ லுறைக்குமப்பா
பொங்கமுடன் வருகநிச வென்றுசொல்லிப்
பூசிலட்ச முருவாகப் புனிதம்பாரு
கங்கமுட னவ்வேரு சபைவாய்கட்டுங்
கருவிதுவா மென்றுசொல்லிக் கருதலாமே. (17)

கருதியதோர் காடையுட கூட்டிலப்பா
கண்டுசொன்னேன் வேறொன்று கருப்பதாகும்
பருதியது வரும்போது பெழும்பும்பாரு
பதமாக யெடுத்ததனை வைத்துக்கொண்டு
இருதிதரு பட்டாங்கு நில்நில்லென்று
இரண்டுலட்ச முருச்செபித்துக் கடலிற்சென்று
நருதியுடன் கையமைக்க அலைதான்நிற்கும்
நாதாக்க ளறிந்திடவே காட்டினேமே. (18)

காட்டினேன் ஆட்காட்டிக் கூட்டிற்றானும்
நயமான வேறொன்று யிருக்கும்பாரு
சூட்டியதோர் முனைதனிலே ரெட்டைகாணும்
சுகமாகக் கண்டெடுநீ சொல்லக்கேளு
ஆட்டியதோர் ஸ்ரீறீங்கு வென்றுசொல்லி
ஆயிரத்தெட் டுருவாகச் செய்துபோட்டால்
தீட்டியதோர் சிலைகுடை பிடிக்குஞ்சொன்னேன்
செகத்திலுள்ளோர் காணார்கள் தெரிந்திடாயே. (19)

தெரிந்திடவே தெண்டுடைய புடையைப்பாரு
சிவந்திருக்கும் ஒருவேரு பச்சைவாசம்
பரிந்திடவே யதையெடுத்து வைத்துக்கொண்டு
பரமசிவ தம்பயவோம் மென்றுசேவி
குரிந்திடவே லட்சமுரு செய்துக்கொண்டு
குணமுடனே வாயிலிட்டு ஊதும்போது
அரிந்திடவே அரவமது வந்தேயாடும்
அன்பான வித்தையிது அடவுதானே. (20)

அடவான மூலமொடு புடையிற்குள்ளே
அமர்ந்ததொரு வேரதுதான் நீளம்சொன்னேன்
திடமாக அதையெடுத்து வைத்துக்கொண்டு
சிங்கரிஓ மென்றுலட்ச முருவைச்சேவி
கடமாக அவ்வேவரைக் கையில்வைத்துக்
கைகாட்டி யுருச்சொல்லி நிற்கும்போது
உடனேதா னோடிவருஞ் சொன்னேன்சொன்னேன்
உத்தமனே யிந்நூலே யுகந்துபாரே. (21)

உகந்துபார் மீன்கொத்திக் கூட்டுக்குள்ளே
உண்டுமடா வேர்கிழங்கு மிளகுபோலே
தகந்துபா ரிருபுறமுங் கருப்புவெள்ளை
தான்காணும் பிச்சிப்பூப் போலேவாசம்
பகர்ந்தெடுத்துச் சீவருக யீகூவென்று
பனிரண்டு லட்சமுரு பண்ணிக்கொண்டு
புகழ்ந்திடவேர் கையில்வைத்துத் தேங்காய்தட்டப்
பொடியாக நொருங்குமடா போதந்தானே. (22)

போதமடா பிராந்தினுட கூட்டிற்றனும்
புள்ளிகறுப் பானதொரு வேர்தானுண்டு
நீதமடா அதையெடுத்து நிசியோமென்று
நீலட்ச முருச்செபித்து விஷத்துக்கெல்லாம்
வேதமுடன் வெண்ணீரி லரைத்துயிய
வேரதனைக் கடிவாயி லுறைத்துப்போடு
ஓதுமிந்த மந்திரத்திற் றீர்ந்துபோகும்
ஓகோகோ இந்நூலு முதவாதென்னே. (23)

தென்னமிகக் கொண்டைவைத்த சிலாத்திக்கூட்டிற்
றெரிந்துபார் வேருண்டு சொல்லக்கேளு
வன்னமிடு மதுசிவந்த புள்ளிகாணும்
வாங்கிவந்த பின்புகிலி யாவாவென்று
இன்னிலத்தில் லட்சமுருச் செய்துகொண்டு
யிருந்தோர்க ளிருப்பதுதா றேட்டவென்றால்
சொன்னதந்த வேரதனை நீகோற்கீழே
சூட்டிமிதி யோட்டிவிடுஞ் சுரதந்தானே. (24)

சுரதமடா செம்போத்தின் கூட்டுக்குள்ளே
சொல்லுகிறேன் வேறொன்று யிருக்குமப்பா
பரதமடா அதையறிந்து யெடுக்கவென்றால்
பார்பச்சைப் புள்ளியுண்டு யெடுத்துக்கொண்டு
நரதமடா கடித்துப்பா ரேலம்போல
நாட்டமுடன் வீசுமடா விபரந்தானே
இரதமதை யதினாலே கிண்டக்கட்டும்
எடுத்துப்பார் மணியதுதான் வேதைக்காமே. (25)

வேதைக்கு மணியதனைச் செம்பிலீய்வை
வீடுகட்டு வாக்கெனவே லட்சஞ்சேவி
கதைபோலு மதனைவைத்துக் கொண்டுசெல்லு
கண்டதொரு வல்மிருகம் விலகியோடும்
மதயானை கிட்டவரும் பிடித்தவில்லை
வளைத்திடினும் பின்தொடரும் அதுவிரும்ப
இதையெவர்க்குஞ் சொல்லாதே சித்துவித்தை
யெடுத்தாடப் புவியிலெந்தன் குருசொன்னாரே. (26)

நானேதான் சொல்லுகிறே னுந்தைக்கூட்டில்
நாடியதோர் வேருண்டு யெடுக்கக்கேளு
தானான புள்ளியது மஞ்சள்வர்ணம்
தானிருக்கு மதையெடுத்து வைத்துக்கொண்டு
கோனான அங்குஷ்டநம வென்றுலட்சம்
குறிப்பாக வுருச்செபித்தா லிந்த்ரஞ்சாலம்
வானான மலையதனை வாவென்றாக்கால்
வந்துமிதின் வலத்தில்வர வாருங்காணே. (27

வாகான கூகையுட கூட்டிலின்னம்
　　வைத்திருக்கும் வேரொன்று உள்ளிவெள்ளி
பாகாக அதையெடுத்து வறிங்கிங்கென்று
　　பன்னிரண்டு லட்சமுருப் பண்ணிப்போடு
தாகமுடன் நீயுமதை யெடுத்துக்கொண்டு
　　சத்தமிகுங் கடலையழைத் திடவேயாகும்
காகான வதினுடைய வணத்தைக்காட்டும்
　　காசினியில் மயேந்திரத்தின் சாலமாச்சே. (28)

ஆச்சப்பா கல்லோடை யிருகரையில்
　　அனுடியதோ ருடும்பிருக்கும் புடைதான்சொன்னேன்
மேச்சப்பா யதற்குள்ளே வேர்தானுண்டு
　　மிகவெடுக்கத் தந்திரத்தை விளம்பக்கேளாய்
பாச்சப்பா ஓணானைப் பிடித்துவந்து
　　பார்வெள்ளை யிருகழஞ்சு வாயிலிட்டு
தூச்சப்பா வுள்ளேவிடு சண்டையாகி
　　சுருக்குடனே பிடித்ததனைத் தின்னுந்தானே. (29)

[illegible]
　　[illegible]
[illegible]பு
　　வந்துபார் வெளியிலது வந்ததோனும்
எண்ணமுடன் கொழுந்துபோல் வாசங்கானும்
　　இயல்வெள்ளை நிறமாகு மெடுத்துவந்து
அண்ணலரு ளாலெயதைத் தூபங்காட்டி
　　அன்புடனே வைத்துமதி னன்புகாணே. (30)

அம்பாக வதையெடுத்து வைத்துக்கொண்டு
　　யரியாங்கு வருகலிக்கு வென்றுசொல்லி
தம்பமுடன் பன்னிரண்டு லட்சஞ்சேவி
　　சார்வாக வதையெடுத்துத் தொட்டதெல்லாம்
இம்பமுட னுன்னிடத்தில் வருமாம்பாரு
　　இதுபோலுந் தொழிலில்லை யெங்கும்பாரு
வம்பருக்கு இதுமார்க்கஞ் சொல்லவேண்டாம்
　　மாதவனுக் கிதுதனையே வழுத்துவாயே. (31)

வழுத்தியதோர் தூக்கணத்தின் கூட்டுக்குள்ளே
மயயாக வேறொன்று இருக்கும்பாரு
பழுத்திடவே தூங்குதலி னிடத்திற்கேளு
பரிவாகச் சாணுக்கு ளிருக்கும்பாரு
இழுத்திடவே மயிர்போல வெள்ளிக்கம்பி
யெனுநிறமாம் பிரித்ததனைப் பாருபாரு
அழுத்திடவே தெரியாது சூட்சமார்க்கம்
யாருமிதை யறியார்க ளருமைதானே. (32)

அருமையடா வதுதனிலே தீயைமூட்டு
அதுவேகா திருக்குமடா வதிகசித்து
பெருமையுட னெடுத்துவைத்துக் கொண்டுகேளு
பேணியே முன்வைத்துப் பின்னேறென்று
கருமையுட னிருபத்து லட்சஞ்சேவி
கைக்குள்ளே வைத்தெந்த நீரில்நீந்த
ஒருமையாய்த் தொப்புழுக்கீழ் தண்ணீர்நிற்கும்
உரைக்கமுடி கூடாது வுகந்தசித்தே. (33)

சித்தாண குளவியுட கூட்டிலப்பா
செப்புகிறேன் மேற்கண்டு முயல்வாற்போலே
அத்தம்வைத்து யெடுக்கவரி தப்பாகேளு
அம்மையென்ற மூன்றெழுத்து வாலைபூசை
சத்திஓம் ராமாவென் றுருவும்போடத்
தானை மேலேபொன் போலத்தோணும்
வித்தையிதி லிருக்குதடா அநேகங்கோடி
விழுந்தவரை யெழுப்புமடா ஓமாம்பட்டே. (34)

பட்டென்று கோடியுரு சேவிசேவி
பாராய்நீ நாங்கணத்தான் கூட்டில்வேரைக்
கட்டென்று யெடுப்பதற்கு விபரங்கேளு
சாணவே குத்தொளிபோருக்கெழும்பும்
வட்டென்று விடுகூகூ சிசியென்று
வகைலெட்ச முருச்செய்து நீறதாக்கித்
தொட்டென்று புத்துத்தேன் தன்னில்மத்தி
தொட்டிட்டுப் பாரிதுவஞ் சனமுமாமே. (35)

அஞ்சனமாங் கூட்டிலெல்லாம் வேரைச்சொன்னேன்
அதுதனக்குப் பூசையது சொல்லக்கேளு
விஞ்சனமாம் பாலருசி நனைத்துவைத்து
வெத்திலையும் பாக்குமுதல் வஸ்துவைத்துக்
கஞ்சனமா முருவேத்திப் பூசைபண்ணு
கடினமா மதிசயந்தான் முப்பத்தாறும்
துஞ்சிவிட்டாற் கிடையாது அதிஷ்டம்வேணும்
சொல்லார்கள் குருவறியச் சொல்லாரென்னே. (36)

சுந்தரானந்தர் அதிசயகாரணம் ௫௬.

முற்றிற்று.

ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த சுந்தரபாண்டியம் அம்மையப்ப பிள்ளை யவர்கள் குமாரர் பொன்னையாபிள்ளை யவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

இருபத்தொன்பதாவது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியம் ௫.

பலகலைக ளுணர்த்துபர சிவமேகாப்பு
    பார்வதியுங் கணேசனோடு கந்தன்காப்பு
கலைவாணி யயன்திருமால் பாதம்போற்றி
    கற்றுணர்ந்த நாதாக்கள் பாதம்போற்றி
உலகத்தோர்க் கின்னமொரு உண்மைசொல்வேன்
    ஓகோகோ களிச்சியிலைச் சாறுநாழி
சிலகத்த கவுதும்பைச் சாறுநாழி
    சிவந்தகண்டங் காரிச்சார் நாழிகூட்டே. (1)

கூட்டடா கால்தலையும் நடுவறிந்து
    கும்பிட்டுக் குருவருளை தியானஞ்செய்து
மூட்டடா நிலப்பனையின் கிழங்குச்சாறு
    முக்கியமாய் மூத்திரமோர் படியுங்கூட
நாட்டடா யேரண்டத் தெண்ணெய்நாழி
    நலமாக இவையெல்லாம் பாண்டத்தூற்றி
காட்டடா அதிமதுரம் முத்தகாசு
    கனிவான சாதிக்காய் கிராம்புதானே. (2)

தானென்ற கோஷ்டமும்ரோ கணியுஞ்சுக்கு
    தனித்துநின்ற கார்போகி யரிசியேலம்
ஊனென்ற ஒன்பதையும் விராகன் தூக்கி
    உத்தமனே முன்சாற்றி லரைத்துமையாய்
வேனென்ற முன்சாற்றிற் கலக்கிப்போடு
    வெகுசுருக்காய் வாலுகையின் மேலேயேற்று
ஏனென்ற மெழுகுபதம் வரத்தீபாக்னி
    எரித்தெண்ணெய் வடித்துவைத்து இயம்பக்கேளே. (3)

கேளப்பா கரண்டியெண்ணெய் யொருநாட்கொள்ள
கெடியான கருங்கிரந்தி செங்கிரந்தி
நாளப்பா கள்ளிப்பூக் கிரந்தியோடு
நலமான மேகவெட்டை மேகவாய்வு
சூளப்பா மேகமென்ற திருபத்தொன்றுஞ்
சூட்டிப்பார் புலிபாய்ந்த ஆடுபோலாம்
வேளப்பா யெரித்தசிவன் சொன்னமார்க்கம்
வெட்டவெளி யாகவுந்தான் வீசினேனே. (4)

வீசியென்ன பத்தியந்தான் புளியாகாது
விதமான உப்பாகா மோருமாகா
மாசியென்ன பூசினிக்கா யுளுந்துமாகா
மகவாழைக் காய்கடுகும் வாடையாகா
வாசியென்ன மதனங்கள் கிட்டவாகா
மக்களே மாங்கிஷங்கள் மச்சமாகா
யேசியென்ன செம்புலியும் விராகமாகா
இதைத்தள்ளிப் பத்தியமாய்க் கொண்டிடாயே. (5)

சுந்தரானந்தர் வயித்தியம் ௫

முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

முப்பதாவது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# சூஸ்திரச்சுருக்கம்.

பூரணமாய் நின்றசுழி முனையேகாப்பு
பொதிகைமுனிக் கருத்தந்தோன் பாதங்காப்பு
வாரணிந்த முலையாள்தன் பாதங்காப்பு
மகாகோடி முனிவர்சித்தர் பாதங்காப்பு
தாரணிந்த கரிமுகவன் பாதங்காப்பு
தப்பாமற் சொல்லுகிறேன் லிங்கமையா
பேரணிபோல் முழங்கிவரு மொன்பதுக்குள்
பெருநூலுங் குருநூலுங் காப்புத்தானே. (1)

ஆதியிலே கும்பமுனி பதினெண்பேரும்
அருட்பெருகி யானந்த மயமாய்நின்றார்
சோதியிலே நின்றுகொண்டு சொக்கினார்கள்
சொரூபமென்ற சுழிமுனையிற் சுடரையுண்டு
வாதியென்ன ஆத்தாளை வணங்கிப்போற்றி
வந்தவழி போனவழி ஞானரூபம்
ஓதியுணர்ந் தேயிருந்து உண்மைகண்டு
உரைக்கிறே னென்பதுக்கு ளுரைக்கிறேனே. (2)

உரைப்பதென்ன மறைப்பதென்ன உலகத்தோரே
உன்னைவிட அவளையன்றி யொன்றுமில்லை
மறைப்பதென்ன தலையழுக்கைச் சீச்சியென்று
மனந்தனிலே மாயையாய் வாழ்வோமென்று
திறைமுறையாய்ப் போதத்திற் போதமென்று
சொல்லுவார் மனமுறையார் சுத்தமாடு
குறையொன்றும் நினையாதே ரெண்டுமொன்று
குருவான ஆதிகற்பங் கொண்டபேர்க்கே. (3)

கொண்டுகண்டாற் பூரணமும் வாலையாகும்
கோடிகற்பங் கோடிதொந்த மாடுமோடும்
கண்டுபிது பணவிடைதான் புனுகுகூட்டிக்
சுங்காளி வசியநமா வென்றுவோத
யண்டுமுன்னாள் செய்தவினை யெல்லாம்போக்கிப்
பலிக்குமடா வசியமிது பாருநீதான்
கொண்டபெண்ணைப் போலவந் தடிமையாவாள்
கும்பிட்டுக் கேட்டதனங் கொடுப்பாள்தானே. (4)

தானேதா னிரண்டுபணத் தூக்கம்வாங்கி
சாதிலிங்கம் வராகனிடை கெந்திசூதம்
ஊனேதா னுமிநீரா லாட்டிவில்லை
உயர்ந்தவெள்ளைக் கற்சுண்ணத் துள்ளேவைத்து
கானென்ற புடம்போடக் காடையாகும்
கண்கொள்ளாச் செந்தூரம் அருணன்போலாம்
வானென்ற வஸ்துவுடன் சுத்திவைத்து
வாமத்திற் பூசித்து வணங்கிநில்லே. (5)

வணங்கியே நவலோகத் துள்ளேயீய்ந்தால்
மாற்றுறங் காணுமின்னம் வகையைக்கேளு
அணங்கியே யிதையெடுத்துச் செந்தூரித்து
அனுப்பானம் முன்போலே கொடுத்தாயானால்
பிணங்கியே போகாது யெண்பதாகும்
பேசாதே சாபம்வரும் ஆணையிட்டோம்
இணங்கியே பணவிடைநீ கொண்டாயானால்
யெமனென்ற பேர்களெல்லாம் யேங்கிப்போமே. (6)

ஏங்காமல் மூன்றுபணத் தூக்கம்வாங்கி
இதமான சுரைக்காய்வேர்க் கரியாலாட்டித்
தூங்காம லாத்தாளைப் பூசைபண்ணி
சுத்தமுள்ள வெத்திலையிற் பணம்போற்கட்டி
தாங்கிஓம் அஞ்சனா தேவிபூமி
தட்சணிமுன் தெரிசிக்கச் சிவாயவென்று
வாங்கியே சிமிட்டாமற் பார்த்தாயானால்
வழிதிறந்து பதிங்காத வழிதான்போமே. (7)

போமேதா னதிலுளதே வதைகள்தோணும்
பொல்லாத கருப்போடு புதைபல்தோணும்
ஆமேதான் பெலிகேட்டால் அங்உங்கிரியும்
அகோரமுள்ள வயிரவதே வாவாவென்று
ஓமேதான் ருத்ரனுடை பூமிச்சாம்பல்
ஓதியெரி நால்மூலே யொன்றுங்கேளார்
வாமேதான் பேய்பிணிக ளகன்றுபோகும்
வாணிபதம் பூசித்து வைத்துக்கொள்ளே. (8)

வைத்தபின்பு காலுபணத் தூக்கம்வாங்கி
வளமாம்பேய்ப் பீர்க்குப்புல் லாமணக்குக்
கைத்திட்ட மாகவுமே முறைதப்பாமல்
கருகாமற் பூப்புடத்திற் றயிலம்வாங்கி
நைத்திட்டுப் போகாமல் நமஓமென்று
நவமான சுழிமுனையிற் றிலதம்போட
கைத்திட்ட மாகுமடா காணமாட்டார்
சண்டமுனி காளியுடன் பூதம்போமே. (9)

எல்லாரும் பிழைக்கவல்லோ யிதனைச்சொன்னோம்
இதைப்பழித்தாற் பெருவயிறு மிடியும்வீழும்
பொல்லாத நோய்கள்வரும் புழுத்துச்சாவார்
புலையனைப்போ லெங்நாளுந் திரிவான்மட்டை
நல்லநூ லிதுவென்று பார்த்தாயானால்
நாயனைப்போல் நீயிருந்து நன்மைசேர்வாய்
சொல்லாத வித்தையெல்லா மிதிலேசொன்னேன்
சூட்சமெல்லா மொன்பதுக்குள் நுணுக்கமுற்றே. (10)

சுந்தரானந்தர் சூஸ்திரச்சுருக்கம் ௰.

முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு வித்துவான் குழந்தை வேலுப்பிள்ளையவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பராசத்திதுணை.

முப்பத்தோராவது:

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௰௪.

பரையின்றன் நிலையுணரும் பரஞான முணர்ந்தோர்க்குப் பரத்தி னுண்மை
திரையலையும் விரைசெறியுஞ் செங்கண்மால் கிருபையதாற்சேர்ந்தோர்முத்தி
குரவர்தமிழ் பதியவுமே அரிஞான முணர்ந்தோர்க்குக் கூற லுற்றேன்
நரைதிரையுங் கறுப்பேறும் ஞானநிலை யறிந்தோர்க்கு நன்மை தானே. (1)

பத்தியுடன் பரைநிலையை யறிந்துகொண்டு
பரைஞான வெளிமயக்கம் பார்த்துப்பார்த்துப்
புத்தியுடன் கொள்பவனே பெரியோனுவான்
பூரணமாஞ் செகசோதி பிறந்துவாழும்
அத்தியுட னம்பரத்தின் நிலையைக்கண்டு
அறிவாலே அறிந்துணர்ந்து அப்பால்நோக்கிச்
சத்தியுடன் மாயையெல்லாந் தனித்துப்பார்த்தால்
சாவதுவு மில்லையென்று சாத்தினேமே. (2)

சாத்தினேங் குண்டலித்தா யடித்தாளப்பா
சாகாத காலதுவாம் மக்காள்சொன்னேன்
மாத்தினேங் குணம்பித்தாம் மாயையப்பா
மாயைகண்டு சமரசமாய் வெளியிலேகி
ஆத்தினேம் வெளியில்நின்று பார்க்கும்போது
அப்பவல்லோ தெரியுமடா தோயத்தானம்
தேத்தினேஞ் செகமாயை விட்டுநாங்கள்
சிவன்செயலைக் கண்டிருந்து தேறினேமே. (3)

தேறினேம் விஷமாயை விட்டுநீங்கி
செகசால வித்தையெல்லா மாடியாடி
ஆறினேம் தனிவீடாஞ் சுழியிற்பத்தி
ஆடினதும் அடங்கினதும் பிறப்பிறப்பு

ஏறிமன மேறியங்கே பார்க்கும்போது
    எட்டுரெண்டும் பத்தாகத் தோன்றித்தப்பா
ஊறினேம் உடம்பெல்லாம் அமுர்தத்தாலே
    உகாரத்தின் பொருளாலே ஊறினேமே. (4)

வாசியா மெழுத்தை மூட்டி மந்திர மதனைச் சொல்லத்
தேசிபி விரண்டு வைத்துச் சிக்கெனச் சிவத்தை யொட்டி
மாசியாம் விழியாள் நோக்கி மனத்தினுற் றெளிந்து பார்க்க
ஊசிபோல் நின்ற சோதி உகாரம்வந் தெய்துந் தானே. (5)

அப்பனே மனத்தையங்கே யொன்றில்வைத்து
    அறிவாலே பரைநிலையை யாடிப்பார்த்தால்
ஒப்பில்லா மணிவந்து சேருமப்பா
    உட்பொருளும் வெளிப்பொருளு மொன்றுய்த்தோணும்
அப்பனே விழிநிறைந்து பார்த்தப்போது
    ஆத்துமங்கள் பெருவெளியில் நின்றவாறும்
அப்பனே தெரியுமடா பரமன்வீடு
    ஆதியந்தச் சோதியொளி யாகுந்தானே. (6)

ஆத்துமங்கள் வெளியில்நின்று ஆடும்வாறும்
    ஆத்துமங்கள் கருவில்நின்று உதித்தவாறும்
ஆத்துமங்கள் தன்நிலையைக் காத்தவாறும்
    ஆத்துமங்க ளந்தத்தி லலேயும்வாறும்
ஆத்துமங்கள் முன்சென்ற பாவத்தாலே
    அடிபட்டு வெளிதனிலே அடையாவாறும்
ஆத்துமங்கள் நிலைபெருகி அறிவுமட்டும்
    அரிபோலே விழிநேர்ந்தாற் றெரியும்பாரே. (7)

தெரியுமடா செகசோதி கண்டபோது
    தெய்வமெல்லாந் தெரியுமப்பா மெய்யுமாச்சு
அரியானு மாத்தாளு மொன்றுய்நின்று
    ஆட்டிவித்த விபாமதுங் காணலாகும்
தெரியுமடா சித்தரெல்லாங் கண்ணிற்றேனும்
    திரிபுவன உலகமெல்லாம் வெளியாய்க்காணும்
பிரியமுடன் சிவவெளியை நோக்கிப்பார்த்தால்
    பேராகும் ஞானமெல்லாம் பேணிப்பாரே. (8)

நவ்வெழுத்தும் மவ்வெழுத்துங் குண்டலியுமாச்சு
நடுவிலநின்ற சிவ்வெழுத்தும் மனமுமாச்சு
வவ்வெழுத்தும் யவ்வெழுத்தும் பிடரியாச்சு
வயிற்றிலே நின்றெழுத்தும் சிவ்வுமாச்சு
அவ்வெழுத்தும் அகாரமுத லந்தமாச்சு
ஆதியிந்தப் பேரொளியாம் உகாரமாச்சு
உவ்வெழுத்தும் பெரியெழுத்தைச் சாத்தவல்லோர்
உண்மையுடன் சிவநிலையை ஊன்றலாமே. (9)

மெய்யெழுத்தாய் நின்றதுவே விழியுமாச்சு
வேதாந்தம் பார்த்துணர அறிவுமாச்சு
அய்யெழுத்தாய் நின்றதுவே வாலையாச்சு
ஐந்தெழுத்தாய் நின்றதுவே சரியையாச்சு
உய்யெழுத்தாய் நின்றதுவே பரையுமாச்சு
உம்பர்களுந் தேவர்களுங் காணலாச்சு
பொய்யெழுத்தோ தாமல்மெய் யெழுத்தையோதி
புகழ்ந்தவனே மெய்ஞ்ஞானி யாகுந்தானே. (10)

அரிராம வாலைசத்தி அபிராமிசத்தி
ஆதிசத்தி அனந்தசத்தி அநாதிசத்தி
விரிகின்ற புவனமெல்லாம் பிறந்தசத்தி
வேதாந்த சத்தியடா மெய்ஞ்ஞானசத்தி
துரியமுடன் காயத்திற் சூழ்ந்தசத்தி
சொற்பெரிய பராசத்தி ஞானசத்தி
கருவிகர ணாதிகளை யாட்டுஞ்சத்தி
காணப்பா பனிரண்டு சத்திதானே. (11)

பன்னிரண்டு வீட்டிலேதா னிருந்தசத்தி
பார்வதியா மென்றுரைச்சி அவள்தானப்பா
கண்ணிரண்டுங் காதிரண்டும் மெய்யுமாகிக்
கலந்திருந்து விளையாடுங் காட்சிதன்னை
எண்ணிரண்டாங் கோட்டிலவ ளிருந்துவிளையாடி
யிருந்தயமாங் கமலமெலாஞ் சூழ்ந்துமூடி
சொன்னரெண்டு வீட்டினிலே யிருந்தாள்பாரு
சோதிமெக சோதியடா ஆத்தாள்தானே. (12)

தெளிவாகி மனமாகித் தெளிவுமாகி
    தேர்ந்துணர்ந்த பரஞானத் தொளியுமாகி
ஒளிவாகி ஓங்காரப் பொருளதாகி
    உள்ளொளிக்குட் சோதியுடன் உகாரமாகி
வெளியாகி விபரமுமாய் நினைவுமாகி
    வெட்டவெளி ஞானத்தின் வேதையாகி
சுழியாகி யொருசுழியுஞ் சூட்சமாகி
    சொற்பெரிய நாதாந்த சமையமாமே. (13)

நாதாந்த சமையமெல்லாஞ் சொல்லிவிட்டேன்
    ஞானநெறித் தன்மையெல்லாம் நாடிவிட்டேன்
வேதாந்த சாஸ்திரம்போ லாடிவிட்டேன்
    மெய்ப்பொருள்வந் துதவுகின்ற வெளியுஞ்சொன்னேன்
பாதார விந்தமெல்லா மோதிவிட்டேன்
    பராபரத்தி னந்தமெல்லாஞ் சொல்லிவிட்டேன்
நாதாந்த சமையத்தில் நின்றேன்ஞானி
    நான்பெற்ற பேரெல்லாம் நாட்டினேனே. (14)

சுந்தரானந்தர் ஞானசூஸ்திரம்.யச.

முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு முத்தைப்பிள்ளை யவர்கள் குமாரர் வித்துவான் குழந்தைவேலுப்பிள்ளை யவர்களிடமிருந்து [illegible]ங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

மூப்பத்திரண்டாவது:

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

# மூப்பு உ௫.

பூமிநாத மேகமே புனற்சொரிந்த பூவதாம்
நாமடா ரவிமுகத்தில் ரவிநிறைந்த விந்தடா
சோமனூத மீறியே சொரூபம்வைத்த சத்தியாம்
ஏமவித்தை-பூரண மிகுந்த தட்ட சத்தியே. (1)

அட்டசத்தி யாம்புரி அட்டகூறு நேர்மைகேள்
திட்டமா மெழுவகைப் பிறப்பறிந்த யோகிகள்
மட்டிலாத பஞ்சவாசல் மனமொடுங்கும் வீதிதான்
குட்டதாங்கல் லுப்பிதென்று கூறுவார்கள் மேகமே. (2)

மேகமேசொ ரிந்திடப்பின் விண்மண்சத்தி மீறவே
ஆகமேதெ ளிந்தசத்தி ஆகரிரு லாகவே
பாசமாள சுத்திசுத்தி பராபரைய லிந்ததே
மேகநீரு லாவவே வெளுத்தவுப்ப தானதே. (3)

உப்பறிந்த வாதியல்லோ வுணர்வதான வாதிதான்
உப்புமூன்று மூத்தியா யுலாவுகின்ற சாதிகள்
அப்பிலே விளைந்தமுத்தி யானதுவும் உப்படா
செப்பினே மறிந்துகொள்வர் தேகசித்தி ஞானியே. (4)

ஞானியாவ தேதடா நலம்பிரிந்த வுப்பிலே
தேனீய்வைத்த மருவடா சிறந்தபூர ணத்துடன்
மானமாங்கல் லுப்பிலே வகையுடன்வகை முறையிலே
கானமிட்ட சுண்ணமாங் கதிரவன்மு கத்திலே. (5)

முகத்திலே தெளிந்தஉப்பு மூடுகார சாரமும்
அகத்துளே பொதிந்துபுட மாகரித்தி ருக்கவே

செகத்திலடங் கிதவேதை சென்றிடுமண் நீரிலே
மகத்ததா னகாரமே லுரைந்தஉப்பு நின்றதே. (6)

உப்பில்நவச் சாரமேதா னெட்டியே பொடித்திடு
அப்பதுபி றக்கப்பீங் கானில்லவைக்க நீரதாம்
தப்பிலாத காரமுஞ்சவ் வீரமுஞ் சரியதாய்
ஒப்பிலாகற் பூரமே யுலாவியூதச் சுண்ணமே. (7)

சுண்ணமோடு வீரமும் சோமநாத சுண்ணமும்.
எண்ணமீறு சாரமு மிடைசரியி னடயதாய்
வண்ணமீற மாரியாம் வளங்குநீர் மகத்துவம்
எண்ணெனச் சரக்கெலா மிதிலேசுண்ண மாகுமே. (8)

சுண்ணம்பூரம் நீரிலே துவைத்தகாரங் கட்டிடு
எண்ணமாமச் சீனமு மிதிலேவைக்க நீரதாம்
வெண்ணவேக வீரமும் விளங்குபூரம் நீரிலே
கண்ணவாட்டி நீயுஞ்சவுக் காரமீதி லப்பிடே. (9)

அப்பியேநீ யனலிலே வாட்டஎண்ணெய் கக்கிடும்
உப்புநீரும் பூரநீரும் உலாவியேபின் னுப்பிலே
செப்புமித் தழலிலே சென்றுநன்று யூகவே
அப்புநால்வ ழலைச்சுண்ண மாகிவெள்ளை யானதே. (10)

வெள்ளையான வழலையில் மீறுங்கார மேத்தவே
உள்ளியசவ் வீரசுண்ண முப்புறுத சுண்ணமும்
வெள்ளைசீனஞ் சுண்ணநீர் வெள்ளைவைத்த சாரநீர்
வள்ளவேகல் வத்திலிட்டு மருவவே யரைத்திடே. (11)

அரைத்திடு மருந்ததை அவ்வழலைக் கப்பியே
தரைக்கடங்கா வெயிலிலே தான்மயங்கப் போட்டிடு
உரைத்திடுநற் சுண்ணமாய் உத்தகார மேறியே
கரைக்குளடங் காதிது காரமிட்ட வழலையே. (12)

வழலையாட்டுப் பாரடா மகத்தாம்வேதை பாரடா
வழலைபட்ட யிடமெலாம் வாதவேதை நீரடா
வழலைபட்ட விடமெலாம் வலியுமே சரக்கெலாம்
வழலைபோட்டு மணிகளோசை மணிகனகக் குளிகையே. (13)

குளிகைகாண அட்டசித்தி கொண்டேயோடுங் கவுனமே
குளிகைசார ணேகளல்லோ குலவுமிக் குளிகைதான்
குளிகையட்ட லோகருக்குக் குலாவியே பழுத்திடுங்
குளிகைகையில் வாழவே கோடிசித்து மாடுமே. (14)

அடிகளான யேமவித்தை அன்புட னுரைக்கிறேன்
துடிவழலை நீரிலே துவைத்தொரு துருசது
வடிவுசுத்த வெள்ளையாம் மாலின்தேவி சுண்ணமாம்
கடினவங்க வீரமுங் கலக்கவெள்ளை நீரிதே. (15)

நீருவங்கம் நிமிளைசுண்ணம் நீறிதங்கச் சுண்ணமாம்
நீருதங்கம் நீறியே நிலைத்ததோ ரகத்திலே
நீருசூத வீரனை நிசமதிலே சுண்ணமாம்
நீருவீறு சூதமே லிங்கவெள்ளைச் சுண்ணமே. (16)

லிங்கத்தின்சுண் ணத்திலே நீறும்லோகச் சுண்ணமாம்
கங்கைபெற்ற லோகம்நீறுங் கைக்குருநா கத்திலே
தங்கமாத்து நூறதாம் சத்திபேதி யேதெனில்
தங்கமத்த தங்கமே சத்தபேதி யாகுமே. (17)

பேதியான பரிசனம் பேதியாசம் பேதியாம்
நீதியான வழலையாட்டு நிலைகளேது அவர்கள்தான்
வாதியான யெண்சரக்கு மாட்டலாம் வகையதாய்
சோதியான பூரணம் சொக்கியாடும் வழலையே. (18)

வழலைச்சுண்ணம் வழலையாலே மாட்டுகின்ற வுப்பினால்
வளமையான மேகநீர் மாதலொட்டு மாகநீர்
இளகியேகை முறையதா யிருந்தஉப்பு நீரிலே
வழலைசுத்தி வழலைசுண்ண மாட்டுசவுக் காரமே. (19)

காரமாம்வெங் காரமும் காரநீரிற் கூட்டியே
காரமேசெந் தூரமே கதித்ததோர்சு ரோணிதம்
வீரமேவு வேதையாம் வெங்கலமுந் தங்கமாம்
காரமேசெந் தூரநவ லோகமோடு தங்கமே. (20)

தங்கமத் பத்தரை தங்கமாகு மப்பனே
வங்கநீரு துருசிலப்பி வாதகுஞ்சூதங் கட்டிடும்

சிங்கிகாக்கு மப்பனே சேருஞ்சார ணையதாம்
வங்கமேது மலைகளேது அந்தவேதை காணவே. (21)

காணவே புளியினால் கம்பிவெடி யுப்பினால்
தோணவேகல் லுப்பிதொன்று கூடனது காலிடை
வேணுநவச் சாரமொன்று வேதியாதடுக்கவே
ஊணவேபீங் கானில்வைக்க வுறுதியாகுஞ் சுண்ணமே. (22)

சுண்ணமேபீங் கானில்வைத்துப் பனியில்வைக்கத் தூணிநீர்
அண்மையாக ஆறுதர மிந்தவகை யப்பனே
வண்மையான நீரிலே வலுக்குமேவெங் காரமும்
உண்மையான சாரமும் உரைக்குமேயின் நீரிலே. (23)

நீரதான சாரநீர் நினைவுகொண்டு பாரடா
பாரமீது சத்தடா பராபரை வகுத்தது
சீருநீதி நீரடா சிறந்திருந்த கொங்கணன்
சேருநூற மாலமேறி சென்றுபாரு வேதையே. (24)

வேதைகாட்டக் கைமுறை வேணுமல்லோ பாரினில்
ஆதரவே நூலடா அறிந்துபாரு உண்மையாய்
ஓதியதோ ருப்பையெல்லாம் உமையாள்வந்து செப்புவாள்
ஆதியான பூரண மறிந்துபாரு சோதியே. (25)

சுந்தரானந்தர் முப்பு உரு

முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம்
க. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி
இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன்றுணை.

முப்பத்துமூன்றுவது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# பூஜாவிதி ௩௭.

ஆதிபரா பரமான மூலநாயன்
அறுமுகவ னிருபதத்தை அன்பாய்ப்போற்றி
வீதிநடு வீதிதனில் நின்றசோதி
விளங்கிநின்ற சரஸ்பதியாள் பாதம்போற்றி
பாதிபிறை விமலருமை திருமாலோடு
பார்தனிலே லெட்சுமிதன் பாதம்போற்றி
சோதிமய மாகிநின்ற பூசைதன்னைச்
சொல்லுகிறேன் கணபதிதன் பாதங்காப்பே. (1)

கேளடா அறுகோணந் தன்னைநன்றாய்க்
கீறுவே னாறுமுக பாதம்போற்றி
தாளடா யிடைரேகைக் குறுக்கேகீறி
சாற்றுகிறே னொருநெல்லு நீளமப்பா
வாளடா பிங்கலையின் ரேகைகீழே
வயணமாய் நாலுநெல்லு நீளங்கீறு
நீளடா சுழிமுனையின் ரேகைகீறி
நிகழ்த்துகிறேன் மூன்றுநெல்லு நீளங்கீறே. (2)

கீறியே யிடையிடையே ரேகைரெண்டுங்
கீழாகப் பிங்கலையின் மையங்கூட்டி
ஆறியே சுழிமுனையின் ரேகையின்கீழ்
ஆச்சரியம் கீழ்வாங்கி மேலேயேத்தித்
தூறியே சுழிமுனையின் ரேகைரெண்டில்
திறமாகப் பாச்சியபிங் கலையைக்கேளு
மாறியே யிரண்டுநெல்லு நடுவேநிற்க
மைந்தனே யிரண்டுநெல்லுங் கடசிநிற்க. (3)

கடசிநெல்லும் நடுநெல்லும் பொருந்தும்மேலே
கடினமில்லை யென்றொருநெல் மேலேவைத்து
துடசியுடன் நெல்நுனியின் விரலையூன்றிச்
சுகமாகப் பிங்கலையின் கீழேவாங்கி
நடசியென்று சுழி முனைமேற் பொருந்திவைத்து
நன்றாகக் கீழ்வாங்கி நிற்கரேகை
விடசியடா பிங்கலையின் ரேகையொன்று
விதமாக அதையுமிப் படியேகீறே. (4)

இப்படியே தான்வாங்கிச் சுழியின்கீழே
யிதமாக முன்ரேகை நடுவிலேத்தி
இப்படியே அதின்சரியாய் வாங்கிக்கொண்டு
யியம்புகிறேன் நுபினிரண்டு மொன்றாய்ச்சேர்த்தால்
இப்படியே ஆனந்த நிர்த்தஞ்செய்வாள்
இதற்கீடு வுலகமெல்லாம் நலமோயில்லை
இப்படியே கீறிலைந்து கோணஞ்சூழ
விருக்கும்நடுக் கோணமென்றே யியம்பக்கேளே. (5)

இயம்புகிறேன் நடுவீட்டிற் கிடையாம்வீட்டில்
என்மகனே மஞ்சளிடு பிங்கலைபிற்கேளு
நயம்புகிறேன் பச்சையடா கீழாம்வீட்டில்
நன்றாக வெள்ளையிடு மூன்று மாச்சு
தயம்புகிறேன் மேல்மூன்றின் சிகப்புக்கேள்பின்
தயவாகக் கீழ்கறுப்பாய்ச் சாற்றிக்கொண்டு
வயப்புகிறேன் பஞ்சவர்ண மைந்துமாச்சு
வாகாகச் சிகரத்தை வகுக்கக்கேளே. (6)

கேளப்பா மேல்மூன்றில் நடுக்கோணத்திற்
கிருபையுடன் ரீங்கிலியும் ஓம்மென்றுநாட்டு
நாளப்பா நாட்டினபின் கீழாப்வீட்டில்
நன்றாக நவ்விட்டுப் பிங்கலையிற்கேளு
வேளப்பா மகாரமிட்டுக் கீழ்மூன்றிற்றுன்
வெகுசுருக்கு நடுவினிலே சிகாரம்போடு
ஆளப்பா வதுக்கிடையில் வகாரம்நாட்டு
அதினுடைய பிங்கலையில் யகாரம்போடே. (7)

போடுவாய் நடுவுடைய பிரகாரத்திற்
புகலுகிறேன் அங்கென்றும் உங்கென்றுந்தான்
ஆடுவாய் மங்கென்று மூட்டேயின்னம்
ஆச்சரியம் லாலீலூ வென்றுநாட்டு
ஈடுகிற நடுக்கோணந் தனக்குப்பின்பு
இயம்புகிறேன் ஐங்கோணந் தன்னைச்சத்தி
ஆடுகிற திதனுட்டு கையிலாசமூர்த்தி
அடியேனுக் குரைத்தபடி அறைகிறேனே. (8)

அறைகிறேன் பானுவைப்போல் விருத்தம்ரண்டு
அப்பனே ஐம்பத்தி றொன்றையுந்தான்
வறைகிறேன் நாடிப்பின் றுலுவாசல்
வாகாக வாசலிரு வீதியாக
நிறைகிறேன் முன்பேழை சதுரமாக
நினைவாகக் கீறியபின் நிதானங்கேளு
நிறைகிறேன் நால்வாச லைம்பதாகத்
தீர்க்கமாய்க் கொடிக்கம்பம் போலேநாட்டே. (9)

நாட்டியே நுனியதனிற் சூலம்போட்டு
நலமாகச் சிங்கென்று மங்கென்றிட்டு
ஆட்டியே யின்னமொரு சேதிதன்னை
அப்பனே சொல்லிவிட மறந்துபோனேன்
சூட்டியே அக்ஷரங்க ளிட்டதெல்லாம்
சுகமாக வதன்கீழே சிகாரமிட்டு
மாட்டியே அக்ஷரத்தைச் சுத்திவாங்கி
வளையத்தி னிடைதனிலே சிங்குவங்கே. (10)

வங்கென்று இருபுறமும் வைத்தபின்பு
வாகாக இருமூலை நாலிற்கேளு
சிங்கென்று கணபதியும் வீரபத்திரன்
திறமான தெக்ஷண மூர்த்தியோடு
வங்கென்று சுப்பிர மணியரோடும
வாகாக உள்மூலை நாலிலேயும்
பங்கென்று அவர்களையும் வைத்துப்பூசி
அப்பனே வெளிமூலை நாலிற்கேளே. (11)

கேளப்பா வயிரவனுஞ் சண்டிகேசன்
　　கிருபையுள்ள இந்திரனுங் கந்தனைத்தான்
நாளப்பா வைத்துப்பூ சித்தபின்பு
　　நலமாக அஷ்டகெஜ மஷ்டநாகம்
வாளப்பா அஷ்டசித்தி அஷ்டபாலாள்
　　வரிசையுள அஷ்டவசு அஷ்டமூர்த்தி
நாளப்பா யிவர்களுட பீசம்போட
　　நவிலுகிறே னென்னுடைய தீக்ஷைபாரே. (12)

பாரடா என்னைப்போ லாருஞ்சொல்லார்
　　பரிவாகச் சொன்னதென்ன குருவேசொல்லும்
வீரடா காயாதிபிரா ணயத்தோடு
　　விதமாகக் கற்பங்கள் கொள்ளும்மார்க்கம்
தூரடா புவனையுட ஆட்டத்தோடு
　　சுகமான தீக்ஷையொன்று சொன்னேன்பாரு
ஆரடா யிவ்வளவும் வெளியாய்ச்சொன்னார்
　　ஆச்சரியஞ் சித்தர்சொல்ல வில்லைத்தானே. (13)

தானென்ற யென்னூலைப் பார்த்துயீசன்
　　தப்பாமற் போட்டுநடு கோணத்திற்கேள்
வேனென்ற உகாரமிட்டுச் சுழித்துக்கீழே
　　விதமாகச் சுழித்துசுத்தி வளைத்துக்கொண்டு
ஊனென்ற சிங்குவங்கு நாட்டிஞக்கால்
　　உலகமெல்லா மப்பனே யிதுவேயாச்சு
தேனென்ற சத்திசிவ மிதுவேயாச்சு
　　சிதம்பரத்தின் மூலமெல்லா மிதுவேயாச்சே. (14)

ஆச்சப்பா யின்னமுங்கேள் நடுக்கோணத்தில்
　　ஆதிசிவன் சாம்பவியைப் பதித்தபின்பு
பேச்சப்பா யினியேது ஒன்றுமில்லை
　　பெருமைமெத்த தாயையுநீ பூசைசெய்ய
பாச்சப்பா தகடுதான் கனகம்நன்று
　　பண்பாக யில்லாட்டாற் செம்பாற்செய்து
வீச்சப்பா ஆகாது யெட்டுவிரல்நீளம்
　　விதமான அகலமது அளவுதானே. (15)

தானேதான் செய்துகொண்டு நடுக்கோணத்தில்
தயவாகப் பணவிடைதங் கத்தைவார்த்து
வேனேதான் அக்ஷரங்கள் வரைந்தபின்பு
விதமாகப் பூசைசெய்ய விதத்தைக்கேளு
தேனேதான் பூசைமடம் முகம்வடக்குச்
செய்துகொண்டு மேற்கட்டும் விதானஞ்செய்து
மானேதான் நாற்காலிக் கட்டிற்போட்டு
மவுனமுடன் மெத்தைவிரித் தொலுகுபோடே. (16)

ஒலுகிலே தாயைநீ பூசைசெய்ய
ஓதுகிறேன் யென்மகனே உறுதியாகச்
சிலுகிலே நாலுவித சாதியுண்டு
செப்புகிறேன் பதுமினிசித் தினியும்நன்றாய்
மலுகிலே சங்கினியத் தினிதானப்பா
வாகாகப் பத்மினியே மெத்தநன்று
குலுகிலே சித்தினிதா னிரண்டாம்பக்ஷம்
குறிப்பான சங்கினியத் தினிதான்காணே. (17)

காணடா அத்தினிதான் சரியைக்காகும்
கருவான நாலுவகை சாதிக்குள்ளே
பூணடா சங்கினிதான் கிரியைக்காகும்
புதுமையுள்ள அத்தினிதான் சரியைபூசை
நாணடா சித்தினிதான் யோகபூசை
நன்றாகப் பதுமினியே ஞானபூசை
ஆணடா கிடைத்தாலிப் படியேபண்ணு
அரகரா கிடையாட்டா லொன்றென்றெண்ணே. (18)

எண்ணினு லொன்றாச்சு உலகமெல்லாம்
இனிப்பூசை பண்ணுகிற வரிசைகேளு
அண்ணினல் நாலுவகைச் சாதிக்குள்ளே
அகப்பட்ட பெண்களுக்கு ஸ்நானஞ்செய்து
நண்ணினல் தேகமெல்லாம் நீர்விட்டாட்டி
நன்றாகப் புனுகுசந் தனஞ்சவ்வாது
பண்ணீரி னாற்றுளப்பித் தேகமெல்லாம்
பண்பாகப் பூசியே பட்டுக்கட்டே. (19)

கட்டியபின் மெத்தைபின்மேற் குளியவைத்து
கருத்திலே வேறுசிந்தை வையாமற்றான்
தட்டியபின் ஒருமனதாய் மவுனமுன்னத்
தனதான அம்பிகையே தாயேதேவி
நட்டியபின் சாம்பவியே உமையேயென்றும்
நன்றாகப் பூரணிகா ரணியேநீலி
வட்டியதோர் வல்லவையே பிரமன்பாரி
வரிசையுள்ள சரஸ்பதிலட் சுமியையெண்ணே. (20)

யெண்ணவே ருத்திரியே மாயோன்பாரி
யென்தாயே மயேஸ்பரியே மனோன்மணியே
உண்ணவே லக்ஷிமிபாங் தேவியம்மாள்
உருமையுடன் றுளபமதி விருந்ததேவி
இண்ணவே வேணுமடா சிந்தைதன்னில்
இதமாக அவ்விடத்திற் செலுத்தவேணும்
கண்ணவே நவரத்தின முடிகிரீடம்
காதிற்குண் டலமணிந்து மஞ்சப்மேலே. (21)

மஞ்சத்தி லரனிருக்கும் மஞ்சத்தின்கீழ்
மகத்தான தேவரொடு முனிவர்சூழத்
தஞ்சத்தி லரன்மடியி லிருந்ததாயே
சச்சிதா னந்தருள் பெற்றதாயே
கஞ்சத்தி லுறையுங்கா ரணியேதேவி
கருணைபெருஞ் சச்சிதா னந்தத்தாயே
இஞ்சத்தி லாதார சத்தியென்றும்
சுருக்காக ஒருமனதாய்க் கூவுகூவே. (22)

சுருக்காகக் கூவியபின் சொல்லக்கேளு
சுகமான தேன்நெய்சக் கரையினோடு
மருக்காகக் கழைச்சார்மாம் பழத்தினோடு
மைந்தனே வஸ்துவரைப் படியும்விட்டு
பருக்காகப் பொரிக்காரச் சுண்ணம்போடு
பசுவின்பால் புழுகுடனே பூரஞ்சேர்த்து
உருக்காகத் தற்சனையிற் றேய்த்துக்கொண்டு
உத்தமனே திரிசோணத் துரைக்கச்செய்யே. (23)

செய்யவே கரிகரணங் காமகளையூருந்
        தேனெனவே வஸ்துவைப்பீங் கானில்வாங்கு
வெய்யவே விடலைபழந் தாழம்பூத்தான்
        விடத்தலைவேர் பிண்டகனி தேனாலாட்டி
பையவே உந்தியிலே தடவிக்கொண்டு
        பராபரைக்குக் கரிகரணஞ் செய்யும்போது
மையவே ஆரோடும் நாற்காலிக்குள்
        வாங்கிவைத்துத் தீபமுதல் தூபங்காட்டே. (24)

காட்டியே யாவுவிடம் நீர்விட்டாட்டி
        சமகமென்ற சுகந்தபரி மளங் ள்தூவி
கூட்டியே துவாலையிட்டுப் பட்டுவஸ்திரங்
        குணமாகக் கட்டியபின் பாதபூசை
நீட்டியே சொல்லுகிறேன் திறந்துநன்றாய்
        நினைவாக அவளுக்கா பரணம்பூட்டி
ஆட்டியே ஆயிபெரு விரலதன்னில்
        அன்பாக மணைதைவைத்து அப்பாற்கேளே. (25)

கேளடா சொல்லுகிறேன் நினைவாயப்பா
        கெடியான பீங்கானில் போதந்தன்னை
ஆளடா நீயெடுத்துத் தாய்கையீய்ந்து
        அவள்குயத்தின் நடுவைக்கச் சொல்லிப்பின்பு
நாளடா வஸ்துவுட சாபம்நீக்கி
        நன்றாக உனக்கீய்ந்தால் வாங்கிக்கொண்டு
மூளடா வாலைமந் திரத்தையுன்னி
        முன்குருவுக் கீய்ந்தபின்பு வாலைக்கீயே. (26)

ஈயடா அவள்தனக்கு யீய்ந்தசேடம்
        என்மகனே மிச்சமெல்லா முண்டாயாகில்
தூயடா கயிலாச தேகமாச்சு
        சுகமாகப் பாங்குபெறக் கொண்டாலையா
வாயடா வங்கென்று மிச்சமுண்டால்
        மருவினதால் சதாசிவத்தின் பூசையாச்சு
மையடா யினிவேறே பூசையில்லை
        மைந்தனே யிப்பூசை ஆதியாமே. (27)

ஆமப்பா அவள்பூசை முன்பேசெய்ய
அன்னமொடு பலகாரம் வைத்தபின்பு
நாமப்பா சொன்னபடி யொளிகாணக்கேள்
நன்றாகப் புருவமையம் பார்க்கச்சொல்லு
தாமப்பா நவகோணத் தகடுதன்னை
தப்பாமற் கண்ணிடத்தில் வைத்துப்பூவால்
காமப்பா லத்தபின்பு சுத்தநீராம்
கலியாணி பெருவிரலில் மனத்தைவையே. (28)

வையடா பலதினவை வோர்நினைவாய்
மகாரத்தை ஓதிடவே வரிசைகேளு
பொய்யடா சொல்லவில்லை யேகதீக்ஷை
பூட்டினேன் தனியிருந்து லெக்ஷந்தீரு
மெய்யடா உருவேற மட்டுங்கேளு
விதமாக யிடக்கண்ணில் உகாரம்நாட்டி
செய்யடா புருவமத்தி நிலையைநாட்டி
நீயடா வலக்கண்ணில் அகாரம்நாட்டே. (29)

நாட்டியே மவுனமுன்னி தீக்ஷையோதி
நன்றாகப் புருவமையம் பார்க்கப்பார்க்கக்
கூட்டியே புருவமட்டும் நன்றாய்த்தானே
கூர்ந்துபார் கோடிரவி கோடிபானு
மாட்டியே ஒளிகாணும் ஒளியிற்சென்று
மைந்தனே யீராறு தலமுங்காணும்
நாட்டியே தலங்கண்ட போதுதானே
சகலசித்தி யாகுமடா சார்ந்துபாரே. (30)

யாரப்பா யோகசித்தி குளிகைசித்தி
பண்பாக வாதசித்தி காயசித்தி
ஆரப்பா அஷ்டகன்மஞ் சித்தியாகும்
ஆச்சரியந் தாயுடைய பெருமையாலே
கூரப்பா அவள்முன்வைத் திருந்த அன்னம்
கொடிமையுள்ள கரிபதார்த் தங்களெல்லாம்
வாரப்பா தள்ளிமுறைப் பிள்ளைவர்க்கம்
வயணமாய் ஒருமனதாய் பொசித்திடாயே. (31)

பொசித்தல்லோ தகடதிலே மாளாச்சித்து
புதுமையுள்ள தூபமுதல் தீபங்காட்டி
வசித்தல்லோ வசியென்று தகடெடுத்து
மைந்தனே தினம்பூசை பண்ணக்கேளு
சுசித்தல்லோ முன்செபித்த தீட்சைதன்னை
கருவாக நூற்றெட்டு உருச்செபித்து
பொசித்தல்லோ பூரணத்தி லன்புவைத்து
புதுமையுடன் யென்மகனே பூசிப்பாயே. (32)

பூசிக்கும் போதொரு முறைமைகேளு
புதுமையுள்ளே உலகமெல்லா மகன்றபோது
ஆசிக்கு முபசாரஞ் செய்துநிற்பர்
அன்பாகப் பெண்கள்வந்து அணுகவென்பார்
நாசிக்கும் அவர்களைநீ யணுகவேண்டாம்
நன்றாகத் தாய்சொன்ன படியேசொன்னேன்
வாசிக்கும் பூசைசெய்யா விட்டாலாகா
வாயாது காயசித்தி வாயாதென்னே. (33)

வாயாது தேவருக்கும் ரிஷிகளுக்கும்
மைந்தனே மும்மூர்த்தி தனக்குங்கூட
வாயாது பூசையினி யுனக்குமைந்தா
வாங்கிவிட்ட குறையல்லோ வாய்த்ததப்பா
வாயாது ஒருநாளும் மனிதர்க்கையா
மகத்தான பூசையிது கிரியைபூசை
வாயாது யென்றுசொல்லி விட்டிடாதே
மறவாமற் சிவயோகி மருவிப்பாரே. (34)

மருவிப்பா ரிப்பூசை முன்னேசெய்து
வகையாகக் கிருபையே காத்தம்பார்த்து
உருவிப்பா ரிதுக்கெல்லா முன்னேசெய்ய
ஓகோகோ சரியையுட விபரங்கேளு
கருவிப்பார் சித்தர்சொன்ன தீட்சைமார்க்கம்
கருணையுடன் உருச்செபித்தால் சரியையாகும்
தருவிப்பா ரதன்பிறகு கிரியைபூசை
தப்பாமற் செய்தபின்பு யோகம்பாரே. (35)

யோகத்தைப் பார்த்தபின்பு கற்பமுண்ணு
ஒழுங்காக அறுசுவையு மகற்றிப்போடு
போகத்தைக் கைவிட்டு யோகம்பாரு
பொலிவான சோம்பல்நித் திரையேவேண்டாம்
பாகொத்த கொங்கணரும் எந்தன்தந்தை
பாடினு ரிருநூறு மொன்றுபோல
சேகொத்த அம்முறைக்குக் கற்பங்கொண்டு
செகசால மார்க்கமெல்லாஞ் சேரத்தள்ளே. (36)

தள்ளியே மலைகளிலே செல்வதற்குச்
சாரணைக்கு யேத்ததொரு குளிகைபண்ணி
அள்ளியே மலைகளிலே நடந்துதெக்ஷ
ணாமூர்த்தி பொதிகைதனிற் கண்டுசேவி
மள்ளியே நானிருப்பேன் மகேந்திரத்தில்
மைந்தனே வந்தென்னைக் கண்டுசேவி
வள்ளிதனை யுனக்களிப்பேன் வாழ்வையீவேன்
மகத்தான நவகோணப் பூசைமுற்றே. (37)

சுந்தரானந்தர் பூஜாவிதி ௩௭.

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சிவகுருநாத பிள்ளை யவர்கள் குமாரர் செல்லம்பிள்ளை யவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

முப்பத்துநான்காவது:

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

# வாக்கிய சூஸ்திரம் ௩௪.

ஆதியென்ற சட்டைமுனி பதத்தைப்போற்றி
அறிவாகச் சூஸ்திரந்தா னுறுசொன்னேன்
காதியென்றன் குருநாதர் மரபுக்குள்ளே
கனமான யென்குருவு மனேகஞ்சொன்னார்
வீதியென்ற பூரணமுங் கணேசன்பாதம்
விரிவாகத் தான்போற்றிப் பிரிவாய்ச்சொன்னேன்
போதியென்ற குருபற்ப வகையைச்சொல்வேன்
புகழாகத் தேவியைத்தான் போற்றிக்கேளே. (1)

கேளப்பா நாலுவகை பாதந்தொட்டுக்
கெடியாக வதினாலே சித்தர்கோடி
ஆளப்பா வெகுகோடி நூலைச்சொன்னார்
ஆருக்குங் கிட்டாது வெந்நூலையா
வேளப்பா சித்தருடன் வாதுசெய்து
வெற்றிகொண் டிந்நூலைச் சொன்னேன்சொன்னேன்
விளப்பா கெடுகாதே சாயசித்தி
மேன்மையுள பராபரத்தை மேவிப்பாரே. (2)

பாரப்பா ஞானம்வந்த தென்றுபேசி
பகர்சீமை பெண்டுபிள்ளை தன்னைவிட்டு
ஊரப்பா பெரியோரை யெண்ணாமற்றான்
உலகத்தே நான்பெரியோ னென்றுபேசி
சேரப்பா போட்டுவிட்டுத் திரிவான்பாவி
சிரத்தைகெட்ட மாடென்று தேர்ந்துபாரு
மேரப்பா சட்டைமுனி பதத்தைப்போற்றி
மேவியதோர் குருவையினிச் சொல்லக்கேளே. (3)

கேளப்பா நாலோடு மூன்றுகூடன்
கெடியான மூன்றோடு வகையைக்கேளு
ஆளப்பா மூன்றாக நின்றசோதி
ஆனந்த பூரணமென் றறிந்துபாரு
வீளப்பா பற்பகுரு விதுவேபோக்கு
மேலான பெரியோர்கள் செய்வதப்பா
தாளப்பா வுலகத்திற் கண்டபேர்கள்
சமரசமாய்ப் பதினொன்று கண்டுகொள்ளே. (4)

கொள்ளப்பா யிதன்மேலே கவசங்கேளு
கொடியான கெந்தியொடு படிகியாகும்
வில்லப்பா வழலையுடன் மெழுகுங்கூட்டி
விதமாக அரைத்ததனைக் கவசங்கட்டு
கள்ளப்பா குருவானாற் சொல்லார்சொல்லார்
கருத்துடனே நீயுமதைக் கண்டுபாரு
அள்ளப்பா யென்னைப்போலே சித்தர்சொல்லார்
அதினாலே யெங்கள்மேற் பகையுமாச்சே. (5)

ஆச்சப்பா யெங்களையா சொன்னநூல்தான்
ஆருக்குங் கிட்டாது அறிந்துபாரு
வீச்சப்பா யெண்ணாதே விட்டகுறையாலே
மேலான தவத்தோர்க்குக் கிட்டுங்கிட்டும்
மாச்சப்பா குருபதத்தைத் தேடுதேடு
மதியான பிள்ளையென்றாற் கண்டுகொள்வாய்
போச்சப்பா குருவையெங்கே தேடவென்றாற்
பொய்யாகிப் போவாய்நீ புகழ்ந்துபாரே. (6)

பாரப்பா செந்தூர முறமைகேளு
பரிவாக வென்குருவு மெனக்குச்சொன்னார்
மேரப்பா யிதுவுனக்குப் பீசகோசம்
மேற்சாரத் தின்னீரா லரைத்துக்கொண்டு
ஆரப்பா எணுதகுடோ ரிக்குப்பூசி
யானதொரு ரவியதனிற் போடுபோடு
வேரப்பா சேர்த்தந்தக் குடோரிகட்டு
மேலான பட்சத்தி லறிந்துசேரே. (7)

சேரப்பா பிரமாவின் தேவியோடு
செயலான மாலுடைய தேவியோடு
மாரப்பா ருத்திரனுந் தேவியோடு
மகத்தாக மூன்றுயினங் கூட்டிவெண்ணெய்
வேரப்பா விட்டரைத்துக் கலத்திலப்பி
மேலாக ரவியில்வைக்கத் தயிலமாகும்
பேரப்பா யிதையெடுத்துக் குடோர்க்கியப்
பேரான தயிலமெல்லா முண்ணுந்தானே. (8)

தானென்ற தயிலத்தை யுண்டபின்பு
சாதகமாய் விற்பனனே யரைத்துப்பூசித்
தேனென்ற மொழியுடையாள் சொன்னவித்தை
சிவசிவா நாதாக்கள் சொல்லார்சொல்லார்
வானென்ற குருபிலத்தி னாலேசொன்னேன்
வாகான பெரியோரே மகிழ்ந்துபாரும்
வேனென்ற சிவஞானக் குருவேஐயா
மேலான சீனச்சுண் ணத்தில்வையே. (9)

வைத்துடனே கலங்தெரிசெந் தூரமாகும்
மகத்தான வித்தையடா யைந்தாபாரு
தைத்துடனே யெடுத்துநவ லோகத்துள்ளே
சாதகமா யைம்பதுக்கொன் றிடவேதங்கம்
ஐத்துடனே யிந்தவித்தை யாதியாதி
அப்பனே லோகத்துக் காகச்சொன்னேன்
பைத்துடனே யென்சொன்ன யென்றுரையர்
பரிவாகக் கேட்டதற்குப் பயந்திட்டேனே. (10)

பயந்திட்ட வகையறிந்து குருநாதன்றான்
பரிவாகச் சுந்தரமே வாவாவென்று
அயந்திட்டா யெனச்சொல்லி முதுகைத்தட்டி
அன்பாக நம்முடைய மாபுக்குள்ளே
உயர்ந்திட்ட துன்னையல்லால் வேறேயுண்டோ
உத்தமனே ரிஷிகோடி சித்தர்கோடி
பயந்திட்டார் கொங்கணவ ரென்றுசொல்லிப்
பரிவாகச் சிலப்பொலியைப் பாரென்றாரே. (11)

பாரென்ற சொற்கேட்டு அடியேன்றானும்
　　பரிவாகச் சிலம்பொலியைப் பார்க்கவென்று
காரென்ற கமலினியாஞ் சொரூபத்தோடு
　　காரணமா யண்டமுத லேறிப்பார்த்தேன்
வாரென்ற கொங்கணவர் வல்லமைக்கு
　　மகத்தான சித்தனப்பா போகர்பிள்ளை
தாரென்ற சமர்த்துடையா ரானதாலே
　　சகலசித்து மவருக்குள் ளாச்சுஆச்சே. (12)

ஆச்சப்பா சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
　　அறிவாகக் கருவெல்லா முறைப்பேனையா
வாச்சப்பா சவுக்கார மில்லாவிட்டால்
　　வாகான சரக்கெல்லாம் மண்ணாய்ப்போகும்
வீச்சப்பா வுப்பைவிட்டா லொன்றுமில்லை
　　வேதையும்நீ யரிதரிது காணமாட்டாய்
காச்சப்பா சொன்னதெல்லாம் நினைவாய்ப்பாரு
　　காரணமாய்ச் சொன்னதொன்றும் வழிதப்பாதே. (13)

தப்பாதே யின்னமொரு வித்தைகேளு
　　சாதகமாய் மடையனுட வகையைச்சொல்வேன்
செப்பாதே செந்தூர மாதியையா
　　செகஜால மாடுதற்குத் தாய்தான்சொன்னாள்
ஒப்பாதே குமரியுட சாற்றிலப்பை
　　யுறவாக வரைத்துநன்றாய்ப் பூசிப்போடு
உப்பாதே உமித்தீயிற் புடத்தைப்போட
　　உத்தமனே கட்டிப்போம் மடையன்தானே. (14)

தானென்ற திரிகோணத் தயிலமூட்டிச்
　　சாதகமாய் விற்பனனைக் கூடச்சேர்த்து
வானென்று வரைத்துருட்டிச் செம்புக்கிய
　　மகத்தான வராகனுட மாத்துக்காணும்
தேனென்ற காரம்விற் பனனைப்பூசிச்
　　சீனத்தில் வைத்தெரிசெந் தூரமாகும்
கோனென்ற வாதியடா யிந்தவித்தை
　　கூறினேன் பூரணத்தின் வழியைக்காணே. (15)

காணப்பா யின்னமொரு வித்தைசொல்வேன்
கனமான மூலகுரு வெனக்குச்சொன்னார்
பூணப்பா வெடியுப்பும் புளியுங்கூட்டிப்
புகழாகத் தீக்கொளுத்தச் சுண்ணமாகும்
வாணப்பா பனியில்வைக்கச் செயநீராகும்
மகத்தான சீனத்தி லூத்திப்பாரு
வீணப்பா யெண்ணாதே சுண்ணம்பாகும்
விரிவாக யிதுதனையுஞ் சொல்லக்கேளே. (16)

கேளடா வுலகத்திற் செய்வதெல்லாம்
கெடியாக வீரைந்து மாத்தேயாகும்
நாளடா தேவியைத்தான் பூசைபண்ண
நலமாகக் கொடுப்பளையா தேவிதேவி
வேளடா சீனத்தில் வீரத்தாட்டி
வேதாந்தத் தாளகத்திற் பூசிப்போடு
ஆளடா ஐங்குகையி லூதிப்போட
அப்பனே சுண்ணம்பாம் தேவிதானே. (17)

தானென்ற மாலுடைய தேவிதன்னை
சாதகமாய் வீரமிட்டு ஆட்டிக்கொண்டு
வானென்ற வங்கத்திற் பூசியாட்டு
வாகாகச் சுண்ணம்பாம் மைந்தாமைந்தா
தேனென்ற சுண்ணத்தில் வீரத்தாட்டித்
தேவியென்ற நிமிளையிலே பூசியாட்டு
ஆனென்ற நிமிளையது சுண்ணம்பாகும்
அப்பனே நன்றாக வறிந்துகொள்ளே. (18)

கொள்ளடா நிமிளையிலே வீரந்தன்னைக்
குணமாக வரைந்துநன்றாய்ச் சாரத்தப்பி
விள்ளடா சாரத்தைங் குகையிலூத
விரிவாகச் சுண்ணம்பாம் அறிந்துபாரு
தெள்ளடா சாரத்தில் வீரத்தாட்டிச்
சினத்துடனே பரங்கிக்குப் பூசிப்போடு
அள்ளடா ஐங்குகையிற் புடத்தைப்போட
அரகரா சுண்ணம்பா மறிந்துபாரே. (19)

பாரப்பா பறங்கிக்கு வீரத்தாட்டிப்
பரிவாகத் துருசுக்கு அப்பிப்போடு
நேரப்பா ரவிபடவே சுண்ணும்பாகும்
நேராக வெகுசுருக்கு சுண்ணும்பாகும்
வேரப்பா வாதத்துக் கிதுவேயாதி
விரிவாகப் புழுகிட்டுச் சீனஞ்சேர்த்துத்
தாரப்பா வீரமிட்டுத் தாரத்தப்பு
சார்வாக ரவிபடவே சுண்ணமாமே. (20)

ஆமப்பா பார்த்ததில்லை யிந்தப்போக்கு
அறிவாகத் தன்மையிலே சுண்ணும்பாகும்
வேமப்பா தாரத்தில் வீரத்தாட்டி
வேரான வங்கத்திற் பூசியாட்டு
வாமப்பா வங்கமது மலரும்பூப்போல்
மைந்தனே யிதுக்கிடைதான் சாரமூட்டு
சேமப்பா பார்க்குமுன்னே செயநீராகும்
சிவசிவா யென்னசொல்வேன் சிங்கத்தாட்டே. (21)

ஆட்டான சிங்கமென்ற செயநீர்தன்னை
யானையென்ற சூதத்தில் விட்டுப்பாரு
போட்டான தோசையைப்போற் கட்டிப்போகும்
பொறிவாக யிதையெடுத்து வுருக்கிப்பாரு
தேட்டான காரமிட்டு வூதவூது
சிவசிவா மணிபோலே நின்றேஆடும்
தாட்டான வித்தையதி லனந்தங்கோடி
சதாசிவன்மேல் நின்றுடுங் தாக்கிப்பாமே. (22)

பாரப்பா வீரமொடு புழுகுசீனம்
பரிவான வழலையுடன் சுண்ணம்போடு
தேரப்பா வெண்கருவா லாட்டிவில்லைச்
சிணக்கவொரு ஐங்குகையிற் புடத்தைப்போடு
ஆரப்பா வுனக்கெதிரே வர்தமாட
அரகரா சூதம்விட்டால் வர்ணம்போச்சு
ஊரப்பா தேவியுட பதத்தைப்போற்றி
உரைக்கிறேன் துாமத்தை யுரைக்கிறேனே. (23)

உரைக்கிறேன் சுண்ணத்தில் வீரத்தாட்டி
உத்தமனே பரித்தகட்டிற் பூரிப்போடு
அரைக்கிறதோ ரஞ்சுசுண்ணக் குகையிலாக
அரகரா சுண்ணும்பாம் வேகம்மெத்தப்
பரைக்கிறதோர் வீரமிட்டு அண்டதகப்பா
பரிவாக மெழுகாகும் வேதைகோடி
விரைக்கிறதோர் தூமத்தில் வேதைகோடி
வீசுகிறே னுலகத்தில் வீசுவேனே. (24)

வீசுகிறே னுலகரெல்லாஞ் சித்தராக
வேதாந்த ஞானமெல்லாம் வெளியாய்ப்போகப்
பேசுகிறே னென்றசித்த ரேங்கிநிற்கப்
பிரபலமாம் உலகமெலாம் பொன்னுய்ப்போக
ஆசுகிறே னென்றகுரு பதத்தைப்போற்றி
அறிவாக யின்னமொரு குருவைச்சொல்வேன்
வாசுகிறேன் மைந்தனேநீ வாய்பேசாதே
வழலையுட மார்க்கமது சொல்லுவேனே. (25)

சொல்லுகிறேன் சூட்சமா யாதிவித்தை
சுண்ணுய்புக் கல்லுபடி ரெண்டேயாகும்
மல்லுகிறேன் பூநீரு படிதான்நாலு
வாகான கல்லுப்புப் படிதான்ரெண்டு
வெல்லுகிறே னமுரிபடி யாறுவாரு
விரிவாகப் பின்பதிலே நாலுவாரு
அல்லுகிறே னஞ்சாநாள் பாருபாரு
அப்பனே தெளிவாக யிருக்குந்தானே. (26)

தானென்ற தெளிவுதனை மிடாவில்விட்டுச்
சாதகமாய்த் திமிரமிட்டுக் கடைந்தாயானல்
தேனென்ற நுரையாக நிற்குந்தன்னைச்
சிறப்பாக வகப்பைகொண்டு யெடுத்துக்கொண்டு
நேனென்ற கையதனு லெடுத்தாயானல்
நேரமில்லை யென்மேலே நெருப்பாய்வேகும்
கானென்ற கைவந்தாப் போலேயப்பா
கைவிட்ட சூஸ்திரம்போற் சரக்குவேமே. (27)

வேமப்பா நுரையிலேபோ கிறதைக்கேளு
விளங்கியதோர் சாரமொடு மூன்றுபோடு
ஆமப்பா காரமது வைந்துபோடு
அப்பனே வெடியுப்பு ரெண்டுபோடு
கோமப்பா வீரமொடு பூரம்போடு
குறிப்பான வங்கமொடு கண்டர்சுண்ணம்
போமப்பா போட்டதிலே அடுப்பிலேத்திப்
புகழாக வெரிக்கையிலே மெழுகுமாமே. (28).

ஆமிந்த மெழுகதனிற் காசுதூக்கி
அப்பனே வீரமிதிற் காற்சிலப்பு
ஓமிந்த விளக்கதனில் வாட்டுவாட்டு
உத்தமனே மணிபோலே யாடுமோடும்
வாமிந்தத் தங்கத்தைச் சுருட்டிவாங்கும்
வயிரம்போல் வேதையடா வர்னங்கோடி
ஆமிந்த மெழுகிலே யனந்தங்கோடி
அப்பனே சமுத்திரந்தா னடங்காவாறே. (29)

வாறான மெழுகொன்று சொல்லக்கேளு
மைந்தனே வெகுபோக்கு யென்னசொல்வேன்
பேறான அண்டமொன்று சீனமொன்று
பிரிவான சாரமொன்று காரமொன்று
காறான கல்லுப்பு ரெண்டரையுங்கூட்டிக்
கருதிடவே வெடியுப்புப் பலந்தான்போடு
பூறுவாய் வருக்கையிலே மெழுகுபோலாம்
பொருந்திடவே ரவியிலிட்டு வூதிப்போடே. (30)

போடந்த மெழுகெடுத்துப் பாறைவுப்பிற்
பூசியே ஊசாரமும் உப்புநேரே
வோடந்த வோட்டில்வைத்துப் புடத்தைப்போடு
வுத்தமனே வயிரம்போ விறுகிக்கட்டும்
வாடாம விதையெடுத்துச் சுண்ணும்பாக்கி
மைந்தனே வுப்பிலே வீரங்கூட்டிக்
கூடந்த வெண்கருவா லரைத்துக்கட்டிக்
கூர்மையாங் கரியோட்டி ஊதிப்போடே. (31)

ஊதியமேதோர் சுண்ணாம்பு பலந்தானென்று
வுத்தமனே சாரமொன்று காரமொன்று
காதியதோர் வீரமொன்று பூரமொன்று
கைமுறையா யரைக்கையிலே மெழுகுபோலாம்
சாதியதோ நவலோகம் நூறுக்கொன்று
தப்பாது மாற்றேது வென்றாற்கேளு
போதியடா மகமேரு திகட்டாதப்பா
புகழான பூரணமாம் புகழ்ந்துபாரே. (32)

பாரப்பா மவுனம்விட்டால் ஞானமில்லை
பரிவாக யெங்களையர் பரிந்துசொன்னார்
ஆரப்பா ஞானம்வே தாந்தமையா
ஆதிசத்தி யாதிசத்தி லகிரிக்குள்ளே
வேரப்பா மூலத்தில் உலகசத்தி
மெய்க்குருவோ வனந்தமடா கோடாகோடி
போரப்பா வெண்ணாதே மவுனவித்தை
புகழான பஞ்சிலிட்ட வன்னிதானே. (33)

வன்னியென்ற சரக்குடனே காருங்கூட்டி
மத்தித்துச் சரக்கதனை யினத்திற்சேர்த்துக்
கன்னியென்ற நீருடனே வாய்வுங்கூட்டிக்
காரணமாய்ப் பிருதிவியுஞ் சலமுங்கூட்டி
மின்னியென்ற சரக்கெல்லா முப்பிற்சேரு
விதம்விதமா யினத்தோடே கட்டிப்போகும்
பொன்னியென்ற பீசமொடு சரக்கைக்கேளு
போடுவது வீரமொடு சுண்ணந்தானே. (34)

தானென்ற தாம்பூல மருந்தயிலேபூரம்
சமரசமாய்ச் சுண்ணத்திற் சேர்த்துக்கொண்டு
வானென்ற சதாசிவனைப் போற்றிசெய்து
வாகாக அமுதத்தை யூத்துவூத்து
தேனென்ற மொழிமடவாள் சொன்னதப்பா
சிவசிவா வென்சொல்வேன் சிவத்தைக்கேளு
கோனென்ற கொக்கிறகு சூடிநாதன்
குருபரனுந் திருலீலை கண்டார்தானே. (35)

கண்டரொடு காரமொடு யினிமையோடு
காரணமா யிம்மூன்றுஞ் சரியாய்க்கூட்டி
விண்டரொடு செயநீரை விட்டுஆட்டு
விதவிதமா யொருசாமம் நன்றாய்க்கேளு
அண்டாம லரைத்துநன்றாய் வில்லைசெய்து
அடவாக ரவியதனிற் போடுபோடு
கொண்டாட வுணர்ந்தபின்பு அதன்மேற்கேளு
கொடிதான கவசத்தைச் சொல்வேன்தானே. (36)

தானென்ற கவசத்தைச் சொல்லக்கேளு
சதாசிவன்றான் சொன்னபடி சாத்துவேன்யான்
வானென்ற தேவியொடு பட்டியாகும்
வாகான அண்டத்தின் மெழுகுமாகும்
கோனென்ற சுண்ணமொடு நாலுங்கூட்டிக்
குறிப்பாக அமுதைவிட் டரைத்துக்கொண்டு
தேனென்ற சட்டைமுனி பதத்தைப்போற்றிச்
சிவசிவா வில்லைமேற் கட்டிப்போடே. (37)

போடப்பா ரவியதனிற் காய்ந்தபின்பு
புகழாகச் சொல்லுகிறேன் நினைவாய்க்கேளு
ஆடப்பா சூடனிலே யாட்டிக்கொள்வாய்
அரிதரிது சூட்சமதா யறிந்துகொள்ளு
வீடப்பா யிதுவுனக்குக் குபேரன்வீடு
வீணாகப் போகாமற் றாயைப்போற்று
கூடப்பா கூடழிந்து போகாமற்றான்
குருபற்பந் தினந்தின்று குணத்தைக்காணே. (38)

காணப்பா மண்டலத்திற் சித்தியாகும்
காணரிது பெரியோர்கள் சொன்னவித்தை
வீணப்பா யெண்ணாதே மூலநாயன்
விரைந்துமெத்தப் போற்றிசெய்து வாசியேறி
ஆணப்பா அறிந்துகொள்வாய் சித்தனாவாய்
அரகரா யென்னச்சொல்வே னுண்மைதள்ளு
தோணப்பா தோணரிது சொன்னேன்சொன்னேன்
சொற்பெரிய மூலகுரு சொன்னவாறே. (39)

சொன்னதொரு குருவையினி வேதைபோடச்
சொல்லுகிறேன் பூரணத்தின் தாயைப்போற்றி
வின்னமதா யெண்ணுதே வெள்ளிமேலே
விரைந்துநீ நூற்றுக்கு ஒன்றுபோடு
தென்னனடா மாற்றேது வென்றுற்கேளு
சிவசிவா ஆறரையாக் தேர்ந்துபாரு
கன்னமடா போடுதற்கு யிதிலேவித்தை
கலந்தேறக் கலந்தேற யின்னங்கேளே. (40)

இன்னமடா சொல்லுகிறே னிதனின்போக்கு
இக்குருவி லொன்றெடுத்து ரசத்திலூட்டுப்
பன்னமடா அரைக்கையிலே பதைத்துச்சாகும்
பரிவாக விந்துவிதிற் கட்டிப்போகும்
தன்னமடா யிதுவைத்துக் கொண்டுநீயும்
சார்வாகக் கற்பமுண்டு தேறுதேறு
இன்னமடா யிதனாலே வேதைகோடி
எந்நாளுஞ் சொல்லரிது நினைவாய்க்காணே. (41)

காணப்பா யிம்முறையை வகையாய்க்கேளு
காரணமாய்ப் பிருதிவியி லொன்றேயாகும்
மாணப்பா அப்புவிலே ரண்டேயாகும்
மகத்தான தேயுவிலே மூன்றேயாகும்
வாணப்பா வாயுவிலே ரண்டோடொன்று
வகையாக ஒன்பதுவும் நினைவாய்ப்பாரு
பாணப்பா பஞ்சபூதச் சரக்கைநீயும்
பரிவாக அறிந்துகொண்டு சரியாய்க்காணே. (42)

சரியாக ஆகாசச் சரக்கைக்கேளு
சார்வாக மூன்றுதா னறிந்துகொள்வாய்
அரியாக ஐயிரண்டில் ரண்டேயாகும்
அப்பனே குருவிதிலே யடங்கிப்போச்சு
சிரியாக யேழுவகை யோனிநாலாம்
செப்பாதே வழலையென்ற சுண்ணமொன்று
வரியாக மழைமேகம் பொழிந்தாற்போல
வாகாகப் பயிர்தழைக்கும் மருந்துதானே. (43)

மருந்தென்ற சரக்கெல்லாம் பயிரதாகும்
வாகான சவுக்காரம் மழையதாகும்
வருந்தாமற் பயிர்களெல்லாம் வாடாமற்றான்
மவுனத்திற் றேவியைநீ பூசைபண்ணு
அருந்திடா யிக்குருவிற் பணந்தானென்று
அப்பனே மண்டலத்திற் சித்தியாகும்
வருந்தாமல் மண்டலந்தா னுண்டாயானல்
வாகான கற்பூரத் தேகமாமே. (44)

தேகமென்ற வுடலுக்கு ஞானம்வேணும்
சித்தாந்தம் வேதாந்தம் நோக்கம்வேணும்
தேகமென்ற உடலுக்குப் பூசைவேணும்
செபம்வேணுந் தபம்வேணும் எச்யம்வேணும்
தேகமென்ற வுடலுக்கு யோகம்வேணும்
சிறப்பாக வாசியென்ற குதிரைவேணும்
தேகமென்ற வுடலுக்குச் சித்திவேணும்
தெளிவாக வுப்பினுட கருவைக்காணே. (45)

காணரிய உப்பினுட கட்டைச்சொல்வேன்
காட்டாதே துஷ்டரென்ற பேர்க்கெல்லாம்
பூணரிய வுலகத்துக் காகச்சொன்னேன்
போடடா விருதுநீ புகலக்கேளு
ஆணரிய ஆட்டெல்லா மையராட்டு
ஆனந்தக் கேசரியா மவுனத்தூட்டு
தாணரியச் சித்தரெல்லா மேங்கிநிற்கச்
சாற்றுகிறேன் கவலைபறச் சாற்றுவேனே. (46)

சாற்றுகிறேன் சவுக்காரச் சுண்ணமொன்று
சாதகமாய் வீரமொன்று ரண்டுங்கூட்டிச்
சாற்றுகிறே னதுக்கிடையே சாரந்தன்னை
தனிக்கூட்டி யரைக்கையிலே சலமுமாகும்
சாற்றுகிறேன் சலத்துள்ளே வீரம்பூரம்
சார்வாக அமுரியுப்புக் காலுங்கூட்டிச்
சாற்றுகிறேன் குளம்பாக்கி யுப்பின்மேலே
தயவாகப் பூசியிதை ரவியிற்போடே. (47)

போடப்பா மூன்றுதினங் காய்ந்தபின்பு
புகழாக அஞ்சுசுண்ணஞ் சாரங்கூட்டி
ஆடப்பா ஆட்டிமெள்ள வுப்புக்கப்பி
அறிவாக ரவியதனிற் போடுபோடு
தேடப்பா வுவரோடு உப்புங்கூட்டித்
திடமாகப் பொடித்துமதின் நடுவேவைத்து
வாடப்பா புடம்போடக் கட்டிப்போகும்
மகத்தான குருசொன்ன வாறதாமே. (48)

ஆமென்ற வுப்பெடுத்து வுருக்கிப்பாரு
அசமத்த பொன்போலே உருகியாடும்
தாமென்ற வுப்பதுவுங் கம்பிச்சானும்
சலியாதே பின்னொருக்காற் புடத்தைப்போடு
வாமென்ற உப்புக்குப் பூசைபோடு
மகத்தான சின்மயத்தை மருவிக்காணும்
ஓமென்ற முத்துப்போற் கட்டிப்போகும்
உத்தமனே சித்தரெல்லாம் மகிழ்வார்தானே. (49)

தானென்ற மணியெடுத்துப் பார்க்கும்போது
தமரகத்தி னொளிபோல வெண்மைகாணும்
வானென்ற மணிபோலே யெங்குங்காணேன்
மகத்தான சித்தரெல்லாம் மயங்கினார்கள்
ஏனென்ற வென்குருவும் அருகழைத்து
இதமென்று ரகசியமாய்ச் சொன்னதப்பா
கானென்ற சித்தரெல்லா மெதிர்த்ததாலே
காரணத்தோர் மெச்சிடவே வீசிட்டேனே. (50)

வீசிட்டே னுலகமெல்லாம் வாதமாக
விரைந்துசித்த ருலகத்தே மெத்தவாக
வீசிட்டேன் சொல்லாத கருவையெல்லாம்
வீணருட வாய்தனிலே மண்ணைப்போட
வீசிட்டேன் சின்மயத்தைப் போற்றிசெய்து
மிக்கான குருவையெல்லா மினத்தோடப்பா
வீசிட்டேன் தூமமுதல் வேதைகோடி
விரிவாக யினத்தையின்னஞ் சொல்லக்கேளே. (51)

கேளப்பா மணிபோலே பூசவையா
கெடியான வீரமொடு பூரம்ரெண்டும்
நாளப்பா நாலிலொன்று புழுகுங்கூட்டி
நலமான வெண்கருவா லாட்டிக்கொண்டு
வாளப்பா மணிபோலே பூசிப்போடு
வர்காக ரவியதனி லுலர்ந்தபின்பு
ஆளப்பா அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
ஆட்டிமெள்ள வூதிடவே சுண்ணமாமே. (52)

சுண்ணமடா சொல்லுகிறே னையாகேளு
சுழிவாகத் துறையொன்று சூட்சமாக
வண்ணமடா சரியிடையாய் ரசமுங்கூட்டி
வாகாக அரைக்கையிலே மாண்டுபோகும்
முன்னமடா அதையெடுத்துக் காரங்கூட்டி
முறையாக மத்தித்துச் சவாதுசேர்த்து
இன்னமடா சொல்லுகிறே னிதையெடுத்து
இதமாகச் சரக்கதனி லூட்டிப்பாரே. (53)

பாரடா சரக்கதனிற் குருவையூட்டப்
பரிவாக மணிபோலே நின்றேஆடும்
வாரடா சுண்ணும்புக் கருவாம்வீரம்
வகையாக அறிந்தவனே வாதிவாதி
தாரடா அதன்கீழே உப்பேபாதம்
சமரசமாய் முடிவையினி சொல்லக்கேளு
வேரடா மூலமது முடிவுமாகும்
வெட்டவெளி சவுக்காரம் விளம்பினேனே. (54)

விளம்பினேன் சவுக்காரத் துறையைக்கேளு
விளங்கியிதி லெண்ணெய்தனைக் கழற்றிவாங்க
விளம்பினேன் சவுக்கார உருண்டைவாங்கி
விதமாகச் சுண்ணும்புக் கல்லில்வைத்து
விளம்பினேன் காடியதிற் றோய்த்துப்பாரு
விதமாக யெண்ணெய்தனைக் கக்கிப்போடும்
விளம்பினே னறுபத்தொன் றானபின்பு
விரைந்தெடுத்துச் செயநீரிற் றோய்த்துப்போடே. (

போடப்பா ரவிபடவே யெண்ணெய்கக்கும்
புகமூாக அதின்மேலே பூசக்கேளு
வாடப்பா சினத்திற் சுண்ணந்தன்னை
வகையாக வெண்கருவா லாட்டிப்பூசு
தேடப்பா ரவிபட்டுக் காய்ந்தபின்பு
தெளிவாகச் சுண்ணும்பி லெரித்துப்போடு
யாடப்பா யெண்ணுதே சுண்ணும்பாகப்
பரிவாகச் சொல்லுகிறேன் பரிந்துகேளே. (56)

கேளுங்கோ சொல்லுகிறேன் மக்காள்நீங்கள்
கிருபையுட ஞத்தாளைப் பூசைபண்ண
வாழுங்கோ வுலகத்துக் காகச்சொன்னேன்
மருவியுட ஞடுதற்கு வகையாய்க்கேளு
ஆளுங்கோ அஞ்சுசுண்ண மரைத்துப்பூசு
அடரவே புடம்போட எண்ணெய்வாங்கும்
வேளுங்கோ யிதன்மேலே வேகமேற
விதமாக முட்டைதனை விரைந்துவாங்கே. (57)

வாங்கிடாய் முட்டைதான் பதினுறப்பா
வகையாய்வெண் கருவைப்பிங் கானில்விட்டுத்
தேங்காமற் றிமிரமிடக் குச்சியினுற்கடைந்தே
திரமாக அஞ்சுசுண்ணம் பரிவாய்நீயும்
வாங்கியல்லோ அண்டநீர்க் காசுபோடு
மருவியதைக் கலக்கியொரு நாள்தான்மூடிப்
பாங்காக நிழலிருத்தி மூடிநீக்கிப்
பனியிலே மூன்றுதினம் வைத்திடாயே. (58)

வைத்தெடுக்கக் கடுங்காரச் செயநீராகும்
வாகான சவுக்காரந் தோய்த்துப்போடு
கைத்திடவே சவுக்காரங் காரமேறுங்
கலங்காதே அண்டமுதற் புவனந்தாண்டும்
தொய்த்திடுநீ மூன்றுதினம் ரவியிற்போடு
தேர்யாமல் மூன்றுநாள் ரவியிற்போடு
மைத்திடுவே சுண்ணத்தி லதையெடுத்து
மருவியொரு புடம்போடச் சுண்ணமாமே. (59)

சுண்ணமடா சுண்ணமடா கட்டிகட்டிச்
சொல்லாத கருவையெல்லாஞ் சொன்னேன்சொன்னேன்
இன்னமடா சித்தரெல்லாம் பகைவராகி
யென்மேலே வந்தெதிர்த்தா ரிடும்பினாலே
அன்னமடா அதினாலே தக்கித்தாட்டி
ஆகாகா விருதுநான் போட்டேனையா
வன்னமடா வுந்தனக்கு யிந்தவித்தை
மகத்தான சிவன்பூசும் நீறுதானே. (60)

நீறதனை லெடுத்ததொழி லெல்லாமப்பா
நிமிஷத்தில் கைகாட்டும் முறமைபோல
ஆருதா னெடுத்தாலு மிதுதான்வேணும்
அந்தவஸ்து வில்லாட்டா லொன்றுமில்லை
பேருதா னிதனாலே யுலகமெல்லாம்
போறிய மாட்டாமல் மாண்டுபோனார்
வாறுபோல் பூமியிலே விளைந்ததப்பா
வாகான கயிலாச வஸ்துதானே. (61)

கயிலாச மூர்த்திகிரஞ் சனமேஐயா
கபடுமெத்தச் சித்தருக்குக் கண்டேனப்பா
கயிலாச மூர்த்தியா மறுகுரூடும்
கருணையினா லவருடனே வாதுசெய்தேன்
கயிலாச மூர்த்தியுந்தட் சணமாமூர்த்தி
கருணையுடன் வரவழைத்து விருதுபோட்டார்
கயிலாசத் தேகமென்ன யெடுத்தேனையா
கலந்தேறச் சித்தரொல்லாங் கைக்குள்ளாச்சே. (62)

ஆச்சப்பா சித்தரொல்லாஞ் சொன்னநூலும்
அறிவான யெங்களையா சொன்னநூலும்
வீச்சப்பா ரெண்டுமொத்துப் பார்க்கும்போது
வெகுகவடு வெகுகவடு சித்தர்நூல்தான்
ஆச்சப்பா யிதனாலே நிகண்டுசெய்தார்
ஆகாத சித்தரெல்லாம் நிகண்டைப்பார்த்து
மூச்சப்பா மூலகுரு முன்னேவைத்து
முனிவர்களுந் தெண்டனிட்டுச் சொல்கின்றாரே. (63)

தெண்டனிட்டுச் சொன்னமுனி வரையும்பார்த்துச்
சினமாக அவரையிங்கே யழைப்புமென்றார்
தெண்டனிட்ட மச்சமுனி யோடிச்சென்று
சீக்கிரமா யெங்களைய ரழைக்கச்சொன்னார்
அண்டிவந்த மச்சேந்த்ரர் செய்திகேட்டு
ஆச்சரிய மீதாமென் றெழுந்துசென்று
தெண்டனிட்டார் மூலகுரு பதத்தையப்பா
சிவசிவா யென்னசொல்வேன் சொன்னவாறே. (64)

சுந்தரானந்தர் வாக்கிய சூஸ்திரம் ௬௪.

முற்றிற்று.

☞ சுந்தரானந்தர் ஞானசாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலை ஏட்டுப் பிரதிகளிருப்பினும் தற்போது அதிற் சிலதை அச்சிட்டிருக்கிறோம். மற்றவைகள் அடுத்தபாகத்தில் வெளியிடக்கூடும்.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ரு. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

முப்பத்தைந்தாவது:

கடுவெளிச்சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

# சிவராஜயோகம் ௰௮.

பராபரமெய்ஞ் ஞானநிலை வடிவமாகிப்
    பங்கயன்மால் சத்தியொடு சிவனுமாகி
நிராதாரத்துக் காதார பூதமாகி
    நித்தியதத் துவமாய்நின் மலமதாகித்
தராதலமுற் றெங்கும்வியா பகமதாகித்
    தாமரைமென் மலர்நடுவி லமுதமாகிச்
சராசரமா யானந்தா தீதமாகித்
    தானிலங்கும் பரமதனை வணங்கிக்கேளே. (1)

கேளப்பா மனம்நடுவிற் செல்லும்போது
    கெதியான பொருளதன்றன் மார்க்கந்தன்னை
நாளப்பா வோராண்டு நலமாயுண்டு
    நன்னயமாய் மகாரத்தை நாடிக்கொண்டு
வாளப்பா மூன்றையுமொன் றாகக்கூட்டி
    வண்மையுடன் தசதீட்சை சுத்திபண்ணி
ஆளப்பா தீட்சையது முடிந்தபின்பு
    ஆண்டொன்று திரமனதாய் நின்றுகாரே. (2)

காரேநீ யாண்டுமுடிந் தானபின்பு
    கதித்ததொரு சரக்கதனிற் பூரம்வீரம்
கூரேநீ லிங்கமொடு சத்திபீசம்
    குணமுடைய மால்தேவி சமனைக்கொண்டு
வாரேநீ முன்கருவுஞ் சமனைக்கூட்டி
    மகனேகேள் ரவிபீசஞ் சாரஞ்சீனம்
பாரேநீ யெம்மருந்துஞ் சமனைக்கூட்டிப்
    பக்குவமா யாட்டிடுவாய் பசலைநீரால். (3)

நீராலே அரைத்துருட்டி வட்டுப்பண்ணி
நினைவாக ரவிதனிலே காயவைத்துப்
பாரேநீ போட்டினிலிட் டோடுமூடிப்
பக்குவமா யெழுசீலை மண்ணுஞ்செய்து
வாரேநீர் கனபுடத்திற் சுட்டெடுத்து
மறுபடியு மிம்மருந்தைக் கல்வத்திட்டுச்
சீராய்நீ யமுதரசத் தாலேயாட்டிச்
சிறப்பாய்முன் போற்புடமுஞ் செய்துகொள்ளே. (4)

கொள்ளேநீ யிம்மருந்தைப் பொடித்துஅப்பால்
குணமாகச் சிவந்தகன்னிப் பால்விட்டாட்டி
அள்ளேநீ யரைத்துருட்டிக் காயவைத்து
அப்பனே முன்போலப் புடத்தைப்போட்டு
துள்ளேநீ யாறினபின் மருந்தெடுத்துத்
தாக்காக முன்போலப் பொடித்துக்கொண்டு
மள்ளேநீ குடத்துநீ ரதனாலாட்டி
மைபோல வரைத்துவில்லை காயப்போடே. (5)

காய்ந்தமருந் ததைப்புடமிட் டெடுத்துப்பாரு
கண்மணியே மலர்ந்தபூப் போலேநீறும்
வாய்ந்தமருந் ததனைவிட் டலையவேண்டாம்
வாதபித்த மகலுமென வாலைப்பெண்ணாள்
தோய்ந்தபச்சை வர்னத்தா யெனக்குச்சொன்னாள்
சொல்லினேன் பிழைப்பதற்கா யுலகத்தோர்க்கு
ஏய்ந்தகற்பங் கொள்ளுவது முன்னேயப்பா
இருந்துசிவ பூசைகுரு பூசைபண்ணே. (6)

பண்ணுவாய் திரிபுரையின் பூசைதானும்
பத்தியொடு சித்தர்பதம் வணங்கிப்போற்றி
எண்ணுவாய் தாய்ப்பதத்தை மனதிற்றானும்
யேழைபர தேசிகட்குத் தருமமீய்ந்து
நண்ணியே ரவிவழியே சுழினைபுக்கி
நலமான காரணனுக் குமந்தெரிந்து
விண்ணிலே செல்வதற்குத் தாயைப்போற்றி
விரும்பிநித்தம் பூசைசெய்து மேலேநோக்கே. (7)

நோக்கியே யாண்டொன்று சென்றதானால்
நுவலவொண்ணாப் பிணியனைத்தும் பறந்தேயோடும்
நீக்கியே பெண்ணரவந் தீண்டிற்றானால்
நில்லாது சடலமப்பா நிசமேசொன்னேன்
வீக்கியதோ ரிம்மருந்து நிலைத்துதானால்
வீழாது தேகமடா கன்னிநாதம்
தாக்கியிந்த வகையாகக் கூட்டியுண்டால்
தப்பாது காயகற்ப முறுதியாச்சே. (8)

ஆச்சப்பா யெமனேது மிருத்துமேது
ஆண்மைசெயும் பிணியேது நோய்களேது
வாச்சப்பா அரிதான வாசிகட்டும்
வகையான அமுதரசஞ் சொரியும்பின்னும்
காச்சப்பா அம்பிகைப்பெண் குடியிருப்பு
கைவசம தாச்சுதடா கன்மமெல்லாம்
போச்சப்பா வுலகம்பொய் யென்றுதேர்ந்து
புத்திகொண்டு சிவயோகம் பாருபாரே. (9)

சிவயோக மார்க்கமது தெரிவதற்குத்
தேவியெனு மனோமணியைத் தெரிசித்தேத்தித்
தவமேவும் வேதமுடி வின்னதென்று
சாற்றிடுவாய் தாயேயென் றிரங்கிக்கேட்க
அவமேபோ காதேயென் றருகழைத்து
அமுதரச பானமதை யெனக்களித்தாள்
நவமான அமுதமது புசித்தபோது
நான்பணிந்து பூசைவிதி நவிலென்றேனே. (10)

நவிலென்ற போதிலென்று யப்பாவிந்து
நல்லமதி யமுதமது நமக்குத்தந்தாள்
பவம்வென்ற மதுவதுவால் முத்தியாச்சு
பாங்கான அம்பரத்தை யடுக்கலாச்சு
சிவமான தெரிசனமுந் தெரியலாச்சு
சித்தரிலே கடுவெளியின் சித்தனாச்சு
தவமான பூசைவிதி தன்னலாச்சு
சந்ததமுந் தாய்பதத்தை வணங்கினேனே. (11)

வணக்கினே னெதற்கென்றால் வாலைபூசை
வகைகளெல்லா முரைக்கின்றேன் தெளிவாய்க்கேளு
குணக்கொன்று மில்லாத அகாரதீட்சை
கொண்டுசெபி மண்டலந்தான் கொண்டாயானால்
கணக்கென்ற தேகமது உறுதியாச்சு
காயமாந் தேகமதற் கழிவோயில்லை
பிணக்கமிலாத் தேகமது வுறுதியானாற்
பேரான வுயிர்பரத்துக் குறுதியாச்சே. (12)

ஆச்சென்ற சத்தியடா உகாரதீட்சை
அதையுணர்ந்து செபித்திடுவாய் மண்டலந்தான்
பாச்சென்ற வாசியதற் குறுதியாச்சு
பரிவான வாசியது பிராணனப்பா
நீச்சதில்லாச் சடசீவ னுறுதியானால்
நின்னயமா யாடிடலாம் வேணசித்து
மாச்சலிலாப் பொருளான பொருளைப்பார்த்து
வகைவிபரம் பூசைவிதி மார்க்கந்தானே. (13)

மார்க்கந்தான் காணமன மகாரபீடம்
மருவிநின்ற விந்துவடா வட்டமாகும்
தீர்க்கமுள விந்துவெனு மகாரந்தன்னைத்
தேர்ந்துபா ரோங்காரக் கம்பமாகி
காக்கவே கம்பநுனி மேலேயப்பா
கனமாகி நின்றதொரு வன்னிதன்னை
பார்க்கவது ஆயிரத்தெண் மலருக்குள்ளே
பாலகனே அமுதமதற் குள்ளேபாரே. (14)

பாரேநீ மதியமுதந் தன்னைமைந்தா
பணவிடைதா னொருபோது உள்ளேகொண்டால்
நேரேயிச் சடலமதற் கழிவோயில்லை
நிச்சயமா யுன்தேகம் வலுத்துப்போச்சு
காரேநின் மந்திரமுஞ் சித்தியாச்சு
கருத்தான முடிவுபொருட் காணலாச்சு
மாறுந அட்டகர்மஞ் சித்தியாச்சு
மகத்தான சத்தியைப்பூ சித்துப்பாரே. (15)

பாரேநீ இடகலைபிங் கலையுங்கூடிப்
பத்திநின்ற யிடமல்லோ சுழிமுனையாச்சு
தேரேநீ இம்மூன்றுஞ் சுடருமான
தீபவொளி வெளியதனைக் கண்டுகொண்டு
காரேநீ சன்னதிமுன் பாகநின்று
கருக்குருவைக் கண்டுமனக் கவலைவிண்டு
கூரேநீ அம்பிகையின் மூன்றெழுத்தைக்
குறித்துநித்தங் கூடுவது அறிவுதாமே. (16).

அறிவான வஸ்துவல்லோ பிர்மரூபம்
அபரமென்றும் பரமென்றுந் துவிதமாகி
விரிவான சத்திசிவ ரூபமாகி
வெவ்வேறு கர்த்தரென விளங்கிமூன்று
பிரிவான சுடராகிச் சுடர்மூன்றாகிப்
பேசரிய வெளியாகி வெளியிலேதான்
குறியான ஓரெழுத்தே சத்தமாகிக்
கொண்டுநின்ற ஐந்தெழுத்துங் குருசொரூபம். (17)

குருவான வஸ்துவல்லோ நாலுவேதம்
கூறியமா வாக்கியத்தின் பொருளைநாடார்
ஒருநாளு மீடேறப் போறதில்லை
உண்மைசொன்னே னென்மகனே மாணுகேளு
தெருவான தெருவொன்று சந்திமூன்று
தேர்ந்தறிந்து முச்சந்தி வழியேகூட்டிப்
பொருளான பொருளறியச் சூக்மயோகம்
பூண்டதல்லோ சிவராஜ யோகமாமே. (18)

கடுவெளிச்சித்தர் சிவராஜயோகம் ௰௮.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் குருவமூப்ப ஞர் குமாரர் வைகுண்டமூப்பனரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

முப்பத்தாறுவது:

கடுவெளிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# பூரண ஞானம் சூஎ.

### கண்ணிகள்.

குருவைத் தொழுதிடுவேன் கும்பிடுவேன் ஆதரிப்பேன்
குருவினுட சீர்பாதம் (என்னையா) கொண்டேன் தலைமேலே. (1)

பரசாட் சிகாரமென்ற பண்பறையைத் தான்திறந்து
உரசாட்சி யாலே (என்னையா) உகந்தடிமை கொண்டவரோ. (2)

ஒளியா விருளறுத்து வுற்றபடி மாறாமல்
தெளிய நமக்குரைக்க (என்னையா) தேசிகனாய் வந்தவரோ. (3)

மானும் புலியுமொரு வாவிதனில் நீர்குடிக்க
மோனமென்ற வீட்டில் (என்னையா) மொழிந்தவுப தேசிகரோ. (4)

அந்தர காமியத்தி லாயனலாய் வீற்றிருந்து
இந்திரிய ஞாலமதில் (என்னையா) என்பிறவி தீர்த்தவரோ. (5)

அச்சாவ தாரமென்ற யாமனையிற் பள்ளிகொண்டே
உச்சி யதுவழியாய் (என்னையா) ஊடுருவி நின்றவரோ. (6)

உந்தித் தவத்துதிக்கும் உம்பர் பராபரமாய்
சந்தித்து என்முடிமேல் (என்னையா) சீர்பாதம் வைத்தவரோ. (7)

மூலாதா ரத்துள் முழுக்கனலைத் தாள்திறந்து
பாலூ லவித்து (என்னையா) பகுந்தளிக்க வந்தவரோ. (8)

எட்டெழுத்தி னூடுருவி யேரூப ரேசகமாய்
வட்டமொற்ற மாவில் (என்னையா) வளர்ந்த பராபரமே. (9)

பத்திரம தான பதிதனிலே தானிருந்து
முத்திசமா யெற்கு (என்னையா) வரமருள வந்தவரோ. (10)

சரியைகிரி யையோகந் தன்னையுமே தான்கடந்து
அரியதொரு ஞானமதில் (என்னையா) ஆளடிமை கொண்டவரோ. (11)

பத்திரண்டோர் நாலும் பழம்பொருள தாயுதித்துச்
சத்தியமெய் வாய்க்கவுமே (என்னையா) சற்குருவாய் வந்தவரோ. (12)

தத்துவந்தொண் ணூற்றாறந் தானடக்கி யேயெனக்கு
உத்தமெய்ஞ் ஞானம் (என்னையா) உபதேசந் தந்தவரோ. (13)

அந்தக்கர ணத்தை யறிவாகத் தானறுத்துத்
தொந்தப் பிறவி (என்னையா) துலைக்கவென்று வந்தவரோ. (14)

தீராத தீவினையைத் தீர்க்கும் பராபரமாய்ப்
பேரா லறிய (என்னையா) பெரிய பெருமானே. (15)

என்னோ டுடன்பிறந்த யென்பிறவி வேரறுத்துப்
பொன்னாடர் காண (என்னையா) பொருளாக வந்தவரோ. (16)

சீலமெய்ஞ் ஞானந் தெவிட்டா தெனக்களித்து
நாலாம் பதத்துருகி (என்னையா) நாட்டவந்த நாயகனே. (17)

சாத்திரங்கள் வேதம் சகல கலையுணர்ந்து
மாத்துரைக ளில்லா (என்னையா) வரமுனியாய் வந்தவரோ. (18)

முக்குணமொ டுக்கி முடிமே லடியைவைத்து
வைக்குணஞ்சொல் லாத (என்னையா) பரமபத மீய்ந்தவரோ. (19)

ஐம்பத்தோ ரட்சரத்தி லாடி யுருவினின்ற
வம்புற்ற வெண்புரவி (என்னையா) மாற்றிவைக்க வந்தவரோ. (20)

கூறுமுப தேசங் குருவா யெனக்களித்துத்
தேறுதலை யாக (என்னையா) திருநாமந் தந்தவரோ. (21)

பச்சைத் திருமேனி பல்லக்கு மேலேறிக்
கொச்சைப் பிறவியதை (என்னையா) கோறல் புரிபவரோ. (22)

நித்தா சனமாய் நிறைந்தடி யேனிடத்திற்
பத்தி நடனம் (என்னையா) பரம பதத்தானே. (23)

ஆங்காரங் கோப மடக்கி யருட்பதத்தில்
நீங்கா திருத்தி (என்னையா) நிறைவிளக்காய் வந்தவரோ. (24)

மத்திம தானருண மாயை தனையறுத்து
உத்தமகு ணத்தை (என்னையா) உறுதிபெறத் தந்தவரோ. (25)

பஞ்சமலந் தானறுத்துப் பாசபந்த மேயறுத்துத்
தஞ்சமினி வேறெனக்கு (என்னையா) சற்குருவாய் வந்தவரோ. (26)

கற்புநீ தக்குணமுங் கற்பனையா மென்றுரைத்து
ஒப்பமுட னென்னிடத்தில் (என்னையா) உள்ளொளியாய் வந்தவரோ.

இகமும் பரமும் எனக்கரிய வேயியம்பிப்
புகமும் விலக்கி (என்னையா) பகலிரவாய் வந்தவரோ. (28)

அகர உகரமுமாய் ஐம்பத்துமொன் றாய்
மகரங் கலந்த (என்னையா) வரமுனிநம் மாள்வாரோ. (29)

ஆற்றைக் குறுக்கடைத்தே ஆள்வாரை முன்னிறுத்தி
காற்றையடைத் தூதிரவி (என்னையா) காட்டிவைக்க வந்தவரோ. ()

புவியி லொளித்தவரோ பூவுலகை யாண்டவரோ
செவியி லுபதேசம் (என்னையா) செய்தடிமை கொண்டவரோ. (31)

அட்டாங்கம் போட்டு அதின்மேற் பிரட்டிவைத்துப்
பட்டாங்கு சொல்லி (என்னையா) பரமபதத் தாள்வாரோ. (32)

நெஞ்சுதொட்டி லாக நினைவு கயிறாகக்
கொஞ்சிவிளையாட (என்னையா) கொத்தடிமை கொண்டவரோ. (33)

ஏழாங்கு கோபுரமாம் ஈயெறும்பு பாம்பேறுச்
சூழாங்கு மாடம் (என்னையா) துயில்கொள்ள வந்தவரோ. (34)

ஐந்து மனைபிளந்து ஆகாசப் பந்தலிட்டு
பந்தலின்கீழ் தானே (என்னையா) பயிர்செய்ய வந்தவரோ. (35)

பட்டணத்தைக் கட்டிப் பலரைக் குடியேற்றிப்
பட்டணத்துள் ளோர்க்கு (என்னையா) பயிரேற்ற வந்தவரோ. (36)

மேட்டுவயல் வெட்டி விரும்பி வயல்திருத்தி
நாட்டிலுள்ளோர் வாழ (என்னையா) நலம்பெறச் செய்தவரோ. (37)

வித்து விதைத்ததனை மேற்பார்க்க ஆள்வைத்துச்
சித்துக் கதிரறுக்க (என்னையா) செல்வமுடன் வந்தவரோ. (38)

கருவூர் நடுவணையாங் காமா வடிபிற்
திருவடர்ந்த நல்லூரில் (என்னையா) தீரமுடன் வந்தவரோ. (39)

அய்யரென்ற நாமமதை யாதிமுத லாகவைத்துச்
செய்யபர மாகவந்து (என்னையா) தீவினைகள் தீர்த்தவரோ. (40)

அச்சாவ தாரனே ஆதிமுதல் வேதியனே
உச்சிவழி காட்டி (என்னையா) உகந்தடிமை கொண்டவரோ. (41)

அவ்வி லுதித்துமே ஆகாய மூடுருவி
உவ்வி லிருந்து (என்னையா) உகந்தடிமை கொண்டவரோ. (42)

சந்திரருஞ் சூரியருந் தாங்கும் நடுவணையில்
இந்திரிய வீட்டில் (என்னையா) யிருந்தரசாண்டவரோ. (43)

மூலத் துதித்துமும் மண்டலமு மூடுருவி
மேலத் தெருவிருந்து (என்னையா) வேகமா யாள்பவரோ. (44)

நாலு மிருமூன்றும் நாட்டி லுபயீராறும்
சாலவீ ரெட்டுமைந்தாய் (என்னையா) சார்ந்தளிக்க வந்தவரோ. (45)

கண்ணி லுருவாய்க் கலந்திருந்து மெவ்வுயிர்க்கும்
விண்ணுமண்ணு மொன்றாய் (என்னையா) விரிந்த பராபரனே. (46)

அறுகுறுனி போலிருந்து அண்ட முடைக்கும்
பெருகுமுப தேசமதை (என்னையா) பேசும் பெருமாளோ. (47)

தன்னை யறிந்து தயவுமிகக் கூர்ந்ததற்பின்
என்னை யறிய (என்னையா) இயம்பும் பெருமாளோ. (48)

கறுத்த நிறமுடைய காருத்த னென்றே
மறுத்துப் பிறவா (என்னையா) வழியெனக்குச் சொன்னவரோ. (49)

பொய்யென்று சொல்லிப் புவன மதைவிடுத்து
மெய்யென்று பாதம் (என்னையா) விரும்பித்தந் தாள்பவரோ. (50)

ஆள்வாராய் வந்து அடிமை தனைத்திருத்திப்
பாழ்வீட்டைக் காட்டும் (என்னையா) பரபஹரி கேசரியோ. (51)

அண்டமுடி மீதி லருளொளியாய் நின்றிலங்கி
முண்டகப்பூ மாமலராய் (என்னையா) முத்திதர வந்தவரோ. (59)

கற்றவர்கள் போற்றக் கரியமால் நான்முகனுப்
பெற்றதாய் தந்தையென (என்னையா) பேருலகில் வந்தவரோ. (52)

சித்தரியும் மோனவெளி சிற்பரத்தி லேயிலங்கப்
புத்தி வழியாய் (என்னையா) புகழ்பெறவே நின்றவரோ. (54)

தூண்டா விளக்கின் சுடரிரண்டுந் தானாகி
நீண்டா னெனமுன்பு (என்னையா) நின்றாள வந்தவரோ. (55)

மூலமெனுந் தலத்தில் மூண்டெழுந்த வாசியது
தாலமெனும் நாசிநடு (என்னையா) தானிருப்ப வந்தவரோ. (56)

ஓங்கார வட்டமென வுற்றமுடி மீதினிலே
றீங்கார நாதமென்ன (என்னையா) நின்மலமாய் நின்றவரோ. (57)

ஆதியந்த மும்நடுவாய் அண்டாண்ட பிண்டமுமாய்
சோதி மயமாய் (என்னையா) துலங்க வுதித்தவரோ. (58)

பேச்சுமூச் சில்லாப் பெரும்பா ழெனுங்கடலில்
நீச்சுப் பழகெனவே (என்னையா) நேசிக்க வந்தவரோ. (59)

நாத மெனுங்கீதம் நாடியுதித் தேயொடுங்கும்
போதந் தனையுரைக்க (என்னையா) பூரணமாய் வந்தவரோ. (60)

முப்பா ழெனும் வெளியில் முச்சுடராய்த் தோன்றியதற்
கப்பாலும் நிற்க (என்னையா) அரும்பொருளாய் வந்தவரோ. (61)

சித்தரியும் பேரியும் சேரும் பரவெளியில்
அத்தனரி யொன்றாய் (என்னையா) அமர்ந்தாள வந்தவரோ. (62)

அகர உகரமுமொன் றாயமையுந் தானம்
சிகர வகரமுடன் (என்னையா) சின்மயமாய் வந்தவரோ. (63)

முத்திக்கு வித்தாகி மூதண்ட வாசனத்திற்
சத்திசிவ மொன்றாக (என்னையா) தானே வளர்பவரோ. (97)

உச்சி யதன்கீழே உண்ணா வதன்மேலே
மெச்சுஞ் சுடராய் (என்னையா) விளங்கவே வந்தவரோ. (65)

முச்சந்தி வீதியிலே மூன்றுபொரு ளொன்றெனவே
சச்சிதா னந்தநிலை (என்னையா) தானெனக்குத் தந்தவரோ. (66)

சாலோக சாமீப சாரூப மென்றநிலை
மேலோக சாயுச்சியம் (என்னையா) வேண்டி யடைந்தேனே. (67)

கடுவெளிச்சித்தர் பூரண ஞானம் கூஎ.

முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பராசத்திதுணை.

முப்பத்தேழாவது:

# கடுவெளிச்சித்தர்பாடல்.

பாபஞ்செய் யாதிரு மனமே நாளைக்
கோபஞ்செய்தேயமன் கொண்டோடிப் போவான் (பாபம்)

சாபங் கொடுத்திட லாமோ விதி
தன்னைநம் மாலே தடுத்திட லாமோ
கோபந் தொடுத்திட லாமோ இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ. (பா)

சொல்லருஞ் சூதுபொய் மோசம் செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லதோர் பத்திவிசு வாசம் எந்த
நாளும் மனிதற்கு நன்மையாம் நேசம். (பா)

நீர்மேற் குமிழியிக் காயம் இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதின் மெத்தவும் நேயம் சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம். (பா)

நந்த வனத்திலோ ராண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி. (பா)

தூடண மாகச்சொல் லாதே தேடும்
சொத்துக் களிலொரு தூசுநில் லாதே
ஏடணை மூன்றும்பொல் லாதே செகத்
திச்சைவைத் தாலெம லோகம்பொல்லாதே. (பா)

நல்ல வழிதன்னை நாடு எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக்கொண்டாடு. (பா)

நல்லவர் தம்மைத்தள் ளாதே அறம்
நாலெட்டி லொன்றேனும் நாடித்தள் ளாதே
பொல்லாங்கி லொன்றுங் கொள் ளாதே கெட்ட
பொய்மொழி கோட்கள் பொருந்தவிள் ளாதே. (பா)

வேத விதிப்படி நில்லு நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாதக நிலைமையே சொல்லு பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக்கொல்லு. (பா)

பிச்சையென் றொன்றுங்கே ளாதே எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே
இச்சைய துன்னையா ளாதே சிவன்
இச்சைகொண் டவ்வழி யேறிமீ ளாதே. (பா)

மெய்ஞ்ஞானப் பாதையி லேறு சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு உன்னை
அண்டினோர்க் கானந்த மாம்வழி கூறு. (பா)

மெய்க்குரு சொற்கடக் காதே நன்மை
மென்மேலுஞ் செய்கை மிகவடக் காதே
பொய்க்கலை யால்நடக் காதே நல்ல
புத்தியைப் பொய்வழி தனில்நடக் காதே. (பா)

கூட வருவதொன் றில்லை புழுக்
கூடெடுத் திங்க ணுலாவலே தொல்லை
தேடரு மோக்ஷமா மெல்லை அதைத்
தேடும்வழியைத் தெளிவோர்க்கு மில்லை. (பா)

ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு இந்த
ஐவர்க்கு மைவ ரடைந்திடும் நாடு

முந்த வறிந்துநீ தேடு அந்த
மூல மறிந்திட லாமுத்திவீடு. (பா)

உள்ளாக நால்வகைக் கோட்டை பகை
ஓடப் பிடித்திட்டா லாளலாம் நாட்டை
கள்ளப் புலனென்னுங் காட்டை வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம்வீட்டை. (பா)

காசிக்கோ டில்வினை போமோ அந்தக்
கங்கையா டிற்கதி காணவுண் டாமோ
பேசுமுன் கன்மங்கள் சாமோ பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ. (பா)

பொய்யாகப் பாராட்டுங் கோலம் எல்லாம்
போகவே வாய்த்திடும் யார்க்கும் போங்காலம்
மெய்யாக வேசுத்த சாலம் பாரில்
மேவப் புரிந்திடி லென்னனு கூலம். (பா)

சந்தேக மில்லாத தங்கம் அதைச்
சார்ந்துகொண் டாலுண்டாந் தாழ்வில்லாப்பொங்கம்
அந்தமில் லாதவோர் துங்கம் எங்கும்
ஆனந்த மாக நிரம்பிய புங்கம். (பா)

பாரி லுயர்ந்தது பத்தி அதைப்
பற்றின பேர்க்குண்டு மேலான முத்தி
சீரிலுய ரட்ட சித்தி யார்க்கும்
சித்திக்கு மேசிவன் செயலினாற் பத்தி. (பா)

அன்பெனும் நன்மலர் தூவி பர
மாணந்த தேவ னடியிணை மேவி
இன்பொடு முன்னுட லாவி நாளுநப்
ஈடேறத் தேடாய்நீ யிங்கேகு லாவி. (பா)

ஆத்தும வீடேற்றங் கண்டு அதுக்
கான வழியை யறிந்துநீ கொண்டு
சித்தமில் லாமலே தொண்டு ஆதி
சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடுங் கெண்டு. (பா)

ஆண்மாவா லாடிடு மாட்டம் தேகத்
தான்மா வற்றபோதே யாமுடல் வாட்டம்
வான்கதி மீதிலே நாட்டம் நாளும்
வைத்தா லுனக்கு வருமேகொண் டாட்டம். (பா)

எட்டு மிரண்டையு மோர்ந்து மறை
எல்லா முனக்குள்ளே யேகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து. (பா)

இந்த வுலகமு முள்ளும் சள்ளும்
இச்சைவை யாமலே யெந்நாளுந் தள்ளும்
செந்தேன்வெள் ளந்தனை மொள்ளும் உன்றன்
சிந்தைதித் திக்கத் தெவிட்டவுட் கொள்ளும். (பா)

பொய்வேதந் தன்னைப்பா ராதே அந்தப்
போதகர் சொற்புத்தி போதவோ ராதே
மைவிழி யாரைச்சா ராதே துன்
மார்க்கர்கள் கூட்டத்தின் மகிழ்ந்துசே ராதே. (பா)

வைதோரைக் கூடவை யாதே இந்த
வையமுற் றாகப்பெற்றாலும்பொய் யாதே
வெய்ய வினைகள்செய் யாதே கல்லை
வீணிற் பறவைகண் மீதிலெய் யாதே. (பா)

சிவமன்றி வேறேவேண் டாதே யார்க்கும்
தீங்கான சண்டையைச் சிறக்கத்தூண் டாதே
தவநிலை விட்டுத்தாண் டாதே நல்ல
சன்மார்க்க மில்லாத நூலைத்தோண் டாதே. (பா)

பாம்பினைப் பற்றியாட் டாதே நல்ல
பத்தினி மார்களைப் பழித்துக்காட் டாதே
வேம்பினை யுலகிலூட் டாதே உன்றன்
வீராப்புத் தன்னை விளங்கநாட் டாதே. (பா)

போற்றுஞ் சடங்கை நண் ணாதே உன்னைப்
புகழ்ந்துமே பலரிற் புகலவொண் ணாதே

சாற்றமுன் வாழ்வை யெண் ணாதே பிறர்
தாழும் படிக்குநீ தாழ்வுபண் ணாதே. (பா)

கஞ்சாப் புகைபிடி யாதே வெறி
சாட்டி மடக்கிய கட்குடி யாதே
அஞ்ச வுயிர்மடி யாதே புத்தி
யற்றவஞ் ஞானத்தின் நூல்படி யாதே. (பா)

பத்தியெனு மேணிநிலை நாட்டித் தொந்தப்
பந்தமற் றவ்விடம் பார்த்ததை நீட்டி
சத்திய மென்றதை யீட்டி நாளும்
தன்வச மாக்கிக்கொள் சமயங்க ளோட்டி. (பா)

செப்பரும் பலவித மோகம் எல்லாம்
சீயென் றெறுத்துத் திடங்கொள்வி வேகம்
ஒப்பரு மட்டாங்க யோகம் நன்றாய்
ஓர்ந்தறி வாயவற் றுண்மைசம போகம். (பா)

எவ்வகை யானநன் னீதி அவை
எல்லா மறிந்தே யெடுத்துநீ போதி
ஒவ்வா தென்றபல சாதி யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துநீ சோதி. (பா)

கள்ளவே டம்புனை யாதே பல
கங்கையி லேயுன் கடம்நனை யாதே
கொள்ளையே கொள்ளநினை யாதே நட்புக்
கொண்டு பிரிந்துநீ கோண்மூனை யாதே. (பா)

எங்குஞ் சுயம்பிர காசன் அன்பர்
இன்பா மிதயத் திருந்திடும் வாசன்
துங்க வடியவர் தாசன் தன்னை
துதிக்கிற் பதவி யருளுவா னீசன்

கடுவெளிச்சித்தர் பாடல் ருடு,

முற்றிற்று.

உ

குருவே துணை.

மூப்பத்தெட்டாவது:

மதங்கநாதரென்ற

சங்கிலிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௰௬.

ஆதிமூ லப்பொருளா யகண்டாகார
அம்பரமாய் மெய்ஞ்ஞானச் சுடருமாகி
நீதியுள்ள ஓங்காரச் சுழினையாகி
நிறைந்தெங்குந் தன்மயமாய் ஜீவகோடி
ஓதிடவொண் ணாதனைத்துங் காத்தாய்நின்ற
உண்மையுள்ள தாரகமாம் வஸ்துவாகி
மேதினியி லென்றனக்குக் குருவாய்த்தோன்றி
விளங்குகின்ற பரம்பொருளின் பாதங்காப்பே. (1)

காப்பாக பூசைசெய்ய வகைதானப்பா
களிப்புடனே சொல்லுகிறேன் கருவாங்கேளு
தாப்புடனே அனந்தம்பேர் தீபபூசை
தான்செய்வா ரதிலோர்சக் கரத்தைவைத்து
மூப்புடனே பூசிப்பார் தாயைப்போற்றி
முழுப்பூசை யேபுரிவா ரனந்தம்பேர்கள்
கோப்புடனே நானியற்றும் பூசைமார்க்கம்
குறிப்பாக நீநன்றா யுணர்ந்துபாரே. (2)

பாரேநீ நாற்பத்தி முக்கோணந்தான்
பரிவாகப் பூசைசெய்வார் சித்தரெல்லாம்
நேரேதான் மேருவைப்போற் பூசைசெய்வார்
நெடியதொரு சாபமிட்டா லண்டம்வேகும்
கூரேநீ மேருதச தீட்சைசெய்து
கூரறிந்த சித்தருடன் சேர்ந்துகொண்டு
கோர்ரேநீ மேருதனைப் பூசைசெய்தால்
கோரியதோ ருபதேசச் சித்துமர்ச்சே. (3)

சித்தான சித்தல்லோ கெவுனசித்தி
சீர்பெறவே யெப்பொருளுஞ் சித்தியாகும்
முத்தான வாலையின்மூன் றெழுத்தைக்கீறி
முன்னறிந்து பூஜைசெய்து பின்புபாரு
வித்தான திரிபுரையி னெட்டெழுத்தை
விபரமுடன் மானதமாய்ப் பூசைசெய்து
உத்தமதொரு புவனைமந் திரஞ்செபித்து
உலகமதிற் சித்தனென்ற பெயரைவாங்கே. (4)

வாங்கியே யாமளைப்பெண் ணுறெழுத்தை
மைந்தனே பூசைசெய்து பாதம்போற்று
தாங்கியதோர் வாலையின்ற னைந்தெழுத்தைத்
தயவாகக் கும்பகமாய் மவுனபூசை
ஓங்கியதோர் தீட்சையைந்து முடிந்தபின்பு
உயர்வான சிவயோக நிலையைக்கண்டு
தீங்கிலாப் பிராணுபஞ் செய்தாயானல்
தெவிட்டாத காயசித்தி யெய்தும்பாரே. (5)

பாரேதான் அட்டசித்துந் தெரிந்தாயானற்
பாங்குடனே சிவயோகம் முடிந்துபோச்சு
நேரேதான் பிர்மநிலை கண்டுதேறு
நேர்மையுட னென்னுசான் மிருகண்டேயர்
கூரேதான் சிவயோக மார்க்கந்தன்னிற்
குறித்ததனை நன்ருகப் பார்த்தறிந்து
தேரேதான் ஞானமதின் சூட்சந்தன்னை
தெரிசித்து ஞானவழி சேருவாயே. (6)

சேருதற்குச் சிவயோக வழியைச்சொன்னேன்
சித்தருட மருமமெல்லாந் தெரியச்சொன்னேன்
நேருபெரும் பூசையின்றன் விபரஞ்சொன்னேன்
நிலைதெரிந்து நடப்பதற்கு வழியுஞ்சொன்னேன்
வீறுடைய சிவனுமையாள் பூசைசொன்னேன்
வேதாந்த வழியனைத்தும் விளங்கச்சொன்னேன்
மாறுபடா சித்தர்கள்தன் பெருநூலிற்முன்
மைந்தனே கண்டறிவாய் நீதேந்தானே. (7)

நீதமுடன் சூதகற்பங் கேட்பாயப்பா
நீணிலத்தில் யாவருக்குஞ் சொல்லவில்லை
வேதவாக் கியமிதுதா னப்பாகேளு
விபரமுடன் சொல்லுகிறேன் திரமதாக
நாதமுடன் சூதமடா மந்திரவாலை
நாதாந்த வாலைரச மென்னசொல்வேன்
மாதுகன்னி யமுதமதி யமுதமாகும்
மகத்தான போதமது சொல்லொண்ணாதே. (8)

சொல்லொண்ணா மதியமுதஞ் சூதமாகும்
சூதமதின் கற்பமது கிட்டாதப்பா
நல்லதொரு சூதமது சுத்தவெள்ளை
நலமான வெள்ளையடா மதிதானச்சு
வல்லதொரு மதிதானும் விந்துவிந்து
வளமான விந்ததுவுஞ் சூதமாகும்
எல்லையில்லாச் சூதமது பாலாம்விந்து
இனிமையுடன் விந்துவிலை பருவம்பாரே. (9)

பாரப்பா விந்துரசம் நிலையைக்கண்டு
பத்தியுடன் வாங்குதற்கு வகையைக்கேளு
தேறப்பா வகையென்ன வென்றுகேட்டால்
திறமான பூர்வபட்ச மந்தநாளிற்
கோரப்பா குருவாரந் தன்னிலேதான்
குணமான நாளிதனைக் குறிப்பாய்க்கண்டு
சீரப்பா நடுவணையி லமுதமூறும்
சிறக்கவே மனதுகந்து காலையூணே. (10)

காலூணும் போதில்விந்து ரசமும்வீழும்
களிப்புடனே பீங்கானில் வாங்கிக்கொள்ளு
மேலுலகோ ரலைந்தாலுங் கிட்டிடாத
மேலான ரசமதிலே வீரங்கூட்டி
வாலையுட கிருடையதாற் பத்துக்கொன்று
வளமாக வீரமுடன் பூரஞ்சேர்த்தே
காலையத்திற் குருநாதன் செய்துநின்ற
கைமுறையாய்ப் பூரமுட னமுதஞ்சேரே. (11)

சேர்த்தப்பா நாகரச மதனிற்சேர்த்துச்
சிறப்பாக விரலாலே யமர்த்திமத்தி
பார்த்தப்பா ரவிமுகத்தில் வைத்துப்பாரு
பாலகனே ரசநாகம் மாண்டுபோகும்
ஆர்த்தப்பா மாண்டரசம் நிறம்பொன்னுகும்
அப்பனே மெழுகாகு மென்னசொல்வேன்
காத்தப்பா குருவருளாற் கண்ணுற்கண்ட
களிப்பான மெழுகதனைப் பதனம்பண்ணே. (12)

பதனமது செய்தப்பா குருவைப்போற்றிப்
பரிவாக ஆத்தாளைப் பூசைசெய்தே
இதமுடனே பணவிடைதான் கொண்டாராகுல்
இன்பமுள்ள போதையது அதீதமப்பா
சதமுடைய போதமய மென்னசொல்வேன்
சற்குருவி னருளாலே தெரிந்துகொள்ளு
விதமுடைய போதமதைக் கண்ணிற்காண
வெகுபேர்க ளலைந்துதெரி யாமற்றுனே. (13)

தெரியாம லலையவில்லை சிதம்பரத்தை
தெரிசித்த சித்தர்கள்தான் செப்பினுர்கள்
உரியதொரு வாசிமல ரதனைப்பார்க்கில்
உண்மையுள்ள தீபசுட ரதிலேதோனும்
அறியவே வினைதனையும் நாடிநீதான்
அம்பிகைப்பெண் வாலையுட நடனங்கண்டால்
பிரியமுடன் றன்னிலையைத் தானேகாட்டும்
பேசாம லிதையறிந்து மவுனம்வையே. (14)

வையப்பா கற்பமதாற் சட்டைவாங்கும்
மைந்தனே கருப்பாக உரிந்துபோகும்
செய்யப்பா சடமதுதான் வலுத்துப்போகும்
சிறந்ததொரு வாசியடா சுழினைக்கேறும்
உய்யப்பா சுழினையிலே தீபந்தோணும்
உற்றுற்றுப் பார்க்கையிலே வெளியாய்த்தோணும்
மெய்யப்பா சிவாயவென வமுதங்கொண்டு
மேலான அஷ்டாங்க யோகம்பெற்றே. (15)

பெற்றதினால் யோகமுதற் சகலசித்தும்
பேரான பாருலகிற் சித்தர்போற்ற
உற்றபே ரனேகமடா பெருமைமெத்த
ஓகோகோ வென்னசொல்வேன் பின்னும்பற்ற
மற்றந்தச் சுடரொளியும் மேலேசெல்ல
மார்க்கமுள்ள மூலமதை மனதில்வைத்துக்
கற்றறிந்து கற்பமுண்டு வலுமையான
காயமடா தேகம்வச்ர காயமாச்சே. (16)

சங்கிலிச்சித்தர் ஞானசூஸ்திரம் ௰௬.

முற்றிற்று.

ஸ்ரீவில்லி புத்தூரைச்சேர்ந்த சுந்தரபாண்டியம் குருவமூப்பனார் குமாரர் மாமுண்டி மூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கணபதிதுணை.

முப்பத்தொன்பதாவது:

## மதங்கநாதரென்ற

# சங்கிலிச்சித்தர்பாடல் ௩௬.

### கும்மி.

மூலக்க ணேச னடிபோற்றி யெங்கும்
முச்சுட ராகிய சிற்பரத்தில்
வாலை திரிபுரை அம்பிகை பாதத்தை
மனதிற் கொள்வாயா னந்தப்பெண்ணே. (1)

எங்கள் குருவாந் திருமூலர் பாதம்
எப்போதும் போற்றித் துதித்தேதான்
சங்கைக ளற்றமா சித்தர்கு ழாங்களின்
றாளைப் பணிவாயா னந்தப்பெண்ணே. (2)

ஓங்கார வட்ட முடலாச்சு பின்னும்
ஊமை யெழுத்தே உயிராச்சு
றீங்காரம் ஸ்ரீங்கார மான வகையதை
நீதா னறிவாயா னந்தப்பெண்ணே. (3)

அகாரம் உகாரத் துடன்பொருந்த வது
யகார மான தறிந்துகொண்டு
சிகார மான தெளிவினி லேநின்று
தேர்ந்து கொள்வாயா னந்தப்பெண்ணே. (4)

பஞ்சபூ தங்களைக் கண்டறிந்தோர் இகப்
பற்றினைச் சற்றும் நினைப்பாரோ
சஞ்சல மில்லாது யோகவழியதைத்
தானறிந் துய்வாயா னந்தப்பெண்ணே. (5)

தவ நிலையை யறிந்தோர்க்கு ஞானந்
தன்னாற் றெரியு மெனவேதான்
நவசித் தாதிகள் கண்டுதெளிந்ததை
நன்று யறிவாயா னந்தப்பெண்ணே. (6)

வாசி நிலையை யறிந்துகொண்டால் தவம்
வாச்சுது வென்றே மனதுகந்து
தேசி யெனும்பரி மீதேறி நாட்டம்
செய்த தறிவாயா னந்தப்பெண்ணே. (8)

நந்தி கொலுவைத் தெரிந்தோர்கள் வாசி
நாட்டம் வீடார்க ளொருக்காலும்
உந்திக் கமலத்தி லந்தணன் பீடத்தை
உற்றறிந் துய்வாயா னந்தப்பெண்ணே. (8)

மாலுந் திருவும் வசித்திருக்கும் இடம்
வணங்கி யப்பாற்செல் லும்போது
மேலும் உருத்திரன் ருத்திரி சேவையை
மேவியே காண்பாயா னந்தப்பெண்ணே. (9)

எந்தெந்தப் பூசைபு ரிந்தாலும் பரம்
ஏகமென் றேகண் டறிந்தாலும்
சிந்தையடங்கு முபாயஞ் சதாசிவன்
சீர்பாத மல்லோவா னந்தப்பெண்ணே. (10)

தானேதா னாக நிறைந்துநின்ற சிவ
தற்பர மாகிய வுற்பனத்தை
நானேநா னென்றறிந் துக்கொண்டு பர
நாட்ட மறிவாயா னந்தப்பெண்ணே. (11)

வஞ்சப் பிறப்பு மிறப்புக்கு மேது முன்
வாசனை யென்றே யறிந்துகொண்டு
சஞ்சல மற்றுப்பி ராணயஞ் செய்திடிற்
றற்பர மாவாயா னந்தப்பெண்ணே. (12)

சரியை கிரியை கடந்தாலும் யோகஞ்
சாதித்து நின்றருள் பெற்றாலும்

உரிய ஞானவி சர்க்கமி லாவிடில்
ஒன்றும் பயனின்று னந்தப்பெண்ணே. (13)

தன்னையின் னுவெனத் தான்தெரிந்தாற் பின்னும்
தற்பர னைப்பார்க்க வேணுமோதான்
அன்னையும் அப்பனும் போதித்த மந்திரம்
அறிந்தவன் ஞானியா னந்தப்பெண்ணே. (14)

எண்சா ணுடம்பு மிதுதாண்டி எழி
லேற்கும் நவவாச லுள்ளதடி
தண்மை யறிந்து நடப்போர்க்கு எட்டுத்
தலங்கள் தோணுமா னந்தப்பெண்ணே. (15)

அஞ்சுபேர் கூடி யரசாள ஒரு
ஆனந்தக் கட்டடங் கட்டிவைத்த
செஞ்சிக் கோட்டையைக் கண்டிதுதானெனத்
தெரிந்துக் கொள்வாயா னந்தப்பெண்ணே. (16)

ஊத்தைச் சடல மிதுதாண்டி நீ
ருப்பிட்ட பாண்ட மிதுதாண்டி
பீத்தத் துருத்தி யிதுதாண்டி நன்றாய்ப்
பேணித் தெளிவாயா னந்தப்பெண்ணே. (17)

ஆத்தா ளெந்தனைப் பெற்றுவிட்டாள் எந்தன்
அப்பனு மென்னை வளர்த்துவிட்டார்
வேத்தா ளென்று நினையாம லிதன்
விபரங் கேட்பாயா னந்தப்பெண்ணே. (18)

இந்தச் சடலம் பெரிதென வெண்ணியா
னிருந்து வீண்காலங் நான்கழிந்துச்
சொந்தச் சடல மெதுவெனப் பார்த்திடிற்
சுத்தமாய்க் காணுமா னந்தப்பெண்ணே. (19)

மணக்கோலங் கண்டு மகிழ்ந்தபெண் ணுடுபின்
மக்களைப் பெற்று வளர்த்தெடுத்துப்
பிணக்கோல மாவ தறியாமல் வீணே
பிதற்றுவ தேதுக்கா னந்தப்பெண்ணே. (20)

எல்லாப் பொருள்களு மெங்கிருந்து வந்த
தென்றுநா னுற்றிதைப் பார்க்கையிலே
நல்லதோர் மண்ணினி லுற்பத்தி யென்றுபின்
நன்றாய்த் தோணுதா னந்தப்பெண்ணே. (21)

செத்தபின் கொண்டேச மாதிசெய் தப்பாற்
சிலநாட் கழித்தந்த மண்ணெடுத்து
உத்ததோர் பாண்டம தாகச்சுட்டுப்பின்
னுலகோர்க் குதவுதா னந்தப்பெண்ணே. (22)

சகல பொருள்களும் மண்ணு யிருப்பதைச்
சற்று நிதானித்துப் பார்க்கையிலே
பகவனங் கங்குமெள் ளெண்ணெய்யைப் போலவே
பற்றி யிருப்பாரா னந்தப்பெண்ணே. (23)

மண்ணிற் பிறந்த தழிந்துவிடும் பார்த்து
வைத்த பொருளு மழிந்துவிடும்
கண்ணினிற் காண்பதழிந்து விடுமென்று
கண்டறிந் துக்கொள்ளா னந்தப்பெண்ணே. (24)

பெற்றதாய் தந்தை சதமாமோ உடற்
பிறப்புச் சுற்றஞ் சதமாமோ
மற்றுமுள் ளோர்கள் சதமாமோ கொண்ட
மனைவி சதமோவா னந்தப்பெண்ணே. (25)

யாரா ரிருந்துஞ் சதமலவே நம
தாத்துமா கூடுவிட் டேகும்போது
ஊரா ரொருவர் சதமல வென்பதை
உற்றுநீ காண்பாயா னந்தப்பெண்ணே. (26)

இந்த வழியைத் தெரிந்துகொண்டே இவ்
விகத்தும் பரத்துமா சித்தனென்றே
சொந்தம தாகவென் பாட்டன் போகரிஷி
சொல்லை யறிவாயா னந்தப்பெண்ணே. (27)

வழி தெரியா தலைந்தோர்க ளிந்த
மாநிலந் தன்னிற் கோடாகோடி
சுழிமுனை தன்னைத்தெரிந்து கொண்டாற்பின்
சுகவழி கண்டோரா னந்தப்பெண்ணே. (28)

ஆசையொ ழித்தருள் ஞானங் கண்டுவீ
ணுண்மையைத் தான்சுட் டறுத்துத்தள்ளி
பாசத்தை விட்டுநீ யோகத்தைச் செய்திந்தப்
பாரினில் வாழ்வாயா னந்தப்பெண்ணே. (29)

இரவைப் பகலா யிருத்தித் தெரிந்துநீ
ஏக வெளியையுங் கண்டறிந்து
விரைவா யிந்த விதத்தெரிந்தாலிம்
மேதினி போற்றுமா னந்தப்பெண்ணே. (30)

பெற்றதாய் தந்தை யிருந்தாலென் கொண்ட
பெண்டீர் பிள்ளை யிருந்தாலென்
நற்றவஞ் செய்யா திருக்கில் நமனுக்கு
நாம்சொந்தங் காண்பாயா னந்தப்பெண்ணே. (31)

தீர்த்த மாடிக் குளித்தாலும் பல
தேவா லயஞ்சுற்றி வந்தாலும்
மூர்த்தி தரிசனஞ் செய்தாலும் நாலாம்
மோனமுண் டோசொல்லா னந்தப்பெண்ணே. (32)

காடு மலைக ளலைந்தாலும் பல
கன்மானுஷ் டானம் புரிந்தாலும்
ஒடுஞ்சித் தத்தைநி றுத்தார்க்குப் பர
வுற்பனம் வாய்க்காதா னந்தப்பெண்ணே. (33)

மாயா வுலக மயக்கத்தையும் நல்ல
வஞ்சியர் மீதுற்ற மோகத்தையும்
தீயா மாந்த ரொருக்காலும் வீடு
சேருவ தில்லையா னந்தப்பெண்ணே. (34)

நாலா கலைக ளறிந்தாலும் யோக
ஞான வழிகள் தெரிந்தாலும்
மேலா மோன மறிந்தவரே துஞ்சா
வீடுறு வார்களா னந்தப்பெண்ணே. (35)

சங்கிலி கண்டத் தணிந்துகொண்டு நற்
றவயோகஞ் செய்தங் கிருக்கையிலே
சங்கிலிச் சித்தனென் றென்பாட்டன் வந்து
சார்றந்தெரியுமா னந்தப்பெண்ணே. (36)

சங்கிலிச்சித்தர் பாடல் ௩௬.

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சங்கரலிங்க மூப்பனார் குமாரர் சாமியப்ப மூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

நாற்பதாவது:

ஊர்வசி திருவாய் மலர்ந்தருளிய

# இரத்தினச் சுருக்கம் ௰௬.

ஏக மாகி யிருந்த பராபரம்
தேக சீவசை தன்யசித் தாரணை
யோக மாக நினைத்திடு மூர்வசி
தோகை யாள்சொலும் ரத்னச் சுருக்கமே. (1)

சீல மான பதஞ்சலி யும்புலிக்
கால னுங்குரு வாமென் கருத்தினில்
மூல மான தியானமெய்ஞ் ஞானமும்
கோல மான தமிழ்க்கவி கூறவே. (2)

ஆசை யன்றி யிருந்தமெய்ஞ் ஞானியை
ஈச னென்றே யியம்பிடும் வேதமும்
வாசல் கண்டு நுழைந்தறி வாகினுற்
பூச லன்றிப் புலன்கெடும் யோகியே. (3)

பரிச மான புராணவி யாபகம்
சரியை யாமெனச் சாற்றுமெய்ஞ் ஞானநூல்
ஹரிகி ஓமென் றெழுத்தறி விற்பனக்
கிரியை பூசையி னிற்பலன் கிட்டுமே. (4)

வேறு.

படிகமதிற் றன்னுருவந் தோன்றுகின்ற
  படியேதான் சீவப்ர மாணமாகும்
கடினமனக் களங்கத்தாற் சீவனாகும்
  களங்கமற்றாற் பிரமமெனக் கருதலாகும்

குடிலமெனும் விபரீத பாவனையேஜெகமாய்க்
　　கோலியதிற் சிவன்மனங் கொள்கின்றால்
மடிவதுவும் பிறப்பதுவுஞ் சமுத்திரத்தின்
　　மன்னுமலை யிரண்டாகும் வகையதாமே. (5)

கலித்துறை.

ஆசிக்கு நாலுபத் தொன்பா னெழுத்தைத் தகாரமிட்டு
நேசிக்கும் நாதத்தின் மேலேவு காரத்தை நீட்டிவைத்து
வாசிக்கு மவ்வைச் சுழித்துச்சி காரத்தின் மவ்வையிட்டால்
காசிக்கு நீநடப் பானேன் மிகுபலன் கைவருமே. (6)

நாதிக்கும் ஐயுங் கிலியுடன் சவ்வையும் நாட்டிவைத்துச்
சோதிக்கும் அவ்வினிற் பின்பாக மவ்வினிற் சூலமிட்டுச்
சாதிக்கு முன்னஷ்ட கர்மத்தின் வாலையைத் தான்பெறலாம்
வாதிக் குதவிலொன் றுமாகாது யோக வழக்கமிதே. (7)

வேறு.

நாக்காலே நாட்டுவது பக்கமாசி
　　நவமியடா யேழான ராசிமிச்சம்
வாக்கார மனதார வாகுபாகும்
　　வலுத்தநாள் சோதியடா கிழமைவெள்ளி
நாக்காலே கன்னியிடங் கொடுத்துவாங்கி
　　நாட்டினாற் கண்டவரை முகியும்பாரு
மூக்கான நாசியிடை கலையைப்பாரு
　　முழுமதியின் சோதிமுச் சில்லைத்தானே. (8)

வெண்பா.

பூரகத்தை யெண்ணான்கு போக்கிவிடு ரேசகத்தைக்
கூறுமதிற் பாதிவிடக் கோணாதே—பேர்பெரிய
அம்பரத்தைக் கண்டங் கசபையறு பத்தொருநால்
கும்பகத்தைச் செய்யக் குணம். (9)

குணமாகும் மூலத்திற் குண்டலிசட் பீஜத்
துணையதனாற் சாதனஞ்செய் தோன்று—வுணர்வுதரும்
பிராணாய் மாதிமுதற் பேசா மவுனவரா
நிராணய சாதனையில் நில். (10)

வேறு.

மூலச் சுழிபிட் டிருமாந்து மூக்கி லிரண்டு வகுப்பாகி
மோசப் படுத்தும் வகைதானே மூன்றத் தொருபங் குயிர்மூச்சு
நாலைச் செலவிட் டதினுமேலே நாளைக் குறைக்கும் படியாகி
நாசப் படுவின் மதிபோல நமனுக் குயிரின் றிரையாச்சு
பாலைச் சிறுக வனற்காய்ச்சிப் பாசிப் பயறிட் டுறவான
பாகத் தமிர்த முண்பார்க்குப் பாவச் சனனப் பழிபோகும்
மேலைச் சுழிபிட் டமருமேட வேதக் கலையின் மணிநாவை
மேவிக்கூடு முயிர்தானும் மேலைப் பிடரி வழிசேரும். (11)

கலித்துறை.

ஈராறு பன்னிரண் டீரெட்டு மாகி யியங்குமனம்
பூராய மீரெட்டுப் பன்னிரண் டாகிப் பொதுச்சுழியில்
ஆரா தனையுமிட் டண்ணாக்க முத்தி யமுதருந்தச்
சாராது மட்டிகட் காகாது யோக சமாதியுமே. (12)

வேறு.

ஆதியுப்பு விண்ணினில் அனாதியுப்பு வேலையில்
ஆழிநீரை யுண்டுகெற்ப மாயிருந்த கொண்டலும்
சோதியற்ற நாளில்மேனி சூலுளைந்து மாரியாய்த்
தூறும்வேலை தன்னில்மின்னல் மீறுமம்ப ரத்தினில்
மோதியக்கி னிக்கடாவி வீழுமங்கி யுடன்சுடர்
மூலவிந்து பூமியூடு தானிறங்கு மேலுவாச்
சாதியத்த லத்தினிற்ச மாதிகொண்ட தையனே
சத்தியுள் ளடக்கமாகித் தானிருக்கு மீசனே. (13)

வேறு.

ஈசனென்றுமுடி வன்னியாதிசுழி யேகமானபரி பூரணம்
இந்துகூடுமொரு மீனமேஷமதி லேயிருக்குமவை போதுமோ
வாசமுண்டுபுவி யாளர்தானுமறி யாதிருந்தச மாதியாய்
வாடிடாதுமின் மலர்ந்திடாதுநிற மாவதென்னவயி டூரியம்
தேசமென்றுவுவ ரானபிங்கலைசி வந்தமேனியடி சூரியன்
தேவிமூலவெளி யேமலர்ந்துநிறை திங்கள்சித்திரையின் மாதமாம்
ஊசிமேலமதி னின்றுஆழியினு றைந்தெழுந்திடுகல் லுப்பினும்
ஓதுமங்கைநடு வானதென்றுமிடை யுண்மையானபனிக் காலமே.

வேறு.

காலமறிந்தவை தோணுரேதலை கிழேநுழைந்தது காணூரே
காரியவேலையி னூடாரேசிலை யாகவளர்ந்தது பாராரே
மேலையெழுந்திடும் பூநீரேஉர மாகமுடிந்திடும் நீராலே
மேகஜலப்பனசை கூராலேமதி பீஜமதென்பர்கள் பெரியோர்கள்
மூலசுயம்பிவை மூன்றுலேவளர் மூவுலகும்பொருள் தானாகி
மோனமிருந்திடு மொன்றுமேலசுவர் கோடிவிளைந்தது மண்மேலே
ஆலமருந்து மரன் பூவையறி யாமலலைந்து சுடுந்தோஷி
ஆசைமிகுந்து சடந்தோறுமுய ராவிபுலம்பி மெலிந்தாரே. (15)

வேறு.

மெலிவிலா[illegible] வாயுவங்கி யப்புமூன்று முப்பதாம்
வெளியில்ரெண்டு குழியிலொன்று மீனமேஷ மல்லவோ
செலவிலாத நாதநீரில் மேவியாடுந் தீட்சையாம்
தேவதேவ நீயலாது செம்பொனென்ன அற்பமாம்
மலைவிலாத யோகமுமெய்ஞ் ஞானமுங்கை மேல்வரும்
மாசிலாத சூதராஜன் வானிலோடி யேவரும்
அலையின்மீதி லண்டபிண்ட[illegible]தமேக நீரடா
அங்கிகண்ட வழலையுப்பு ஆதியான குருவிதே. (16)

கலித்துறை.

குருக்காணு மென்நந்தி மூந்நூற்றிற் சொல்லிய கோசரத்தைப்
பெருக்காற்றி னிற்சென்று தானே மிதக்கின்ற பேதையுப்பை
உருக்காக வுங்கட்டி நீரான வூசரத் தோடுணரில்
கருக்காணும் வேதைக்கு மால்சவுக் காரத்தைக் கண்டிலரே.(17)

வேறு.

பாருலகத் தினிலிரும்பு பசும்பொன்ன தாகும்பின்
பாகா தாலே
வேருலகத் தினிலுடலைப் பொய்யெனவெண் றறிந்துமேல்
மேவான் ஞானி

மாருதத்திற் சலமசையு மசைவதுபோ லாகாய
மசையா தென்றே
பேருரைக்கொ ணுதறிவிற் கவ்வறிவே சேருமல்லாற்
பேதி யாதே. (18)

வேறு.

ஆதிபின் விலாசமிவை யானஜெகம் யாவும்
பேதசம தாயறிஞர் பேசுவது முண்டோ
சாதிபல வானவுயிர் சாகரம தென்றே
நீதிமொழி யானபதி னெட்டுமிவை முற்றே. (19)

ஊர்வசீ இரத்தினச் சுருக்கம் ௰௯.

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வத்திராயிருப்பைச் சேர்ந்த தம்பிபட்டி கிருஷ்ணபுரம் மாரிமுத்துத் தேவர் குமாரர் அங்கப்பத் தேவரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

நாற்பத்தோராவது:

# பதஞ்சலியார் ஞானம் ருச.

## திருப்புகழ்.

காப்பு

நேரிசை வெண்பா.

சீலத் தரும்பொருளைத் தேசோன் மயப்பொழிவை
மூலத் தசைவை முதற்குருவை—ஞாலமுணர்ந்
துய்ய பதஞ்சலிமுன் போதுந் திருப்புகழ்க்கைங்
கையணிரு பூஞ்சரணே காப்பு.

ஆருதா ரப்பொருளா யைம்புலனாய் வன்கரணக்
கூறாய்க்கான் மூவகையின் கொள்கையாய்ப்—பேறான
வாழிடமூன் றெய்தும் மனோமணியன் பான்மகிமை
சூழும் பதஞ்சலி நூல் சொல்.

தனதனதந்தன தானாதானன
தனதனதந்தன தானாதானன
தனதனதந்தன தானாதானன-தனதான.

பரமமெ னும்பொரு ளேதோகாரணம்
விவரம றிந்தது தானேகூசனை
பழுதுற வெஞ்சலு மாயாபேதமை யுறவாகிப்.

பழகிநி லறந்தபின் வேறேயோர்பொருள்
கருவிலெ ழுந்தது போலேவாய்வது
பரிசறு ளைந்திடு பூதாகாயமு மதுதானே.

கருவிய னந்தமு மீளாவாணவ
மலமிரு கன்மைகண் மேலாய் நால்வகை
கபடவ லங்கிர்த யோனிபேதமு மெழுகூறாய்க்.

கரையிலை யென்பது சீவான்மாவுகள்
பசுசல னஞ்சமை யாதியாகம
கலகமெ னுந்திரை யூடேமூழ்கினர் சதிமாறி.

இரவிகள் சந்திரர் வானுகாயமும்
யுகமுடி வுஞ்சன னுதிமாயையி
விதுசக சந்தனி லேனேபூருவ மிதுகாணும்.

இகபரம் ரண்டென வேதானோதிய
விருவகை யுந்தள லாமேஞானமு
மிதுவது வுஞ்சரி தானேமோனமு மினிதாகும்.

சருகுகி ழங்குகள் பானீர்காய்கனி
மிகவும ருந்துவர் வீண்வாய்பேசியெ
தடியின்மு ரண்டினர் தாமோர்வேணியின் முடிவேதோ.

சருவம வன்செய ருனேயாகிய
குருவையு ணர்ந்தவர் தாமேயோகிக
டவேயும றிந்தவர் பேசார்ஞானிக டவியாரே. (1)

உருகிர தஞ்சனி யாதேநாமொரு
கவனமி டும்படி தானேசாரணே
யுபரச முஞ்செய கீரேயாகவு மறிவோமென்.

றுலகின் மடங்களி லோபாகாமிய
ரிவரைவ ணங்குவ ரியார்காண்மூடர்க
ளுறுதிசி வன்சொ லுமி யோகாதீதமு முரையாரே.

புருவமெ னுஞ்சுழி யூடேசார்வையும்
வலமிட முஞ்செய வேதான்வாயுவை
புரையுள தெங்கணும் மேலேதேடிய பதியோராய்.

புசியமு தஞ்சிர சூடேநாடியி
லொழுகிவ ரும்படி யாமேதாரணே
புரியுமி தம்பெற வேதான்ரேசக புணர்வாகும்.

இருதய முஞ்சில நாளாயூகையு
ளுருகிம கிழ்ந்திட வேதோவாதனே
யிடர்கட விர்ந்திட லாமேஞானமு மிதுதானே.

இமையவர் கஞ்சன்மு ராரீயீசனு
மறலியும் விண்குடி போனூராசையி
லெவர்களி ருந்தவர் கூறுய்காதைகள் வழுவாமல்.

சொருபம றிந்தவ ரியாரோ பார்மிசை
சருவப ரம்பரை யோகிநீயறி
சுகருமி னந்தெரி யாதேபோயினர் தொலைதூரம்.

சுடுசுடு நெஞ்சையு னூலேதீமையை
விடுவிடு வைம்புல னூலாமாயையை
துறைதுறை சங்கைசெ யாதேநீடிய வியலீதே. (2

தனதன் தத்தன தான தந்தன
தனதன தத்தன தான தந்தன
தனதன தத்தன தான தானன-தனதான.

இடைகலை யிற்றிகழ் சோடசந்தனை
ரவிகலை யிற்புக லாகவுஞ்செய
விருகலை யைத்திசை மாறிமாறியெ யிதுபோல.

இசையுமி தக்ஷிணை பூரகந்தனி
விருதொகை தப்பிவி டாமனின்றிடு
வெழில்புரு வச்சுழி மூலநாடியி விருநீயே.

இனியச தூர்த்திவி ரோசனஞ்செய
நவமிநி லைப்படு பாதிகங்குவி
விருவிழி யுச்சியை மேவிப்பாரினி யிருசாமம்.

இடமுவி தற்பைவி தாயகந்தனி
லுழைசரு மத்துயின் மீதிலங்கிரு
யமனுமெ திர்த்துவ ராதனூயமு மிதுவாமே.

அடருமன த்தைவி டாதையைம்பொறி
விடையமு னைப்பழி போடவந்திடு
மதிகப சிக்கொரு நேரமேநுக ரரைகாலாய்;

அறுசுவை யிச்சைகொ ளாதகன்றிடு
புகையிலை நித்திரை கோபமுந்தளு
யபினிக ளைக்குடி யாதைலாகிரி விடவேணும்.

# யோக ஞான சாஸ்திரத் திரட்டு.

அருளும்வி திப்படி வாசியுஞ்செல
தசமிதி னத்துப வாசமும்புரி
யமவசி யிற்செய சூதமேகொளு செயநீரில்.

அறியும்வ கைப்படி தானேமுன்பிறை
பிறகுமி தைச்சரி பாருபின்பிறை
யமுதமு னக்கது தாரகாதிய மடையோகம்.

பிடரிவ ழிச்சிவ யோகமுஞ்செல
வுரகப டத்தடி மீதினுந்துயில்
பிசகிலை யப்பிர மாதியேந்திர முயிர்மூலம்.

பிரணவ வுட்குழி வாசல்வந்திடு
வொருதுளை யற்புத மாமுவந்திடு
பிடரிக டுக்கணி னாலெகூடுவ ததுமோனம்.

பிரமமு னிக்குப தேசமுஞ்சொன
வதிகம கத்துவ மானவிந்தையை
பிரபல முக்கிய மானநூல்களி னுரைகூறும்.

பிறவிவி னைத்துய ரானமன்பதை
யிதையறி யச்செய லேதுசங்க்ரமம்
பெரியகு ருத்தொட ராவைநாடொரு நிழல்போல.

சடையைவ ளர்த்ததி னாலுமங்கென
தலையைவ ழித்ததி னாலுமங்கென
சருகுபு சித்ததி லேதுசாதகம் விருதாவே.

சமயம தப்பரி யாசமிண்டர்க
னாடலழி யச்சில வாதியம்புவர்
தனமது கைக்கொள்வ தாகவோதுவர் சிலபேர்கள்.

தவமது பெற்றவர் போலவம்பல
குகைமலை யுச்சியில் வாசமுஞ்செய்வர்
தனியெயி ருப்பதி லேதுகாரிய மிதுமாயை.

தனையுணர் தற்பரம மானவன்பர்க
ளிகபர மெய்ப்பொரு ளானநண்டர்கள்
சலனம னத்துயர் மேவிடாரவர் தவியாரே. (3)

தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன தனதான.

மூலத்தானம தாகியநாவிதழ்
மேலிட்டேயொரு நாகசிகாமணி
மூவெட்டாறுவி நாடியிலேகதிர் முனையாகி.

மோதிப்பார்விதி யாலருகேயொர்சு
வாதிட்டானவி சேடனுமாகவெ
மோகப்போகவி ராகசையோகமு முனையாகும்.

மூடிப்பேசுவ தேதுநிராமணி
பூரத்தாமரை மாதவனுய்வட
மூவிப்பாயவி லேதுயில்கார ண முகிலாகும்.

மூவர்க்கேமுத லானவநாகத
கோணத்தீயுட லாகியதேவனை
மோசக்கோபம ணுமயனுகவே முழுநாளும்.

மேலைக்கோபுர வாயின்மகேசுர
பூதத்தோட று கோணமுளாகிய
வீசிக்காலையு லாவியுலாவியெ விளையாடும்.

வேதத்தேமுடி வானசதாசிவ
பீடத்தேகுடி யாகவுமாயையில்
வீருக்கேயுரு வாகியவேபல விதமாகும்.

மேருக்கிழுடி மேலுமுலாவிய
ஞானச்சேர்வையை மோனமுதாயதி
மேவிப்பார்மத யானைவிநாயகன் வெளியாவான்.

வேடத்தாள்வட மாகியபேர்சிலர்
கூடிக்கூடிவி சாரணையேசெய்து
வீணுக்கர்கம நூல்சகமாயையில் வீழாமல்.

காலத்தேகரி சாலையிலேயரி
தானைச்சூரண மோடுறவேசெய்து
காறிக்காறியு ணுவினிலேயிடு கபமாறும்.

காலுற்றேவரு மூலிதபிராணயம்
மேவிப்பாணியி லூடுறமேவெசெய
காலக்கூர்மல மாறிடுமேவெகு கலையாறும்.

காடிப்பானேயி லூறும்வல்லாரையை
நீளத்தேசல தாரையிலேவிடு
காமச்சூடொடு தாபதின்சூடது காணாதே.

காரிட்டேவரு மாலையிலேயறு
கேழுக்கோர்மிள கோர்பலமாயது
காயச்சால்குடி நீரினிலேகொளு கனல்போகும்.

தூலப்பூஷண மாகவுமேசெய
சூதச்சாரணை மூலிகையேயுணு
சூதத்தேசெய நீரினிலேகொளு சுழிபாரு.

சோமப்பால்ரச மேல்பெரிதானது
தோணிக்கோ ருறை யானதிமேலிரு
தூளித்தூலய மூசியுமேகொளு சொருகாதே.

தூரத்தேயலே யாதையுமாயிர
மேவிட்டோடிய வேம்பினிலேகரு
சோதித்தேபம வாசியிலேகொளு துயர்போகும்.

தோகைக்கேயர ஞருரையேசெய்த
தியானத்தேயிரு ஞானவிநோதசு
வாமிக்கேயுற வாகுகையேகுரு துணையாமே. (4)

தனதனதத்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன-தனதான

அகரவெழுத்துச் சரிக்கவேமதி
யமுதரசத்தைப் புசட்டுமேசிவ
வருளிலுருப்பெற் றிருக்கலாமுத லசையாமல்.

அறிவைவெளிக்குட் செலுத்தவேபர
வணுவொளியுற்றுச் சொலிக்குமாமொழி
யதுகுறியொத்துத் தனித்ததேசுதி யருண்ஞானம்.